# மித்ரா டைம்ஸ்

தமிழ் & ஆங்கிலம் மாத இதழ்

MITRA TIMES - Tamil & English Monthly

| | | | |
|---|---|---|---|
| மலர்: VII இதழ்: 7 | டிசம்பர் 2021 | ஆண்டு சந்தா ரூ. 240/- | விலை ரூ. 20/- |
| Vol.: VII Issue: 7 | December 2021 | Annual Subscription Rs. 240/- | Price Rs. 20 |




விதைப்பதே முளைக்கும்
- ஆசிரியர் கடிதம்

ஏழைகளின் மருத்துவர்
-மன்னை மக்கள் புகழஞ்சலி!

தேகத்துக்கு
இனியது
இயற்கைத்தேன்

தஞ்சையில் ஒரு
இளம் அப்துல்கலாம்

ஒமிக்ரான் வைரஸ்
அதிக பாதிப்புகளை ஏற்படுத்துமா?



# "HOW TO PROTECT CHILDREN'S FROM WINTER SEASON"

We all love the winter season, but when it gets extremely cold outside, life gets tough for us. During winters, all you would want to do is stay cooped up in the house and if you are a new mom, you would want to protect your baby from the harsh winds blowing outside. As your baby's immune system will be still developing, he will be susceptible to colds and infections and that is bound to leave you worried. But by taking preventive measures, you can keep your little one warm and safe. Read on to learn about newborn baby care during the winter season.

Newborn babies require continued care and support until they reach a point where they can sustain themselves on their own in a better way. But they need extra care during the winter season as a drop in temperature triggers various processes within the body to keep itself safe and the vital organs functioning well. Most of the energy is then used to maintain the body temperature appropriately, diverting it from other areas. This is where the immunity of the body takes a hit as well. During winters, the microbes and viruses thrive and find hosts to infect. Combined with decreased immunity, babies become an easy target for diseases and their chances of falling ill increase.

Most of the infections that occur in winter have strong symptoms, which make them easier to be spotted. If your baby has an infection, you will notice the following symptoms in him:

He may cough severely and might even vomit Your baby may have trouble breathing; he may gasp or take small breat He may make wheezing sounds while sleeping or even after coughing.

He may have pain in the chest due to i flamed lungs as a result of a respiratory infection He may have a runny nose, fever, cough, with a headache He may feel fatigued.

Winter proof your child's skin Moisturize your child's face, lips, hands & feet immediately after bathing and before going to bed. Further, apply sunscreen to protect your child's sensitive skin from harmful ultraviolet rays of the sun before she goes out to play during daytime.

Encourage your child to wash hands Teach your child to wash hands with soap and warm water after coughing or sneezing, before meals and snacks, and after coming back from outside. Also, instruct her to keep her hands away from her face and sneeze or cough into a tissue or her elbows to prevent getting affected from cold, flu and infections.

**Promote healthy eating** Make sure that your child eats healthy. Include all the necessary vitamins, minerals and antioxidants in her diet, which are essential to boost the body's defense mechanism. Provide your child with food items rich in Vitamin C like citrus fruits, tomatoes, melons, papayas and green leafy vegetables and also include foods rich in water content, such as spring onions, broccoli, cauliflower, peppermint, ginger etc. For snacks, provide her with dried fruits such as cashew nuts, almonds and pistachios that are full of nutrients.

**Keep your child hydrated** Keep her hydrated during winters and ensure that she drinks plenty of lukewarm water throughout the day, especially before going out for play. Also, serve a wide variety of hot soups such as tomato soup, spinach soup, mixed vegetable soup, etc., along with evening snacks.

**Encourage her to exercise regularly** Regular exercise is one of the best ways to boost your child's immune system and keep her away from cold and other illnesses. So, explain to her the benefits exercising regularly and how it can make her feel more energetic during cold winter days. Ask her and encourage her to practice the exercises she likes such as walking, jogging, riding a bicycle or skipping rope.

Have fun in the park During sunny days in the winters, take your child to the nearest park for a walk. Encourage her to go for bicycle rides along with her friends and play outdoor games. Also, conduct racing competitions for them such as sack race, relay race etc., to boost their energy level.

Encourage your child to play inside At times, extreme cold weather restricts outdoor play activities. So, on a cold winter day, encourage her to play indoor games with her friends. Provide her with brain games, board games, art & craft activities, puzzles, etc., so as to keep her engaged in activities rather than having her sit in front of the T.V. all day.



Concept by:
S.SHRUTHI LAKSHMI
B.Sc., (psychology)

ஆசிரியர் கடிதம்

# விதைப்பதே முளைக்கும்

அன்புடையீர் வணக்கம்.

நவம்பர் மாதம் முழுவதும் கடும் மழை வெள்ள பாதிப்பு ஆகியவற்றால் தமிழகமே தத்தளித்துக் கொண்டிருக்கிறது. குறிப்பாக சென்னை மாநகரம் வெள்ளத்தால் மிதக்கிறது. முறைப்படி அவ்வப்போது உரிய நடவடிக்கைகள் எடுத்து இருந்தால் இந்த அளவுக்கு ஏற்பட்டிருக்காது என்று நடுநிலையாளர்கள் கருத்து தெரிவிக்கிறார்கள். எனவே வரும் காலங்களில் இதுபோன்ற நிலை வராமல் இருக்க அரசும், அரசு நிர்வாகமும், பொது மக்களும் ஒன்றிணைந்து ஒரு ஏற்பாட்டைச் செய்தால் அது வருங்கால சமுதாயத்திற்கு பெரும் உதவியாக இருக்கும்.

ஒருவர் தனது ஏழு வயது பையனை விளையாட்டு அரங்கிற்கு அழைத்துச் சென்றார், நுழைவுச் சீட்டின் விலையை கவுண்டரில் கேட்டறிந்தார். பெரியவர்கள் என்றால் இருபது ரூபாய் ஆறு வயதிற்கு கீழ் உள்ள சிறுவர்களுக்குப் பத்து ரூபாய் என்று தெரிவித்தார்கள். தந்தை இரண்டு பெரியவருக்கான நுழைவு சீட்டை தருமாறு கவுண்டரில் கேட்டார்.

கவுண்டரில் இருந்த டிக்கெட் கொடுக்கும் கிளார்க் பையனின் உயரத்தைப் பார்த்துவிட்டு ஒரு முழு டிக்கட் ஒரு அரை டிக்கட் வாங்கினால் போதும் என்றார். பையனுக்கு ஆறு வயது என்று கூறினால் ஒன்றரை டிக்கட் வாங்கினால் போதும் என்றார். இல்லை என்றால் இரண்டு வாங்க வேண்டும் என்றார்.

அந்த பையனின் தந்தையோ இரண்டு முழு டிக்கட் கொடுங்கள் என்றார். நீங்கள் பையனுக்கு ஆறு வயது என்று சொல்லியிருந்தால் பத்து ரூபாய் மிச்சமாகுமே ஏன் இரண்டு முழு டிக்கட் வாங்குகிறீர்கள் ஒன்றரை டிக்கெட் வாங்கியிருக்கலாமே என்று டிக்கெட் வழங்கியவர் கேட்டார்.

அதற்கு அந்த தந்தையோ பத்து ரூபாய் மிச்சம் தான். ஆனால் என் பையன் நம்ம அப்பா பத்து ரூபாய்க்காக பொய் சொல்லுகிறார் என்று எண்ணுவான் என்றார்.

பணம் சம்பாதித்துவிடலாம் ஆனால் அப்பாவை பற்றிய எண்ணம் தவறாக அவன் மனதில் பதிந்துவிட்டால் அது நீங்காத தழும்பாக மாறிவிடும். அவனும் பொய் சொல்வதில் தவறேதுமில்லை என்று எண்ணத்தொடங்குவான், லாபம் கிடைக்குமானால் பொய் சொல்வது கூடத் தவறில்லை என்ற தவறான எண்ணம் அவன் மனதில் வேருன்றி விடும் எனவே வேண்டாம் என்றார்.



என் எண்ணம்

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை இப்படி இருக்க வேண்டும் அப்படி இருக்க வேண்டும் என்று சொல்லாமல் தாங்கள் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டினால் தான் குழந்தைகளும் அவ்வாறே அப் பண்புகளை வளர்த்துக் கொள்ளுவார்கள். நல்ல எண்ணங்களை விதைப்போம்.

ஓர் அழகிய பள்ளி அது. எட்டாம் வகுப்பில் அறிவியல் ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார்.

“என்ன பிள்ளைகளா, சில நாட்களுக்கு முன்னால நம்ம பள்ளித் தோட்டத்தில விதை விதைச்சீங்களே, தினமும் தண்ணீர் ஊற்றிப் பராமரித்து வர்றீங்களா?”

”ஆமாம் சார், தினமும் தண்ணி ஊற்றி நல்லா கவனிச்சிட்டு வர்றோம் சார்”

“சரி, அப்படின்னா அந்தச் செடிகள் எல்லாம் எப்படி வளர்ந்திருக்குன்னு இப்போ போய் பார்த்திட்டு வரலாமா?”

“சரிங்க சார்”

“தருண், நீ என்ன விதை விதைச்ச?”

“கத்தரி விதை சார்” “சரி, மத்தவங்க என்ன விதை விதைச்சீங்கன்னு சொல்லுங்க”

தக்காளி, அவரை, பூசணி, பீர்க்கங்காய், சுரைக்காய், வெண்டை, பாகல், புடலை, முள்ளங்கி, பீன்ஸ், அரைக்கீரை என்று ஒவ்வொரு மாணவரும் அவர்கள் விதைத்ததைச் சொன்னார்கள்.

“சரி, இப்ப உங்க செடி, கொடிகள் எப்படி வளர்ந்திருக்குன்னு பாருங்க” எல்லாச் செடி, கொடிகளும் மிக அழகாக வளர்ந்து வருவதைப் பார்த்து மாணவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

“தருண் நீ விதைச்ச கத்தரி விதையில இருந்துதானே இந்த தக்காளிச் செடி முளைச்சது?” தருண் சிரித்துக்கொண்டே, “என்ன சார், என்னை சோதிச்சுப் பார்க்கணும்னுதானே இப்படிக் கேக்கறீங்க , அது எப்படி சார் கத்தரி விதையில இருந்து தக்காளிச் செடி முளைக்கும்? என்ன விதை விதைக்கறோமோ அந்தச் செடிதான் சார் முளைக்கும்”

“என்ன பிள்ளைகளா, தருண் சொல்வது சரிதானா?”

“ஆமாம் சார், என்ன விதை விதைக்கறோமோ அந்த விதையிலிருந்து அதற்குரிய செடிதான் முளைக்கும் சார்”

“உண்மைதான் குழந்தைகளே, எதை விதைக்கிறோமோ அதையே அறுவடை செய்கிறோம். அதுபோல நம்முடைய மனதில் என்ன மாதிரியான எண்ணங்களை விதைக்கிறோமோ அவைதான் நமக்குத் திரும்பக் கிடைக்கும். இதையும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். நமது மனதில் நல்ல எண்ணங்களை வைத்திருந்தால் நல்லவற்றை அறுவடை செய்யலாம். மாறாக, கெட்ட எண்ணங்களை வைத்திருந்தால் கெட்டவையே நமக்குக் கிடைக்கும். அதனால் எப்பொழுதும் நாம் நல்லதை மட்டுமே சிந்திக்க வேண்டும். நல்லவற்றை மட்டுமே செய்ய வேண்டும். குழந்தைகளே, இனி நீங்கள் கெட்டதை விலக்கி நல்லதை மட்டுமே உங்கள் மனதில் விதைக்க வேண்டும். சரி தானே?”

“விதைப்பதுதான் கிடைக்கும் என்பது தெரிந்ததுதான் சார். அதேபோன்று நல்ல எண்ணங்களைக் கொண்டிருந்தால் மட்டுமே நல்லவற்றைப் பெற முடியும் என்பதையும் இப்போது புரிந்துகொண்டோம் சார்” என்று ஒருசேரக் கூறினர்.

நம் எண்ணங்கள் சிறப்பாய் இருந்தால் அதனால் உருவாகும் விளைவுகளும் மிகச் சிறப்பாய் அமையும்.

– எம்.எஸ்.மூர்த்தி

# மித்ரா டைம்ஸ்

மித்ரா - 07 டிசம்பர் 2021 டைம்ஸ்-7

அச்சிட்டு வெளியிடுபவர் & ஆசிரியர்

**எம்.எஸ்.மூர்த்தி**

நிர்வாக ஆசிரியர்

திருமதி. **சுஜாதா மூர்த்தி**

செய்தி ஆசிரியர்

மணவூர் **கி.விடாரண்யம்** பி.ஏ.,பி.ஜி.எல்.,
9789837069, 9962177865

**சிறப்பு ஆலோசகர்**

**கலைமாமணி டாக்டர் நடிகர் பூவிலங்கு மோகன்**

**நிர்வாக ஆசிரியர்**

**ஆர்.குணசேகரன்**

**செய்தியாளர்கள்**

**ஆர்.அரிபாபு, ஆர்.முரளி, பி.வினோத்**

செய்தி இணை ஆசிரியர்கள்

கவிஞர் **சுகந்தீனா**

**துடுப்பதி ரகுநாதன்**

இணையதள செய்தியாளர்

**எஸ்.சுருதிலட்சுமி** பி.எஸ்சி.,

சட்ட ஆலோசகர்

**வி.என்.பிரசாத்** எம்.ஏ.,பி.எல்.,

வடிவமைப்பு

**vidapublications@gmail.com**

விளம்பரம், சந்தா தொடர்புக்கு

**சி.இளவரசி**

044-23743007 / 8

**அலுவலகம்:**

**001, இன்ஞ்சக்கல் பிளாக், சித்ரா அவென்யூ,
9, சூளைமேடு ஹைரோடு, சென்னை - 94.
தொடர்பு: 044-2374 4661, 23743 007/8**

**82485 85067**

mitratimes2015@gmail.com

www.mitratimes.com


# உள்ளே...




7 ஓமிக்ரான் வைரஸ் அதிக பாதிப்புகளை ஏற்படுத்துமா?



11 ஏழைகளின் மருத்துவர் -மன்னை மக்கள் புகழஞ்சலி!



17 தஞ்சையில் ஒரு அப்துல்கலாம்



31 நாடு எங்கே போய் கொண்டிருக்கிறது? -துடுப்பதி ரகுநாதன்



35 சோற்றில் கை வைக்கும் முன் சற்றே யோசி!



43 மறைந்து வரும் தாவர மன்மத ராசாக்கள்! மனித குல பேரிழப்புகள்!

**முனைவர். பா. ராம் மனோகர்.**

# அப்பாவின் புகழுக்கு மகுடம் சூட்டும் மகள்

உன்னால் முடியும் பெண்ணே!

**த**ன்னுடைய படைப்பாற்றலால் துவண்டு கிடந்த நாடகக் கலையை தூக்கிப் பிடித்தவர் கோமல் சுவாமிநாதன். அவரது தண்ணீர் தண்ணீர் நாடகம் ஒன்று போதும் சமூகத்தின் மீது அவருக்குள்ள அக்கறையை வெளிப்படுத்த. அத்தகைய புகழ்பெற்ற நாடக படைப்புலக சிற்பி கோமல் சுவாமிநாதனின் புகழுக்கு மகுடம் சூட்டும் விதமாக அவரது மகள் தாரிணி இருந்து வருகிறார்.

தனது தனது தந்தையின் நாடகங்களை மீண்டும் மேடையில் கொண்டுவந்து நாடகக் கலைக்கு புத்துயிர் ஊட்டும் பணியில் தன்னை முழுமையாக ஒப்படைத்துக் கொண்ட சாதனைப் பெண்மணி தாரணி.கோமல் சுவாமிநாதனுக்கு மகளாக பிறந்ததே எனது பாக்கியமாக நினைக்கிறேன். கலைத்துறையில் அவரிடம் நான் கற்றது என்னவெனில் அவர் வாழ்க்கையே பாடம். எனது எட்டு வயதிலிருந்தே தமிழ் மொழி மற்றும் அல்லாது பிரென்ச், ஜெர்மன் என்று இன்னும் பிற மொழிகளின் நாடகத்தை பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது.

நாடகம் என்பது ஒரு பொழுதுபோக்கு மட்டுமல்லாது அதிலிருந்து நிறைய தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் எவ்வளவோ இருக்கிறது. மகாத்மா காந்தி அவர்களே அரிச்சந்திர நாடகத்தை பார்த்துதான் தன்னோட கொள்கையை தொடர்ந்தாராம். நாடகம் பார்க்கும் போது நம்மை அறியாமலேயே அது பாடமாக அமைகிறது.

சரித்திரம், சமூகம், த்ரில்லர், நகைச்சுவை இப்படி எல்லா நாடகத்தையும் பார்த்ததனால் இப்போழுது ஒரு நாடகத்துறையில் நுழையும் போது புதிதாக இல்லை. அப்பா நிறைய நாடகத்தை பற்றி சொல்லி கேட்டிருக்கேன். கேட்டு கேட்டு வளர்ந்ததனால் எதுவும் புதிதாக இல்லை. இவையெல்லாம் தான் அவரிடமிருந்து நான் பெற்றதும், கற்றதும். அவரது வாழ்க்கையே எங்களுக்கு பாடம். வாழ்க்கையில் வரும் பிரச்னைகளுக்கு நிதானமாக எப்படி சரிசெய்ய வேண்டும் என்று கற்றுக் கொடுத்திருக்கிறார்.

தனித்து பிரகாசிக்க வேண்டும் எந்த முயற்சியோ, திட்டமும் தீட்டவில்லை. எனக்கு பிடித்த விஷயம் மீடியாத்துறை. அப்படித்தான் வானொலியில் என்னுடைய கேரியரை ஆரம்பித்தேன். வங்கியில் பணி புரிந்தது ஒரு அனுபவம்தான். எதையுமே உள்ளே சென்று ஆராய்ந்து கற்றுக் கொள்ளும் ஆர்வம் இருந்தது. அப்படித்தான் சாப்ட்வேர் என்றால் என்ன என்பதை தெரிந்து கொண்டு அதில் ஒரு ரவுண்டு வந்தது ஒரு நல்ல பயணம்.





நாடகத்துறையில் சம்பாதித்த பணத்தில்தான் அப்பா எங்களை வளர்த்தார். என்னுடைய அடுத்தக்கட்ட வாழ்க்கையை மனசுக்கு மிகவும் நெருக்கமான துறையான நாடகத்துறையை தேர்ந்தெடுத்து உள்ளே நுழைந்தேன்.

எனக்கு சிறுவயதிலிருந்தே சிறுகதைகள் மீது ஆர்வம் அதிகம். தமிழ் இலக்கியத்தில் சிறுகதைகள் கொட்டிக் கிடக்கின்றன. நாம் தனியாக கதையை யோசிக்க வேண்டாம். நான் ஒரு சிறுகதையை படிக்கும் போதே இதை நாடகமாக கொண்டு வந்தால் யார் நடித்தால் நன்றாக இருக்கும் என்றெல்லாம் யோசிக்க ஆரம்பிப்பேன். அந்த மாதிரியான கதைகளை தேர்ந்தெடுத்தோம்.

சூடாமணியின் கதைகள், சுஜாதாவின் ஐந்து சிறுகதைகள். இவையெல்லாம் நாடகங்கள் ஆக்கினோம். இவையெல்லாம் பெரும் வரவேற்பை பெற்றது. இலக்கியததில் ஈடுபாடு அதிகம் என்பதனாலும், சிறுவயதில் ஐம்பெரும் காப்பியங்கள் படித்ததாலும் கொரானா லாக்டவுன் சமயத்தில் இது மிகவும் உபயோகமாக இருந்தது. ஆம் மேடையில் நாடகங்கள் நடத்த முடியாது. சில விஷயங்களை பொதுமக்களுக்கு ஐந்தாறு நிமிடங்களில் சொல்லி விடலாம் என்று கருதி குறும்படங்களாக தயாரித்தோம். இலக்கியங்களிலிருந்தும், சுஜாதாவின் சிறுகதைகளிலிருந்தும் மொபைல் கேமராவின் துணையோடு மட்டும் செய்தோம். மிகப்பெறும் வரவேற்பையும், ஊக்கத்தையும், உற்சாகத்தையும் பெற்றுத்தந்தது. நகைச்சுவை நாடகங்கள், குடும்ப நாடகங்கள் நிறைய பேர் நடத்தி வருகின்றனர். நாம் வித்தியாசமாக ஏதாவது செய்ய வேண்டும் என்பதற்காகவே இலக்கிய நாடகங்களை தேர்ந்தெடுத்தோம்.

ஒரு நாடகத்துறையில் இயக்குனராக, எழுத்தாளராக, நடிகராக இருக்கிறோமோ என்று பலதரப்பட்ட விஷயங்கள் இருக்கிறது. 15க்கும் மேற்பட்டோரை ஒரு குழுவாக

அமைத்து அவர்களை வெளியூர்களுக்கு அழைத்து சென்று வருவது மிகப்பெரிய சவால். அனைவரும் தங்கள் விருப்பத்திற்காகத்தான் வந்திருக்கிறார்கள். பணஈட்டும் நோக்கத்திற்காகவோ, லாபத்திற்காகவோ நாடகத்துறையில் இல்லை. அவர்களை அதிகாரமாக நடத்த முடியாது. இவையெல்லாவற்றையும் தாண்டி மக்களிடையே நல்ல படியாக நாடகங்களை சமர்ப்பிப்பது என்பது ஆணாக இருந்தாலும், சரி பெண்ணாக இருந்தாலும் சரி சிரமம்தான். தொழில்நுட்பத்துறையில் அனைவரும் ஆணாக இருந்தாலும் மிகவும் உறுதுணையாக இருப்பார்கள். இசை, ஆடை, அலங்காரம், நகைகள் இவையெல்லாவற்றையும் ஒன்றினைப்பது ஒரு புராஜெக்ட்டாகத்தான் பார்த்தேன்.

ஐடி துறையில் எப்படி புராஜெக்ட் மானேஜர் எப்படி இருப்பார்களோ அப்படித்தான் நான் இதை பார்த்தேன். ஐடி துறையில் பணிபுரிந்த அனுபவத்தால் இந்த துறையை அட்டவணை போட்டு, கால நேரத்திற்கான ஒதுக்குதலை கடைப்பிடித்து செய்வது மிகப்பெரிய சவால்தான்.

இலக்கிய பிண்ணனிக்கு முக்கிய காரணம் என் தந்தைதான். எந்த புத்தகத்தை தேடி போனதில்லை. காரணம் எங்கள் வீடே புத்தகச்சாலை. கம்பராமாயணம், பதினென் கீழ்க்கணக்கு நூல்கள், இலக்கிய நூல்கள், இன்றைய தற்கால நூல்கள், பெரிய பெரிய எழுத்தாளர்கள் எழுதிய நூல்கள் அனைத்துமே இருந்தது. ஆகவே சிறு வயதிலிருந்தே நிறைய புத்தகங்கள் படித்திருக்கேன். இதே ஆர்வத்தில் இலக்கியத்தை மேலே படித்து தெரிந்து கொள்ள வேண்டும் என்று எம்.ஏ. தமிழ் இலக்கியம் படித்தேன்.

இலக்கியத்தை எளிமைப்படுத்தி நாடகமாக சொன்னால் மக்களுக்கு புரியும். அந்த காலத்தில் பவளக்கொடி, வள்ளித்திருமணம் ஆகிய நாடகங்களை புராணங்களிலிருந்துதான் நடத்தியுள்ளனர். நாம் நினைக்கும் விஷயம் சீக்கிரமாகவே நாடக வடிவில் மக்களிடையே சென்று சேர்கிறது. சுதந்திர போராட்டக்காலத்தில் நாடகங்கள் பெரிதும் உறுதுணையாக இருந்தது என்பது நாம் அறிந்ததே. வேறு எந்த கலை வடிவத்தைக் காட்டிலும் மக்களிடையே கொண்டு சேர்க்க நாடகம் என்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

எனது அப்பாவுக்கு மரியாதை செய்ய வேண்டும் என்பதற்காக ஆரம்பித்ததுதான் கோமல் தியேட்டர். அந்த வகையில் "தண்ணீர் தண்ணீர்" நாடகம் மிகவும் பிரபலம். 35 வருடங்களுக்கு பிறகும் அந்த நாடகத்தை மறு அரங்கேற்றம் செய்து மக்களிடையே கொண்டு சேர்த்தது மிகப்பெரிய விஷயம். என்னுடைய கனவு, ஆசை என்னவென்றால் இளம் தலைமுறையினரை நாடகத்துறைக்கு வரவைக்க வேண்டும். அதற்கான கருவை கொடுக்க வேண்டும். அந்த வகையில் சுஜாதாவின் ஐந்து கதைகளை நாடகமாக நடத்தும் போது மக்கள் பெரிய ஆர்வம் காட்டினர்.


கல்லூரி மாணவர்களிலிருந்து பள்ளி மாணவர்கள் வரை இந்த துறைக்கு வரவேண்டும். நாடகக் கலைக்கு இது பெரிய உந்துதலாக இருக்கும். டிஜிட்டல் அல்லாது ஒப்பனை செய்து கொண்டு மேடையில் நின்று எதிரில் மக்களிடையே கிடைக்கும் கைத்தட்டலை பெற வேண்டும். நிழல் கலையை பார்த்து ரசிப்பதற்கு ஒரு சிறிய கல்லாக நான் இருந்தால் அதுவே என் வாழ்க்கையின் வெற்றியாக கருதுகிறேன்.

1971ம் ஆண்டு ஆரம்பித்த கோமல் சுவாமிநாதன் அவர்களால் தொடங்கப்பட்ட இந்த நாடகத்துறை இந்த ஆண்டுடன் ஐம்பதாண்டுகள் ஆகிறது. இந்த ஆண்டு விழாவிற்காக அவர் எழுதிய சிறந்த நாடகங்களை மேடையேற்ற வேண்டும் என்று எண்ணியுள்ளோம். அந்த வகையில் மனோரமா ஆச்சிக்காகவே எழுதப்பட்டதுதான் "என் வீடு என் கணவன் என் குழந்தை" என்ற நாடகத்தை அக்டோபர் மாதத்திலிருந்து நடத்தி வருகிறோம்.

தொடர்ந்து இலக்கியத்தரம் வாய்ந்த நாவல்களையும், கதைகளையும் மேடையேற்றி நாடகக்கலையை ஒரு பயனுள்ளதாக்க வேண்டும் என்று பாடுபட்டுவரும் தாரிணியின் முயற்சிகள் வெற்றி பெற மித்ரா டைம்ஸ் சார்பில் வாழ்த்துகிறோம்.

– சுஜாதா மூர்த்தி





# ஒமிக்ரான் வைரஸ் அதிக பாதிப்புகளை ஏற்படுத்துமா?

**கொ**ரோனாவைத் தொடர்ந்து உலக நாடுகள் பலவும் தற்போது ஒமிக்ரான் என்ற சொல்லைக் கேட்டாலே அச்சமடைந்து வருகின்றன. தென்னாப்பிரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய வகை மற்றும் வீரியமிக்க வைரசுக்கு ஒமிக்ரான் என்று விஞ் ஞானிகள் பெயர் வைத்துள்ளனர்.

கொரோனா பாதிப்பை ஏற்படுத்தும் SARS-CoV-2 வைரஸின் புதிய வேரியன்ட் என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. இதன் மருத்துவ பெயர் B.1.1.529 என்று அறிவியலாளர்கள் கூறியுள்ளனர். இப்படி பொதுவாக அழைக்க முடியாது என்பதால் இதற்கு ஒமிக்ரான் என்று உலக சுகாதார நிறுவனம் பெயர் சூட்டியுள்ளது. ஒமிக்ரான் என்பது கிரேக்க எழுத்துக்களில் ஒன்றாகும். ஆல்ஃபா, பீட்டா, காமா என தொடங்கும் கிரேக்க எழுத்துக்களில், 15 வது எழுத்தாக ஓமைக்ரான் (Oo) வருகிறது.

தமிழில் இதனை ஒமிக்ரான் என்று சிலர் அழைத்தாலும், ஓமைக்ரான் என்பதுதான் சரியானதாக இருக்கும். முன்னதாக இந்தியாவில் உருமாற்றம் அடைந்த கொரோனா வைரஸுக்கு மருத்துவ பெயராக ஙி.1.617.2 என்பது மருத்துவப் பெயர். இப்படி அழைப்பதில் சிரமங்கள் இருக்கும் என்பதால், அதனை டெல்டா என்று அறிவியலாளர்கள் அழைத்தனர். டெல்டா என்பது கிரேக்க எழுத்துக்களில் வரும் 4வது எழுத்தாகும்.

கடந்த வாரம்தான் ஓமைக்ரான் வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும், அவை என்ன மாதிரியான பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பது உறுதி செய்யப்படவில்லை. இருப்பினும், அதிகமுறை உருமாற்றம் அடைவதால் இவை நிச்சயம் மோசமான





விளைவுகளை ஏற்படுத்தும் என்று உலக சுகாதார நிறுவனத்தின் தொழில்நுட்ப பிரிவு தலைவர் டாக்டர். மரியா வான் கெர்கோ கூறியுள்ளார்.

இந்நிலையில் ஓமைக்ரான் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில் அனைத்து நாடுகளும் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கியுள்ளன. தென்னாப்பிரிக்காவில் கண்டறியப்பட்டிருக்கும் இந்த ஒமைக்ரான் வகை வைரசால் உலக மக்கள் பீதியில் ஆழ்ந்துள்ளனர். இந்த புதிய வைரஸ் இந்தியாவுக்குள் பரவி விடாமல் தடுக்க மத்திய அரசு அனைத்து முன் எச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

ஒமிக்ரான் வகை வைரஸை தடுக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் தீவிர கண்காணிப்பில் ஈடுபட வேண்டும் என்று மக்கள் நல்வாழ்வு துறை முதன்மை செயலாளர் ராதாகிருஷ்ணன் அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், விமான நிலைய இயக்குனர்கள் சென்னை மாநகராட்சி ஆணையர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு கடிதம் அனுப்பி உள்ளார். அதில், கொரோனா தற்போது கட்டுக்குள் வந்து விட்டதாக பலரும் அலட்சியமாக முக கவசம் அணியாமல் செல்வதை பார்க்க முடிகிறது. இது மிகப்பெரிய தவறாகும். எந்த ஒரு வைரசும் நம்மை தாக்காமல் இருக்க வேண்டுமானால் முக கவசம்தான் பாதுகாக்கும். எனவே கண்டிப்பாக அனைவரும் முக கவசம் அணிய வேண்டும். தற்போது தென் ஆப்பிரிக்காவில் புதியதாக உருமாறி வந்துள்ள ஒமிக்ரான் வைரஸ் பல நாடுகளில் வேகமாக பரவி விட்டது. இன்னும் இந்தியாவிற்குள் நுழையவில்லை. ஆனாலும் முன் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. ஏனென்றால் அது போன்ற வீரியமிக்க வைரஸ் பரவினால் அதன் எதிர்விளைவுகள் மிக அதிகமான பாதிப்பை ஏற்படுத்தும். அதிக உயிரிழப்பு கூட உருவாக்கி விடும். இதை கருத்தில் கொண்டு கொரோனா காலத்தில் நாம் மேற்கொண்ட அனைத்து முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை இப்போதும் ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டும். இப்போதுள்ள சூழலில் கொரோனாவுக்குதான் தடுப்பூசி உள்ளது என்கிறார் சுகாதாரச் செயலாளர்.

**– கே.கலியபெருமாள் (K.P)**

# கண்ணுக்கு தெரியாத எதிரிகள்



மனித வாழ்வின் நோக்கமே மகிழ்வான வாழ்வைப் பேணுவதுதான். நாம் உழைப்பதும், ஓடுவதும், நடப்பதும், பேசுவதும், எழுதுவதும், விளையாடுவதும் இது போன்ற அனைத்து செயல்படுகளும் நாம் மகிழ்வதற்காக மட்டும் தான்...

நான் கவலையாக இருப்பதற்காகதான் உழைக்கப் போகின்றேன். நான் அழுவதற்காகதான் விளையாடப் போகின்றேன் என்று யாரும் சொல்வது கிடையாது...

எனவே!, சூரிய ஒளியை நோக்கித்தான் செடிகள், கொடிகள், மரங்கள் செல்லும்...

அதுபோலதான் மனித வாழ்வு என்பது உன்னதமானது. அது மகிழ்வை நோக்கி மட்டும்தான் செல்லும்.

மகிழ்வை அடைய பல வழிகள் உள்ளன...

“தேவையற்றவையின் மீது கவனம் வேண்டாம்...!”

மனித சிந்தனையானது சற்று வேற்றுமையானது. தேவையின் மீது கவனத்தை வைப்பதை விட தேவையற்றவைகளின் மீது தான் நாம் அதிக கவனம் வைக்கின்றோம்...

உதாரணமாக!, உங்கள் மனத்தில் யாரைப் பற்றி அதிகமாக சிந்திக்கின்றீர்கள்...? என்ற கேள்விக்கு, எண்பது விழுக்காடு மக்கள் தங்கள் எதிரிகளைப் பற்றிதான் அதிமாக சிந்திகின்றோம் என்று சொல்கிறார்கள்...

நம் அருகில் இருக்கின்றவர்களை, நம்மை நேசிக்கின்ற, நம் வாழ்வைப் பற்றி சிந்திக்கின்றவர்களை நாம் அதிகமாக கண்டு கொள்வதில்லை...

இந்த உண்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நாம் வீட்டில் எது தேவையான



பொருள், எது தேவையற்ற பொருள் என்பதை பிரித்து வைத்தால் கண்டிப்பாக தேவையற்ற பொருட்களின் பட்டியல் தான் அதிமாக இருக்கும்... எனவே!, தேவைற்ற களைகளை அகற்றுவது போல தேவையற்றவையின் மீது உள்ள கவனத்தை அகற்ற முயற்சிப்பது நல்லதே...!

"ஒற்றை இலக்கம் வேண்டாம்...!!"

ஒற்றைச் சிந்தனை, ஒற்றை வாழ்வு முறை, ஒற்றைத் தத்துவம், இது போன்று ஒன்றை மட்டும் நம்பி கொண்டுயிருந்தால், மகிழ்வான வாழ்வு என்பது மிகப்பெரிய கேள்விக் குறியாகத்தான் இருக்கும்...

நட்புகளிடத்தில்தான் மகிழ்ச்சி இருக்கின்றது என்று நம்பி உறவுகளில் உள்ள



மகிழ்வை இழந்து விடுகின்றோம்...

எனவே!, மகிழ்வு என்பது பல நபர்களிடத்தில் இருக்கின்றது. அதனை தேடிக் கண்டு பிடித்து மகிழ்வோம்...

"கவலை வேண்டாம்...!!"

கவலைதான் அனைத்து நோய்களுக்கும் காரணம். இறந்த காலத்தை நினைத்து எதிர்கால வாழ்வை பற்றிய திட்டமில்லாமல் வாழ்கின்றோம்... எதிர்கால கவலையை நினைத்து நிகழ்கால மகிழ்வை இழந்து விடுகின்றோம்... விடையில்லாத வினாக்களும், தீர்வுகளில்லா சிக்கல்களும், தொடர்ச்சியான துன்பங்களும், மீள முடியாத சருக்கல்களும், கண்ணுக்கு தெரிந்த எதிரிகளை விட, கண்ணுக்கு தெரியாத எதிரிகளும் நம் வாழ்வில் வந்துவிட்டுதான் செல்வார்கள்...!

இன்றைய நிகழ்காலத்தில் மகிழ்ச்சி தராத ஒன்றை உங்கள் எதிர்காலத்திற்கு மனபாரத்தோடு கடத்தி செல்ல எத்தனிக்காமல் அதை புறக்கணித்து விட்டு கடந்து செல்லுங்கள்...!! உங்கள் வாழ்க்கை இலகுவானதாகவும் அமைதியானதாகவும் இருக்கும். இதைப் புரிந்து கொள்ளும் மனதில் எந்த வருத்தமும் நிலைக்காது. மகிழ்ச்சி திளைக்கும்...!!!



**– வைத்தியநாதன்**



# ஏழைகளின் மருத்துவர்
## -மன்னை மக்கள் புகழஞ்சலி!

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் ஏழை, எளிய மக்களுக்கு மிகவும் குறைந்த கட்டணத்திலும் இலவசமாகவும் மருத்துவம் பார்த்து வந்த மனிதநேய மருத்துவர் அசோக்குமார்.

சமீபத்தில் இவர் மறைந்த செய்தி ஏழைகளுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

குறைந்தது ரூ300வரை வாங்காமல் மருத்துவம் பார்க்கும் மருத்துவர்களே அதிகம்.



ஆனால் டாக்டர் அசோக்குமார் இப்பகுதி மக்களுக்கு மருத்துவம் பார்த்து வந்த இவர், கடந்த ஆண்டு வரையில் 20 ரூபாய்தான் கட்டணம் வாங்கியவர் அதை 30ரூபாய் ஆக்கினார்.

மன்னார்குடி எம்.ஜி.ஆர் நகர் பகுதியில் மருத்துவமனை நடத்தி வந்தவர் டாக்டர் அசோக்குமார். அறுவைசிகிச்சை செய்வதில் மிகவும் நிபுணத்துவம் பெற்ற டாக்டர் அசோக்குமார், தனது மருத்துவமனையில் காய்ச்சல், இருமல், வயிற்றுவலி போன்ற பாதிப்புகளுக்கு பொது மருத்துவமும் பார்த்து வந்தார்.

ஏராளமான பெண்களுக்கு இவரது மருத்துவமனையில் பிரசவம் நடைபெறுவதென்பது இயல்பான, வாடிக்கையான நிகழ்வாக இருந்தது என்று டாக்டர் அசோக்குமார் அவர்கள் மறைவு அன்று சாரை சாரையாக திரண்ட மக்கள் கதறி அழுதபோது சொன்ன வார்த்தைகளை ஊடகங்களில் கண்டதும் மனதை உலுக்கியது.

தினமும் காலையிலிருந்து இரவு வரையிலும் நூற்றுக்கும் அதிமானவர்களுக்கு மருத்துவம்



பார்த்தாலும்கூட, கொஞ்சமும் சலிப்படைய மாட்டார் டாக்டர் அசோக்குமார். சிரித்த முகத்துடனே நோயாளிகளை அணுகுவார்.

மன்னார்குடி மக்கள் இவரை '**மனிதநேய மருத்துவர்**' என்றே பாசத்தோடு அழைத்து வந்தார்கள்.

லயன்ஸ் சங்கத்தில் இணைந்து, கண் தானம் செய்வதற்கு அதிக அளவில் விழிப்புணர்வை ஏற்படுத்தினார். தனது மருத்துவமனை பணியாளர்களுக்கு உரிய பயிற்சியளித்து, மன்னார்குடி பகுதியில் கண்தானம் பெற்றுக்கொடுக்கும் பணியையும் மேற்கொண்டார்.

"We lost a Very Precious and VERY VERY Rare Gem today in Mannargudi

A human being beyond compare...A doctor with hands and heart of Gold.





Rest in peace Doctor Ashok Kumar "என்று மன்னார்குடி

சட்டமன்ற உறுப்பினர் டி.ஆர்.பி.ராஜா ட்விட்டரில் பதிவு செய்துள்ளார்.

ஜாதி மதங்களை கடந்து அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு மன்னார்குடி நகர வளர்ச்சிக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்ட மனித நேய மருத்துவர் அசோக்குமார் மறைவு மருத்துவ உலகுக்கு மட்டுமல்ல மனித குலத்திற்கே பேரிழப்பு.



–புலவர் மா.கணபதி



# தேகத்துக்கு இனியது இயற்கைத் தேன்!

**தே**னின் வகைகள் கொம்புத்தேன், மலைத்தேன், புற்றுத்தேன், மரப்பொந்து தேன், மனைத்தேன் ஆகும்.சிலர் பெட்டிகளிலும் வளர்ப்பது உண்டு. இவ்வாறு இயற்கையில் தயாராகும் தேகத்துக்கு நல்லது.

தேனில் 70 வகையான உடலுக்கு ஏற்ற சத்துக்கள் உள்ளன. வைட்டமின்களும் தேனில் அடைங்கியுள்ளன. சித்த மருத்துவ நூல்களில் பித்தம், வாந்தி, கபம் சம்பந்தமான நோய்கள், வாயுத் தொல்லை, ரத்தத்தில் உள்ள பிரச்சனைகளை நீக்கி ரத்தத்தை சுத்தம் செய்கிறது.

மருந்துகளை தேன் கலந்து கொடுப்பதால் ஜீரனப்பாதையில் வெகு விரைவில் மருந்து உறிஞ்சப்பட்டு விடுகிறது. ரத்த ஓட்டத்தில் மருந்து விரைவில் செயல் புரியும். தேனில் எளிமையாக ஜீரணமாகும் சர்க்கரை இருப்பதால் கடும் உழைப்பாளிகள் - விளையாட்டு வீரர்கள் இடை இடையே தேன் பருகினாலே உற்சாகமாக உதவுகிறது.





தேனில் உள்ள குளுக்கோஸ் சத்து சிறிய ரத்த நாளங்களைச் சீராக்கும். இதனால் இதய நோய் வெகுவாக குறைய வாய்ப்பு உள்ளது.

தேனுடன் இஞ்சி பேரிச்சம்பழம் ( விதை நீக்கியது ) இரண்டையும் ஊறவைத்து சாப்பிட்டு வர நோய் எதிர்ப்பு சக்தி உண்டாகும்.

குழந்தைகளுக்கு தினசரி காலையில் 5 மிலி அளவு தேன் கொடுத்து வர நோய் எதிர்ப்பு சக்தி உண்டாகும்.

சளி பிடிப்பது குறையும்.

பச்சைத்தண்ணீரில் தினசரி ஒரு தேக்கரண்டி தேன் கலந்து பருகி வந்தால் 3 மாதத்தில் நோஞ்சான் உடம்பு சற்று சதைப்பிடிப்பு உண்டாகும். நீர்த் தாரையில் உள்ள புண்களை ஆற்றும் வயிற்று வலியையும் தாகத்தையும் அடக்கும்.

கருஞ்சீரகம் கொஞ்சம் எடுத்து கசாயமாக வைத்து அதில் ஒரு தேக்கரண்டி தேனை கலக்கி குடிக்க கீழ்வாத நோய் போகும்.

வெள்ளைக் குங்குலியம் கல்லுப்பு இரண்டையும் சிறிதளவு தேன் விட்டு குழம்பு பதமாக அரைத்து காதில் சில துளி விட்டு பஞ்சு கொண்டு அடைத்து வைக்கக் காது வலி குணமாகும். காதில் சீழ் வருதல் குணமாகும்.

தேன் சிறிது நவச்சராம் கலந்து அரைத்து கட்டிகளுக்கு பற்று போட குணமாகும் தேன் தொடர்ந்து சாப்பிட்டு வர ரத்தத்தில் சிவப்பு அணுக்கள் எண்ணிக்கை அதிகரிக்கிறது.

நரம்பு சம்பந்தமான நோய் உள்ளவர்கள் இரவு படுக்கச் செல்லும் முன் எலும்மிச்சம் ஒன்று பிழிந்து சாறுடன் ஒரு தம்ளர்






இயற்கை தேன் மதுரை.
கிளைகள் : சென்னை, கோயம்புத்தூர், பரமக்குடி.
தொடர்புக்கு : எம்.ஒசமா 90437 59529, 99445 06122
பிறந்த குழந்தை முதல் வயதானவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள், விளையாட்டு வீரர்கள், நோயுற்றவர்கள் அனைவரும் சாப்பிடக்கூடிய ஒரே உணவு!
மலைத்தேன்:
அடையுடன் பிழிந்து எடுக்கப்படும் தேன் மகரந்தம் மிகுந்து காணப்படும் இரத்த சிவப்பணுக்களை அதிகப்படுத்தும் குழந்தைகள் சாப்பிட ஏற்றது.
முருங்கைத் தேன்:
முருங்கைத் தோட்டத்தில் தேனீப் பெட்டிகள் வைத்து முருங்கைப் பூக்களில் இருந்து தேனீக்கள் சேகரிக்கும் தேன். ஆண், பெண் மலட்டுத் தன்மையை போக்கவல்லது. நரம்பு தளர்ச்சியை சரி செய்யும்.
பலமலர் தேன்:
எல்லா வகையான பூக்களிலிருந்தும் தேனீக்கள் சேகரிப்பதால் மருத்துவ குணம் சற்று அதிகமாக இருக்கும். மருந்துடன் சேர்த்து சாப்பிடுவதற்கு ஏற்ற தேன்.
அத்திப்பழத் தேன்:
இது மதிப்புகூட்டப்பட்ட தேன். சுத்தமான தேனில் உலர்ந்த அத்திப்பழத்தை சேர்த்து தயார் செய்யப்படுகிறது. இது மூல வியாதியை சரி செய்யும். விந்தணுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும்.
உடல் எடை அதிகரிக்க:
இளம் சூடான பாலில் மலைத்தேனை கலந்து காலை இரவு சாப்பிடவும்.
உடல் எடை குறைய:
இளம் சூடான நீரில் இலவங்கப்பட்டை பொடி கலந்த தேன் மற்றும் எலும்மிச்சை சாறு கலந்து காலை இரவு சாப்பிடவும்.
வெளியூர் வாடிக்கையாளர்களுக்கு ஆர்டர்கள் கூரியர் மூலம் அனுப்பி வைக்கப்படும்
எங்களிடம் அனைத்து வகையான தேன்களும் மொத்தம் மற்றும் சில்லரை விலைக்கு கிடைக்கும்.
தொடர்புக்கு : 90437 59529, 99445 06122


தண்ணீருடன் இரண்டு கரண்டி தேனும் கலந்து சாப்பிட்டால் மேற்கண்ட நோய் குணமாகும்.



ஆரஞ்சு பழச்சாறுடன் தேன் கலந்து சாப்பிட தூக்கம் நன்றாக வரும்.

பாலில் கோதுமை மாவை கலந்து காய்ச்சி பிறகு லேசான சூடு இருக்கும் போது சிறிது தேனை கலந்து சாப்பிடலாம். நோயாளிகளுக்கு இது ஆரோக்கியத்தை தரும்.

வேப்பிலைச்சாற்றில் தேன் கலந்து சாப்பிட தோல் நோய் குணமாகும்.தேங்காய் பாலுடன் தேன் கலந்து சாப்பிட வாய்ப்புண்கள் குடல் புண் ஆறும். தக்காளிச்சாறுடன் தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் கல்லீரல் பலப்படும். கேரட்டுடன் தேன் கலந்து சாப்பிட ரத்த சோகை குணமாகும்.

– ஆர்.ஹரிபாபு

# வள்ளுவரை வரைந்தவர் வாழ்க்கையை துறந்தார்!

**பே**ருந்துகளில், பள்ளிகளில், அரசு அலுவலகங்களில் என திருவள்ளுவர் உருவம் எங்கும் வியாபித்திருக்கிறது.

ஆனால், இப்போது நாம் காணும், இந்த திருவள்ளுவரின் உருவத்தை வரைய 40 ஆண்டுகள் ஆகியிருக்கிறது, என்று சொன்னால் ஆச்சர்யமாக இருக்கிறதல்லவா? ஆனால், அது தான் உண்மை!

ராஜாஜி வசித்த சேலம் மாவட்டம் காமாட்சிப்பட்டி என்ற ஊரில் தான்,17.12.1908 இல் பிறந்தார் கே.ஆர். வேணுகோபால் சர்மா. இவர் முதலில் "சுதேச டிராமா பார்ட்டி" என்ற பெயரில் நாடகங்களை நடத்திவந்தார். பம்பாய்க்குச் சென்று, அங்கு பிரபல திரைப்பட இயக்குநரான ஸ்ரீபகவான் தாதவிடம் சினிமாவைக் கற்றுக்கொண்டார். சென்னைக்கு திரும்பி 'கிரீன் பிக்சர்ஸ்' என்ற திரைப்பட நிறுவனத்தைத் துவக்கி, நாத விஜயம், தெய்வீகம், மை சன் ஆகிய படங்களைத் தயாரித்து இயக்கினார். சில படங்களிலும் நடித்தார்.இவருக்குச் சிறு வயதிலேயே, நோய்த் தாக்கம் இருந்தது. இதனால், வீட்டில் இருந்தபடியே, கல்வி, ஓவியம், இசை, நாட்டியம் என பல கலைகளைக் கற்றுத் தேர்ந்தார்.



இவருக்கு மிகவும் பிடித்தது, ஓவியம் வரைவது தான். ராஜாஜியுடன் நட்பாகப் பழகியதால், 1937ஆம் ஆண்டு, சேலத்திற்கு காந்தி வந்த போது, காந்தியை தத்ரூபமாக வரைந்து, அவருக்குப் பரிசாக ஓவியத்தை வழங்கினார்.அந்தப் படத்தை, காந்தி மேடையிலேயே ஏலம் விட்டார்.

வேணு கோபால் சர்மாவுக்கு தனது 12ஆவது வயதில் இருந்தே, திருவள்ளுவர் எப்படி இருந்திருப்பார்? என்ற எண்ணம் தோன்றியது. பல நூற்றுக் கணக்கான ஓவியங்கள் வரைந்தார். எதிலும், அவருக்குப் பிடித்தமான, திருவள்ளுவர் என்று நம்பும்படியான ஓவியம் அமையவில்லை.



இதனைச் சவாலாக எடுத்துக் கொண்டு, 40 ஆண்டுகள் ஆயிரக் கணக்கில் ஓவியங்களை வரைந்து தள்ளினார். ஆனால், எதிலும் அவருக்கு முழுத் திருப்தி ஏற்படவில்லை. பாவேந்தர் பாரதிதாசன் இவரது நண்பர்.அவரைச் சந்தித்து ஆலோசனை கேட்டார். அவர் சில தமிழ் அமைப்புகளைச் சொல்லி, "அவர்களிடம் ஆலோசனை கேளுங்கள்.அதன் அடிப்படையில் உருவத்தைத் தீட்டுங்கள். உங்களால் நிச்சயம் முடியும்" என்று நம்பிக்கை ஊட்டினார்.

வேணுகோபால் சர்மா நேரம் கிடைத்த போதெல்லாம்

வள்ளுவரை வரைந்து பார்த்துக்கொண்டே இருந்தார்.இறுதியில் விலை உயர்ந்த தூரிகைகள், வர்ணங்கள், ஓவியக்கலைக்கு உதவும் நுண்ணிய உபகரணங்களைப் பயன்படுத்தி வள்ளுவருக்கு முழு உருவம் கொடுத்தார். அண்ணா, பக்தவத்சலம், காமராஜ், ஜீவா, கக்கன் என பலரும் வேணுகோபால் சர்மா இல்லத்திற்குச் சென்று வரைந்த திருவள்ளுவர் உருவத்தைக் கண்டு மெய்சிலிர்த்தனர்.



மத்திய, மாநில அரசுகளால் இந்த திருவள்ளுவர் திருவுருவம் அங்கீகரிக்கப்பட்ட ஓவியமாக பின்னர் அறிவிக்கப்பட்டது. 1959இல் வெளியிடப்பட்ட திருவள்ளுவர் உருவப்படமானது, 1964மார்ச் 23இல் தமிழக சட்டசபையில் அன்றைய துணை ஜனாதிபதி ஜாகிர் உசேன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. 1967இல் ஆட்சிப் பொறுப்பேற்ற மறைந்த முதலமைச்சர் அண்ணா திருவள்ளுவரின் உருவப்படத்தை அனைத்து அரசு அலுவலகங்களிலும் இடம்பெறச் செய்ய அரசாணை பிறப்பித்தார். 40 ஆண்டு காலமாக தனது சிந்தனையால் சர்மா வரைந்த வள்ளுவர் ஓவியம் 60 ஆண்டுகளை நெருங்கியுள்ள நிலையில்மணி விழாவாக அறிவிக்க வேண்டும் என அவரது இளைய மகன் எழுத்தாளர், ஆவணப்பட இயக்குனர் வே. ஸ்ரீராம் சர்மா கோரிக்கை விடுத்துள்ளார்.

'திருவள்ளுவரை ஈன்றெடுத்த தமிழ்த்தாய்க்கும் உருவம் தர வேண்டும்' என சாண்டில்யன், தமிழ்வாணன், அறிஞர் அண்ணா மூவரும் வேணுகோபால் சர்மாவிடம் பின்னர் கோரிக்கை வைத்தார்கள். 'தமிழ்த்தாய் எப்படி இருக்க வேண்டும் என ஏதேனும் குறிப்புகள் இருக்கிறதா அண்ணா?' என அறிஞர் அண்ணாவிடம் சர்மா கேட்க, 'அதை நீங்கதான் கண்டுபிடிக்கணும். உங்களால் முடியும்' என்று ஊக்கப்படுத்தினார் அண்ணா. நீண்ட நாட்கள் குறிப்புகள் கிடைக்கவே இல்லை. மனோன்மணியம் பெ.சுந்தரனார் எழுதிய 'எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே! தமிழணங்கே! உன் சீரிளமைத் திறம்வியந்து...' என்ற வரிகளில்தான் சர்மாவுக்கு சின்னப் பொறி கிடைத்தது. 'சீரிளமைத் திறம்வியந்து' என்றால், தமிழ்த்தாய் இளமைத் தோற்றத்தில் இருக்க வேண்டும் என முடிவுசெய்து, 1959ஆம் ஆண்டு வரையத் தொடங்கி 1979ஆம் ஆண்டு தமிழ்த்தாய் உருவத்தை வரைந்து முடித்தார். 'இந்தத் தமிழ்த்தாய் ஓவியத்தை இப்படி வரைய என்ன காரணம்?' என 19 காரணங்களை அடுக்கி நீண்ட விளக்கமும் தனது டைரியில் எழுதி வைத்திருக்கிறார் அவர்.



வேணுகோபால் சர்மா கடைசியாக வரைந்தது தமிழ்த்தாய் ஓவியம். அதன் பிறகு அவருக்கு பக்கவாதம் வந்துவிட்டது. நல்லவேளை அதற்கு முன்பே, அறிஞர் அண்ணா, முத்துராமலிங்கத் தேவர், காயிதே மில்லத், தியாகப் பிரம்மம், தங்கமயில் முருகன்... எனப் பல அரிய ஓவியங்களை வரைந்துவிட்டார். இவற்றில் திருவள்ளுவர், முத்துராமலிங்கத் தேவர், காயிதே மில்லத்... ஆகிய மூன்று ஓவியங்கள் தமிழ்நாடு சட்டமன்றத்தில் இடம் பெற்று இருக்கின்றன. மீதம் இருக்கும் ஓவியங்களை வரைந்து முடித்து 50 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டன. அவற்றை அவரது குடும்பத்தினர் தவிர வேறு யாரும் பார்த்தது இல்லை. சர்மா பிறந்த டிசம்பர் மாதத்தில் இந்த ஓவியங்களைக் கண்காட்சியாக வைக்கலாம் என முடிவு எடுத்திருக்கிறார்களாம் குடும்பத்தினர்!

திருவள்ளுவருக்காக தனது இளமை வாழ்வையே துறந்தவர் வேணு கோபால் சர்மா! திருவள்ளுவரின் உருவப் படத்தைத் தனது 58வது வயதில் திருப்தியுடன் நிறைவு செய்த பிறகுதான் ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த மல்லிகா என்பவரை திருமணம் செய்து கொண்டார் கே.ஆர். வேணுகோபால் சர்மா என்பது குறிப்பிடத்தக்கது!

**– அம்ரா பாண்டியன்**

# தஞ்சையில் ஒரு அப்துல்கலாம்

தஞ்சை மாவட்டம் மருத்துவக் கல்லூரி ரகுமான் தெருவில் வசித்து வருபவர் 33 வயது நிரம்பிய அமிர்த கணேஷ். மின்னணுவியல் தகவல் தொடர்பில் பொறியியல் படித்து முடித்த இவர், கடந்த 12 ஆண்டுகளாக 600க்கும் மேற்பட்ட கருவிகளைக் கண்டுபிடித்துள்ளார்.

முக்கியமாக, விஷவாயு தாக்கி ஏற்படும் உயிரிழப்புகளைத் தடுப்பதற்கு ஒரு புதிய கருவியைக் கண்டுபிடித்துள்ளார்.

கடந்த 2013 ஆம் ஆண்டில் இருந்து 2018 வரை தமிழகத்தில் மட்டும் 144 பேர் விஷவாயு தாக்கி இறந்து உள்ளனர். பல வருடங்களாகப் பயன்படுத்தாமல் இருக்கும் கிணறு மற்றும் கழிவுநீர்த் தொட்டிகளில் விஷவாயுக்கள் இருக்கும்.

அப்படி இருக்கும் தொட்டிகளில் விஷவாயுக்கள் உள்ளதா என்பதை மேலிருந்தே தெரிந்து கொள்ள ஒரு கருவியைக் கண்டுபிடித்து உள்ளார். இந்தக் கருவி ஒரு குழாயில் இணைக்கப்பட்டு இருக்கும். அதை தொட்டியினுள் விடும் போது அதில் இருக்கும் வாயுக்களில் விஷத் தன்மை இருந்தால் அந்த கருவி உடனடியாக அதிர்வை ஏற்படுத்தி எச்சரிக்கை செய்யும். அதன் பிறகு சக்கர் எனப்படும் கருவி மூலமாக அந்த விஷவாயுவை வெளியேற்றிவிடும்.

சில நேரங்களில் சுத்தம் செய்து கொண்டு இருக்கும் போதே, திடீரென விஷவாயுக்கள் வெளியேறி உயிரிழப்பு ஏற்படுவதும் உண்டு. இதைத் தவிர்க்க விஷவாயுவைக் கண்டறியும் கருவியுடன் கூடிய ஒரு ஹெல்மெட்டைக் கண்டறிந்துள்ளார்.

அந்த ஹெல்மெட்டில் விஷவாயுவைக் கண்டறியும் கருவி, பிராணவாயுவைக் கொடுக்கும் கருவி மற்றும் ஒலியை ஏற்படுத்தி தொட்டிக்குள் இறங்கியவரை எச்சரிக்கும் கருவி உள்ளிட்டவை இருக்கும்.

இதே போல் மேலே இருப்பவர்களுக்குத் தகவல் தெரிவிக்க சிகப்பு விளக்கு மற்றும் ஒலியுடன் கூடிய ஒரு கருவியும் இருக்கும். இதன்மூலம் உள்ளே இருப்பவர் மட்டுமல்லாது வெளியே இருப்பவர்களுக்கும் எச்சரிக்கையை ஏற்படுத்துவதால், விஷவாயு தாக்கி உயிரிழப்பு ஏற்படாத வகையில் முற்றிலும் தடுக்க முடியும்.

இதயத்துடிப்பு அளவு, ரத்த அழுத்தம், உடல் எடை ஆகியவற்றைக் காட்டும் நாற்காலியை இவர் உருவாக்கி உள்ளார். அதில் அமர்ந்தால் ஆரோக்கியம் குறித்த தகவல்களைச் சில வினாடிகளில் அறிந்து கொள்ளலாம்.



மருத்துவ மாணவர்களுக்குக் கண்களில் பொருத்தும் ஒரு கருவி உருவாக்கி உள்ளார்."அறுவை சிகிச்சைக்கான பயிற்சியை துல்லியமாகச் செய்ய இது உதவும்" என்கிறார்.

பெண்கள் பாதுகாப்புக்கு கைக்கடிகாரம் போன்ற ஒரு கருவி வடிவமைப்பு செய்து உள்ளார். இதைப் பெண்கள் அணிய, இயல்பு நிலைக்கு மாறாக எது நடந்தாலும் அருகில் உள்ள காவல் நிலையத்திற்கும், சம்பந்தப்பட்ட பெண்ணின் வீட்டிற்கும் தகவல் அனுப்பி விடும்.உதாரணமாக அந்தப் பெண் பயந்து ஓடினாலோ, யாரிடமாவது சண்டை இட்டாலோ, அலறினாலோ உடனடியாக உதவிக்கரங்கள் நீள இக்கருவி வழிசெய்துவிடும்.

தஞ்சையில், தனியார் கல்லூரியில் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் படிக்கும் சங்கீதா, சவுந்தர்யா, வினோதினி மற்றும் மணிகண்டன் ஆகியோர், இவருடன் இணைந்து, ஆராய்ச்சியில் ஈடுபட்டு மற்றுமொரு பெண்கள் பாதுகாப்பு கருவியை வடிவமைத்துள்ளனர்.



பெண்களிடம் தவறாக ஈடுபடுவோரிடம் இருந்து, பாதுகாத்துக்கொள்ளும் வகையில், புதிய கருவி ஒன்றை உருவாக்கி, அதை, காலணியின் அடிப்பகுதியில் பொருத்தியுள்ளனர். 'ஒயர்லெஸ் ரிசீவர், பேட்டரி, எலக்ட்ரோடு' ஆகியவற்றால், சிறிய அளவிலான கருவியை கண்டுபிடித்துள்ளனர். இது பொருத்தப்பட்ட காலணியை அணிந்து செல்லும்போது, யாரேனும் அத்துமீறலில்ஏற்பட்டால், பெண்ணின் உடலில் ஏற்படும் படபடப்பு அதிகரிப்புக்கு





ஏற்ப, காலணியில் பொருத்தப்பட்டுள்ள கருவி, இயங்கத் துவங்கி விடுகிறது. அதை தொடர்ந்து, 100 மீ.,க்கு கேட்கும் அளவிற்கு, அலாரம் ஒலிப்பதோடு, எதிரியின் மீது காலணியை வைத்தால், 'ஷாக்' அடிக்கும் வகையிலும், கருவி உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும், காலணியில் பொருத்தபட்டுள்ள கருவிக்கு, 'சார்ஜ்' போட வேண்டிய அவசியமில்லை. காலணியை அணிந்து நடக்கும் போதே, 'ரீசார்ஜ்' ஆகும் வகையில், வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த கருவியை மொபைல் போன், வாட்ச் போன்ற பொருட்களிலும் பொருத்தலாம்.

ஹெட்லைட் வெளிச்சத்தில் கண்கள் கூசுவதைத் தவிர்க்க ஒரு சாதனம் கண்டு பிடித்து உள்ளார் அமிர்தா கணேஷ். நமது காரில் இரு சிறு சென்சாரைப் பொருத்தி விட்டால் எதிரில் வரும் வாகன வெளிச்சத்திற்கு ஏற்ப நம் வாகன வெளிச்சமும் கூடும், குறையும்.

மின் அளவுக் குறியீட்டாளர்கள் வீடு வீடாகச் சென்று மின் அளவீட்டை குறிப்பதற்குப் பதிலாக, ஒரு பகுதியிலேயே நின்று, அப்பகுதியில் உள்ள அனைத்து வீடுகளின் மின் அளவைத் துல்லியமாக அளவிடும் கருவியையும் அமிர்த கணேஷ் கண்டுபிடித்துள்ளார். இதனால் சமயத்தில் வீட்டை பூட்டி விட்டு வெளியில் சென்றாலும் மின் அளவு அவர்களால் குறிக்கப்பட்டு விடும். சென்சார் மூலம் நில அளவை செய்யும் சாதனம் கண்டுபிடித்துள்ளார். கலப்படம் கண்டுபிடிக்க ஒரு கருவி. கேமரா போன்ற இக்கருவி முன் மிளகாய்த்தூள் போன்றவற்றை வைத்தால் அசலா நகலா எனக் காட்டி



விடும். கள்ள வாக்கைத் தடுப்பதற்கு ஒரு கருவி.

வாக்களிக்கும் எந்திரத்தில் சின்னத்திற்கு நேராக பட்டன் வைப்பதற்குப் பதிலாக கைரேகை பதியும் கருவியை வைத்து விட்டால் போதும், கள்ள வாக்காளரை கையும் களவுமாகப் பிடித்து விடலாம்."எனது ஆய்வுகளுக்கு கேசவன், மூர்த்தி, கார்த்தி, ஜெயக்கு "ஆனால் அவற்றுக்கு உரிய அங்கீகாரம் பெற நான்முயலவில்லை. காரணம் அதற்கான வழிமுறைகளும் வசதிகளும் என்னிடம் இல்லை.

"ஆனால் நாங்கள் கண்டுபிடித்த ஒரு கருவி இந்திய ராணுவத்துக்கு உதவியாக இருக்கிறது என்பதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. இதுவரை ரஷ்யாவிலிருந்து கோடிக்கணக்கான ரூபாய் செலவில் பெறப்பட்ட அந்தத் தொழில்நுட்பத்தைச் சில லட்சங்கள் மட்டுமே செலவழித்து நாங்கள் உருவாக்கிக் கொடுத்தோம். நமது ராணுவத்தில் ராக்கெட் லாஞ்சரை துல்லியமாகக் குறிபார்ப்பதற்கு உதவுகிறது அந்தக் கருவி"என்று சொல்கிறார் அமிர்த கணேஷ்

"நான் சன்மானமோ சம்பளமோ எதிர்பார்க்க வில்லை. இதுவரை கண்டு பிடித்த கருவிகளையும், அதன் தொழில்நுட்பங்களையும் அரசுக்கு விட்டுத்தரத் தயாராக இருக்கிறேன். மக்களுக்கான அன்றாடப் பயன்பாட்டுச் சாதனங்களை மேம்பட்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி எளிதாக்குவதே என் வாழ்நாள் லட்சியம்" என்று சொல்லும் அமிர்த கணேஷ். கருவிகள் கண்டுபிடிப்புகள் குறித்து 2ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை உள்ள மாணவ, மாணவிகளுக்கு வகுப்புகள் எடுத்து வருகிறார். இதற்காகக் கட்டணம் ஏதும் வாங்குவது இல்லை.

இது மட்டுமல்லாது இது போன்று மேலும் பல பொருட்களையும் கருவிகளையும் கண்டுபிடித்துள்ள கண்டு பிடித்து வருகிற இளம் விஞ்ஞானி, அமிர்த கணேஷின் கண்டுபிடிப்புகளுக்கு மத்திய, மாநில அரசுகள் உரிய முறையில் ஊக்கமும் செயல்வடிவமும் ஆதரவும் அளித்தால், புதிய இந்தியா என்ற அனைவரின் கனவும் கூடிய விரைவில் நனவாகும்!

**– ஜெய சுபா**

**தொலைபேசி எண்:99431 20025**

# பிறருக்கு உழைக்கும் அதிசய மனிதர்!



பந்தல் போட்ட வீட்டில் குழாய் கட்டி திரைப்படப் பாடல்கள் ஒலித்துக் கொண்டிருக்கிறது. உறவினர்கள் வருகை தந்து கொண்டிருக்கிறார்கள். பாளையங்கோட்டை அருகிலுள்ள வீரவநல்லூர் கிராமம். உறவினர்களோடே பத்து வயதுப் பையன் ஒருவன் யாருக்கும் தெரியாமல் உள்ளே நுழைய முயற்சிக்கிறான். ஆனால் அதை அந்த வீட்டில் விசேஷம் நடத்தும் பெரியவர் பார்த்துவிடுகிறார்.

“அழையாத விருந்தாளியாடா? உன்னை யார் இங்கே வெத்தல பாக்கு வச்சி அழைச்சா? வெளியிலே போடா நாயே”

என்று சொல்லி ஓடியபடியே வந்து அவன் கழுத்தைப் பிடித்துத் தள்ளி விடுகிறார். சிறுவயதிலேயே தந்தையை இழந்த அந்தச் சிறுவன் கூலி வேலைக்குச் சென்ற தாயின் சொற்ப வருமானத்தில் தான் கஷ்டப்பட்டு பத்தாம் வகுப்பு வரை படித்தான். அவன் இப்படி அவமானப் படுத்தப்படுவது முதல் முறை அல்ல. அந்த கிராமத்தில் எந்த வீட்டில் விசேஷ நிகழ்ச்சி நடந்தாலும், அழைக்காமல் முதல் ஆளாகச் சென்று விடுவான். சாப்பாட்டிற்காகத் தான் வந்துள்ளான் என்பதைத் தெரிந்து கொண்டு அவனை விரட்டிவிடுவார்கள்.

துரத்தியடித்த பசி பத்தாம் வகுப்பு படித்து முடித்தவுடன் எந்த வேலையும் செய்ய அவனை மாற்றியிருந்தது. ஆனால் தரத்தான் யாரும் தயாராகயில்லை. ஆனாலும் சிறு சிறு வேலைகள் செய்து அம்மாவுக்கு உதவி வந்தான்.

பின்னர் ஒரு கட்டத்தில் புகைப்படத் தொழில் நுட்பம் கற்று அந்தத் தொழிலில் இறங்கிவிட்டான். ஆனால் தான் பட்ட துயரம் அவமானங்கள் அவனை வேறு ஒரு மனிதனாக இப்போது மாற்றி இருந்தது.

எங்கே துயரம் என்றாலும் மனம் பொறுக்காமல் உதவத் துடிப்பான். ஆனால் அதற்கேற்ற பணவசதி இல்லாமல் சற்றே கூனிக்குறுகி அடங்கிப் போவான். “பணமிருக்கும் மனிதரிடம் மனம் இருப்பதில்லை.மனமிருக்கும் மனிதரிடம் பணம் இருப்பதில்லை.” இதில் இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தவர் தான் இதுவரை நீங்கள் படித்த வாழ்வுக்குச் சொந்தக்காரரான பாப்புராஜ்.



அதற்காக சும்மா இருந்துவிட முடியுமா? தன் உடலே தனக்கு உதவி என்று முடிவு செய்து செயலில் இறங்கி,அன்று தொடங்கி இன்று வரை ஏழை எளிய மக்களுக்கு உதவி வருகிறார் பாப்புராஜ்.

இந்தியாவில் எந்தப் பகுதியில் இயற்கைப் பேரிடர் ஏற்பட்டு மக்கள் பாதிப்பு அடைந்தாலும் தன் உடலை வருத்தி வித்தியாசமான முயற்சிகளை பாளையங்கோட்டை சாந்தி நகரில் வசித்து வரும் புகைப்படக் கலைஞர் பா.பாப்புராஜ் கடந்த பல ஆண்டுகளாக மேற்கொண்டு வருகிறார்.

குஜராத் பூகம்பம், சுனாமி பேரழிவு, இலங்கைத் தமிழர் மறுவாழ்வுக்காக செருப்பு துடைத்து நிதி திரட்டி அளித்தவர் இவர். தானே புயல் பாதிப்பின்போது திருநெல்வேலியில் கார்களை சுத்தம் செய்து நிதி திரட்டினார். ஒடிசா புயல் வெள்ள பாதிப்பின்போது வெள்ள நிவாரண நிதி திரட்ட ட விற்றிருக்கிறார். கஜா புயல் பாதிப்பில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அளிக்க திருநெல்வேலியில் உள்ள ஒவ்வொரு கல்லூரி வாசலிலும் அமர்ந்து மாணவர்களின் காலணிகளை சுத்தம் செய்து நிதி திரட்டி அனுப்பி இருந்தார். அடுத்து கரோனா முதல் அலையால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள சமூகத்தின் பல்வேறு தரப்பு மக்களுக்கும் உதவும் சேவையை தொடர்ந்து மேற்கொண்டார்.

“எனக்கு மாத வருமானம் 6 ஆயிரம் முதல் 10 ஆயிரம் ரூபாய் கிடைக்கும். அதில் ஒரு பகுதியை ஏழைகளுக்கு உதவ எடுத்து வைத்துவிடுவேன். ஆண்டுக்கு ஒரு முறை மாற்றுத்திறனாளிகளுக்கு என்னால் முடிந்த உபகரணங்களை வாங்கி வழங்கி வருகிறேன்.

“மற்றவர்களிடம் நிதி பெற்று உதவுவதை விட நம்முடைய உழைப்பால் கிடைக்கும் வருமானத்தை இயலாதவர்களுக்குக் கொடுத்து உதவி செய்ய வேண்டும். நம்முடைய உழைப்பால் கிடைக்கும் வருமானத்தை இயலாதவர்களுக்குக் கொடுத்து உதவி செய்ய வேண்டும் என்பது என்னுடைய நோக்கம்.”என்று சொல்லும் பாப்புராஜ் கரோனா காலமான இப்போது ஒரு புகைப்படக் கலைஞராக வறுமையில் வாடிக் கொண்டிருக்கிறார். ஆனால் உதவுகிற எண்ணம் மட்டும் இவரிடமிருந்து நீக்கம் பெறவே இல்லை.

பாளையங்கோட்டை செந்தில் தியேட்டர் எதிரில் குடிசையில் வசிக்கும் குடை ரிப்பேர், போஸ்டர் ஒட்டுதல் போன்ற வேலைகள் செய்து வந்த ஒரு குடும்பம் பல நாட்கள் பசியால் வாடுவதைக் கண்ட இவர், வீட்டுக்கு வந்து தன் மனைவி பீனா, குழந்தைகளிடம் சொல்லி வருத்தப்பட்டிருக்கிறார். பள்ளியில் படித்து வரும் 12 வயது அவிலா, 10 வயது நிதின் இருவரும் தங்கள் உண்டியலில் சேர்த்த பணத்தை உடைத்து அதிலிருந்த ரூபாய் 1270ஐ அந்தக் குடும்பத்திற்குக் கொடுத்து உதவி இருக்கிறார்கள்

கரோனா பெருந்தொற்று பலரது வாழ்வாதாரத்தையும், வாழ்க்கையையும் புரட்டிப் போட்டு விட்டது.அதனால் இந்த முறை பள்ளி, கல்லூரிகள், பொது இடங்கள் அடைக்கப்பட்டதால் அங்கு சென்று காலணிகளைச் சுத்தம் செய்ய முடியவில்லை; கார்களை துடைக்க முடியவில்லை.

எனவே இந்த முறை உதவி செய்யும் முறையை மாற்றிவிட்டார் பாப்புராஜ். சில நேரங்களில் அவசரப்பட்டுச் செய்த தவறால் பாளையங்கோட்டை சிறையிலிருக்கும் பல கைதிகளுக்கும் கடந்த 10 ஆண்டுகளாகப் பல நற்பணிகளைச் செய்து வருகிறார் பாப்புராஜ்.

எதிர்காலம், மற்றும் அவர்கள் குடும்பத்துக்கு ஒரு வருமானத்தை ஏற்படுத்தித் தர வேண்டி தொழிற்பயிற்சிகள் பலவற்றை அந்தக் கைதிகளுக்கு வழங்கினார். அப்படி வழங்கியதன் மூலம் அவர்கள் தயாரித்த 4 ஆயிரம் முகக்கவசங்களை வாங்கியவர், முகக்கவசம் விற்பனை செய்யத் தொடங்கிவிட்டார். இதில் அவரோடு அவர் மனைவி குழந்தைகளும் ஈடுபாட்டோடு கலந்து கொண்டார்கள்.இந்த முகக்கவசம் மூலம் கிடைக்கும் கூடுதல் லாபம் யாருக்கு போகப் போகிறது தெரியுமா? நெல்லை கொங்கந்தான்பாறை கிராமத்தில் 25 குடும்பத்தினர் குடிசை அமைத்துத் தங்கியிருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரிந்த தொழில், பாவைக்கூத்து. கோயில் விழாக்கள், பள்ளிகள், அரசு விழாக்கள் போன்றவற்றில் ராமாயணம் மகாபாரதம் கதாபாத்திரங்களைக் கொண்டு கதை சொல்வதைத் தொழிலாகக் கொண்டுள்ள இந்த மக்களின் வாழ்வாதாரம் கொரோனா காரணமாக மோசமான நிலையை அடைந்துள்ளது. தொழில் இல்லாததால் உணவுக்குக்கூட சிரமப்படும் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த பாவைக்கூத்து கலைஞர்களுக்கு உதவும் வகையில்தான் பாப்புராஜ் மற்றும் அவரது குடும்பமே பொது இடங்களில் முகக்கவசம் விற்பனை செய்து வருகிறது.



இதுகுறித்து பாப்புராஜ் கூறுகையில், "கொங்கந்தான்பாறை பகுதிக்குச் சென்றிருந்தபோது, இந்த கூட்டத்தினரைச் சந்தித்தேன். உணவுக்குக்கூட வழியில்லாத நிலையில் இருந்த அவர்களுக்கு நண்பர்களுடன் சேர்ந்து உதவி செய்தேன். "ஏற்கெனவே, அவர்களின் குடும்பத்துக்கு 10 கிலோ அரிசி, காய்



கறிகள், மளிகைப் பொருள்கள் கொடுத்திருந்தேன். ஆனால், அவை தீர்ந்துவிட்ட நிலையிலும் அவர்களுக்கான வாழ்வாதாரத்துக்கான தொழிலுக்குச் செல்ல முடியாததால் சிரமப்பட்டு வருகிறார்கள்.

"இவர்களுக்கு உதவும் வகையில் முகக் கவசம் விற்பனை செய்துவருகிறேன். அதற்கு நல்ல வரவேற்பு உள்ளது. பேருந்து நிலையத்தில் விற்பனை செய்தபோது பெரியவர் ஒருவர் 1,000 ரூபாய் கொடுத்தார்.இந்த விற்பனை மூலம் கிடைத்த பணத்துடன் நண்பர்களின் உதவியையும் பெற்று அவர்களுக்குக் கொடுக்க இருக்கிறேன்" என்றார். பாவைக்கூத்துக் கலைஞர்கள், "ஊரடங்கு காலத்தில் இப்படி சிலர் எங்களுக்கு உதவி செய்ததால் இப்போது உயிரோடு இருக்கிறோம். இல்லாவிட்டால் பசியால் செத்திருப்போம். இப்போதும்கூட ஒரு நேரம் மட்டுமே சாப்பிடுகிறோம். குழந்தைகளுக்கு மட்டும் சாப்பாடு கொடுக்கிறோம். மக்களை மகிழ்விக்கும் எங்களின் வாழ்க்கை சோகத்தில் இருக்கிறது" என்று வருத்தப்பட்டார்கள். "என்னை வருத்தி மற்றவர்களுக்கு உதவினால் எனது குடும்பம் சந்தோஷமாக இருக்கும் என்று நம்புகிறேன்" என்று சொல்லும் பாப்புராஜ் குடும்பமே இப்போது தங்களை வருத்தி மற்றவர்களுக்கு உதவ சாலைகளில் நிற்கிறார்கள்!

கொரானா தீநுண்மி இரண்டாம் அலை தீவிரமாக இருந்த அடுத்த கட்டத்தில் பாப்புராஜ் வீடு வீடாகச் சென்று முகக் கவசங்களை விற்றார். "சமூக இடைவெளியுடன் பாதுகாப்போடு இருப்போம்" என்ற வாசகம் அடங்கிய பிளக்ஸ் போர்டை கழுத்தில் மாட்டிக்கொண்டு வீடு வீடாகச் சென்று பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி அதன் மூலம் கிடைத்த ரூபாய் 14 ஆயிரம் நிதியை நெல்லை மாவட்ட ஆட்சியர் விஷ்ணுவிடம் தமிழக முதலமைச்சரின் கொரானா நிவாரண நிதிக்கு வழங்கினார். இவர் இப்போது மருத்துவ குணமுள்ள 3 லேயர் முகக்கவசங்களை ரூபாய் 40 விலையில் விற்று வருகிறார். உங்களுக்குத் தேவை என்றாலும் இவருடைய தொலைபேசி எண்ணான 9486481887இல் தொடர்புகொண்டு பேசினால் அனுப்பி வைக்கத் தயாராக இருக்கிறார்! தன் வயிற்றுப் பசிக்காக விசேஷ வீடுகளை தேடிப்போன அழையா விருந்தாளி பாப்புராஜை இன்று நீங்கள் அழைத்து முகக் கவசங்களை வாங்கத் தவறாதீர்கள்; ஏனென்றால் இன்று அவர் தேடி வருவது மற்றவர் வயிற்றுப் பசிக்காக!

EPISODE: 7

# HISTORY OF ANCIENT KINGDOM

The ancient civilization evolved by Sumerians, Babylonians, Egyptians, Chinese,Greeks, Roman's and Indus Valley are all well known to the World. One such civilization that existed on par with the above said ones was the ancient Tamil society. It gave to the world , the famous Sangam literatures,, which are all immense treasure troves that provided many values to the world.

Most Sangam books have not been available and survived. What has remained is not the history but the literature. As various scholars compiled the available diverse poems, invariably, they contain the point of view of the compilers. Hence it is not possible to consider that those works would include all the aspects of the Sangam era. For instance , the Sangam texts did not speak of the technical superiority of ancient

Tamils like ship building. Archaeologists like Gordon Childe says that the written text may provide one percent of data about history, and only the archaeology can provide the remaining 99% . This applies to ancient Tamil history as well. In Tamizhagam, the excavations have been carried out in a few random locations, and only one percent of the total areas in those places have been excavated .There is no point in accusing anyone as most of the rulers of yester years and present rulers not evincing much interest for excavations..

Now we will see about the civilizations existed to Northern borders of Tamilagam upto Afghanistan. Similarly all other civilizations existed in the ancient world will be discussed with the salient features of such old civilizations including Central American societies.

Before discussing about the ancient civilizations of India and the World,we will discuss about our Prehistoric age existed in parts of the world.

Indo Aryan Tribe.

Some scholars opine that the Sangam era is the time when the ethnic tribes moved towards forming a state. Contraray to the opinion,Sangam era is the era when states were already established in the ancient Tamizhagam and were madestable.Lewis Hendry Morgan is an American who lived with the native Americans for forty years to research about them.He published his findings in his book 'Ancient society' in 1877. He included that the Gens, which is based on bloodline,is the base of the ancient tribal lifestyle and most of the ancient societies formed from his social institutions.Based on the remarkable book,Engels wrote his book 'The origin of the family,private property and the state.' After that,based books authored by Marx and Engels,Communist philosopher S.A.Dange wrote a book called 'Ancient India' after researching the ancient Indian literature and the Gens based FAMILY tribal life of the ancient Aryans.The books by Marx,Engels and Dange can help us picture the life of the prehistoric man,the merits of Gens,and their Male-female relationship. Dange says that the concept of Yugas shows the four stages of the ancient Aryan tribal society,which are Krita(Satya)Yuga,Treta Yuga,Dvapara Yuga, Kali Yuga.Dange has provided detailed sources about the Male and female relationship,material production,and socio-political structures in the four stages.Krita Yuga was the Yuga when the barbarian hunters lived.The struggle to fetch food was a huge struggle then.In the struggle for food,many societies perished.Men roamed as barbarians for many 1000 years.Vendidad,the vedic text of Zoroasteianism,mentions that the Aryan tribe roamed 16 nations before eventually settling down.There was no class,state ,or the concept of private property.Production and hunting for food can be done only by communal labour.They lived with what they got.This period is called the Krita Yuga.




Concept by:
Dr. V. BALATHANDAYUTHAPANI
DCP RTD
Cell: 7904354721


Treta Yuga is the Yuga when the Aryan society found a new style of production using the fire.Fire formed the foundation of the life of the Aryan tribe.He built his settlements after he learned to make fire and trained the cattle.The aryan man jumped from the uncertainly,nomadic lifestyle,destruction,fear,and

terror of the krita yuga to the new yuga.Comparaively,this is new yuga produced a lot of material possessions.The Aryans called it Treta Yuga.

Gentes or communes existed in Treta Yuga where only blood relatives stayed together, and they were considered equal.They laboured together,produced together,and consumed together.They knew each other through their common female ancestor.They did not know their father.When the communes got huge,they divided. Many communes or Gentes accumulated to form the tribes.Intergroup warfare happened for the food.Group marriage existed,and there were no families,and after the marriage,the man went and lived in the female gentes.The female was an influential member of the gentes.Even though material production was not massive,they lived with happiness,content,security, and harmony.Overall,the gentes of the Treta Yuga lived in liberty,equality,and fraternity.The agriculture,handicrafts,and commerce became prominent in Dvapara Yuga,which triggered the growth of the private property.Bloodlline was necessary for the relationship in Treta Yuga.However in Dvapara Yuga,it changed.Private property destroyed the bloodlline based institutions like genssystem and matrilineal society and brought forth the basis of partrilineal right.If Treta Yuga developed the commune structure of gentes,then Dvapara Yuga brought the private property,which detroyed the gentes institution or the commune.The liberty,equality,and fraternity of the gentes commune were lost.At this place,society was divided into classes and master-slave,the rich-poor farmer formed.The woman became a slave to the man in the family.

Once the Aryans in north india,the agriculture fields were cleared and turned into pastures.Even after arriving in india ,the cattle were their most significant wealth.They settled and involed in agriculture a long time after they migrated to north india. Following that,the need for metals increased,and then the development turned fast and expedited.Villages and towns grew,and small cities formed.Division based on labour formed.The cattle grooming brought forth the private property.Private property bounded woman to man.Group marriage of Treta Yuga developed and crossed many stages to evolve into pairing marriage in Dvapara yuga.This paring marriage again

evolved to monogamy in the Kali Yuga.

The end of Dvapara Yuga was the herioc age.The heroic age is the age of mahabharata in india,homer Iliad and odyssey in greece. Till then,communes or genetes existed.According to the vedic tradition,Dvapara Yuga ended with the war of mahabharata, and the Kali Yuga was born.When the Kali yuga began, the gentes or commune disoriented,and the states took place and gave birth to mordern civilization.Hence,Yugas are the development stages of the Aryan tribes.Later,Puranic stories were imposed,and the yugas turned into a puranic concept.However,they now serve as a resource to morgan's findings and marxist theory.

In the 14th chapter we'll write about the various ancient civilizations existed in the world and afterwards the Kingdoms of North India,Central India and the world will be discussed.

There are hundreds of historians who used to differs from one to another and the reason was, that with available facts they have written their books which were all widely accepted by others . Similarly my style of approach towards history is comparative comparative Chronology where in I see the depth of History repeated in one region of the world ( For example Ancient Greece),vis- a- vis another region of the world.

History is not one but many stories,only a few of which have been written. The challenges to build on the advances that have already been achieved so far many. Currently, there are two parallel images of ancient South Asia- one based on literary sources, the other on archaeology. Texts and archaeology generate different sorts of of historical narratives and suggest different rhythms of cultural continuity,transitions and change. Historians generally use archaeological evidence selectively as a corroborative source when it matches hypotheses based on the interpretation of texts. Histories of early India should ideally represent the various regions and communities of the subcontinent in all their diversity.However ,while the heartlands of great empires and kingdoms are all well represented, many regions - for instance the North- East- are not. Such regions have to be brought into the ambit of history.

Now we will go deep into the ancient kingdoms existed in Northern parts of Ancient Tamilagam including DECCAN and Northern India. During the same periods we will see the existence of the other ancient Kingdoms existed in other countries of the world.

In the chapter- 8 , Mourians Kings of Magadham , from Chandra Gupta to Asoka have been highlighted and will continue the same now.

Chandra Gupta abdicated the throne, became a Jaina monk, and fasted to death, in the manner of Jaina saints, at the great Jaina temple and monastery of Sarvana Belgola in the modern Mysore. The Mouria empire extended upto the northern borders of Ancient Tamilagam and I earlier mentioned that The Movendhars of Tamilagam defeated the Mourians from entering into their territory.

King Bindusara who succeeded Chandra Gupta was beaten by Vendhars of Tamilagam in 295 and 287 b.c. There was another story that Bindusarar forced his father Chandra Gupta to abdicate his kingdom to him and Chanakkia was also chased out from Pataliputhra on the advise of Kalladar , a minister under Chandra Gupta. Binbusara was ruling from 297 b.c to 272 b.c and during his rule , he was in touch with Antiochus 1, the seleucid king of Syria and maintained cordial relationships with him. However Bindusara was energetic enough to hold the great empire intact. But his final years were ended in deep sorrow as his sons were fighting with each other for becoming King However Asoka one of his son defeated and killed all most all his brothers except one and became the King of Magadham . Initially Asoka began his reign as a tyrant, but this story is not borne out by Asoka'sown inscriptions, which are the oldest surviving Indian written documents of any historical significance. They consist of a series of edicts engraved in very Similar form on rocks and pillars at widely scattered points all over India and form a unique monument to a great king's memory.

During the war with Kalinga in 261 b.c, around one lakh people were killed and one lakh and fifty thousand people were then taken captive and many more died. Just after the taking of Kalinga, Asoka

changed his heart towards peace and till his death in 232 b.c, he devoted his entire life peace and started spreading Buddhism not only to Ceylon but the entire east Asian countries upto Japan and China by sending emissaries to the countries.

Tradition unanimously ascribes the conversion of Ceylon to Mahendra, Asoka's son or in some sources his brother, who had became a Buddhist monk. Though the relationship of the apostle of Ceylon to Asoka is very doubtful, there can be no doubt of his historicity, or of that King Devanampiya Tissa, his first concert. Though Aryans may have settled in Ceylon more than two centuries before this time, it was only now that the culture of the Island began to develop,under the fertilizing influence of Buddhism.

It may please be recalled that SECOND Karikalan who ruled for 20 years from 190 b.c to 170 b.c invaded Ceylon and captured 10000 soldiers along with the King and brought them to his Country and with their help , The Grand Anaicut was constructed in 180 b.c and the Dam is still in existence for the past 2200 years of construction.

After the demise of Asoka in 230 b.c, the Satavahanas established their independent kingdom with the support of Tamils which was disliked by the Mourians . For some fifty years Mourian Kings continued to rule in Magadha, until about 183 b.c, Pusyamitra Sunga, a brahmin general of Brhadtatha, the last Mourian king, succeeded in gaining power by a palace revolution.

Pusyamitra was a supporter of the orthodox faith, and revived the ancient Vedic sacrifices, including the horse sacrifice, but the flourishing State of Buddhism at this period is attested by the remains at Bharhut, and the stories of his persecution of Buddhist monks are probably much exaggerated by sectarian traditions.

The memory of Ashokas renunciation of further conquest was soon forgotten,and agressive war again became the sport of kings, and was looked upon by theories as a normal activity of the state.In general the history of post Mauryan Indian is one of the struggle of one DYNASTY with another for regional dominance,and the political,through not the cultural,unity of India was lost for nearly two thousand years.we will continue to write about the other Kings ruled Northern India till first century B.C in the 15 th chapter.

Mr. Kaniyan Balan in his book titled as " Pazhanthamil Samuthayamum Varalarum , released in 2016 , running to 830 pages in Tamil language is an EXCELLENT book, I ever and never read in my life , provided elaborate details about the happenings in our ancient Tamizhagam and the other parts , must be read by all our Tamilians. Mr. Kanian Balan is an Engineer and hails from Erode and none in the history have written such wonderful and astonishing facts and informations about historical incidents of Our Great Thamilagam. THIS BOOK MUST BE IN THE HANDS EACH AND EVERY TAMILIANS FOR KNOWING OUR REAL HISTORY.

THE OTHER KINGS OF MOURIANS, PUSYAMITRA SUNGA AND THE INDO - GREEK RULERS OF NORTH-WEST INDIA.

Pusyamitra Sungan and other Northern Kingdoms. --

During the last year's of Asoka, the ministers of the Mauryan Empire gradually seized power from Asoka. The queen he married towards the end of his rule ,along with anti Buddhist, acted against

Asoka and blinded the crown prince Kunala; Latter this queen was also not keep up influence and was killed . Dasharathaas a regent of Kunalan's son Samprati ruled the Mouryan Empire . Thus, Asoka 's reign, the influence of the ruler started deteriorating and the empire started weakening. Within 10 years of Asoka 's death , his empire was shattered. Many States like the Satavahanas separated from the Mouryan Empire . Though there is confusion regarding the names of Mourya kings after Asoka, we know that the last King Brihadratha was killed by his Brahmin general Pushyamitra who later founded the Sunga dynasty. Maurya dynasty which lasted for 137 years from 322 b.cto 187 b.c was destroyed in 50 years after the death of Asoka the Great.

Another important aspect we should keep it in mind that due to the 200 years old Indian historical research by the European scholars and particularly by William Jones, the period before the Islamic invasion came to light. Then, the history of the Mourya Empire and Asoka came to light .

Using the years of invasion of ALEXANDER and SELEUCOS, the Victor, from the notes of the Greek historians, the authenticity of India's chronology has been fixed Accepting the above facts , D.D.Kosambi says that ALEXANDER 's invasion of Panjab in 327 B.C confirms India's first historical time

Even then Asoka was considered an ordinary king Other Historical events of India were yet to be explored . The historical research conducted by the European scholars up to the 20'th century revealed more about Asoka, the history of Buddhism and many other Indian historical events. Nevertheless, this version of Indian history focuses only on the history of North India. It covered only a small part of South Indian history.

The ancient Tamil history has not been researched yet. Till date , the ancient Tamil chronology has not been linked with the World's historical chronology. Excavations carried out in Tamil Nadu are very minor in number and are not sufficient. The inscriptions found from these excavations also have not been transcribed yet. This is the State of Tamil history

While discussing the Tamils, we saw about the facts about the Satavahana and Kalinga Empire which verified that the Tamils Cinfederacy controlled the Deccan and the East and West Coasts of India for trade. We also observed how during the Mouryan rule , the Tamils Unitedly defeated the Mouryan invasion using their powerful naval and technical superiority. Moreover, they had also established naval dominance and global trade.

Now we will continue our historical events taken place during the rule of Pusyamitra Sungan whose kingdom was by no means a closely knit centralized empire , like that of Mauryan , but one of a type which was to become normal in Hindu India which may be loosely termed feudal.Pusymitra 'a son Agnimitra is known from Kalidasa's drama Malavikka and Agnimitra , while his son Vasumitra , a mighty king defeated the Greeks. An inscription records says that a Sunga king Bhagabhadra received an ambassador named Heliodorus from a Greek king of Taksasila, Antialcides . Otherwise the Sungas are mere names recorded, usually in garbled form, among the muddled King lists of the Puranas, religious texts dating from Gupta times ONWARDS.

Meanwhile on India's northnorth-western borders events which were to have a profound effect both on her own history and on that of Asia generally were taking place. A series of invasions, all inadequately documented,, brought the whole of what is now West Pakistan, Malwa,and Sourahtra, much of Uttar Pradesh and Rajasthan , and even for a while part of Western Maharashtra under the control of Alien Kings.

The first invaders were the Bactrian Greeks. Small colonies of Asiatic Greeks had been settled in Bactria by the Achaemenids, and these were strength by the settlements established by The Great ALEXANDER and his General Seleucus Nicator between 331 B c to 323 b.c by Alexander and between 321 b.c to 290 b.c by Seleucas Nicator. It may be recalled again that Seleucas was defeated by Chandra Gupta Mouryan in 305 b.c at the outskirts of Pataliputhra when Seleucas invaded Magadham. After the stunning defeat , Seleucas reached an agreement with Chandra Gupta and assured that he would not come back from North west again to invade Magadham. During the agreement Helena, the daughter of Seleucas was given to Chandra Gupta who married her and due to the relationship, a new race of Indo Greeks was established in India.

About the middle of the Third Century B. C, Diodotus, the Governor of Bactria, declared himself independent of the Seleucid Empire, and the Iranian province of Parthia became independent at about the same time. Diodotus was succeeded by his son , also named Diodotus, who was soon overthrown and replaced by a usurper, Euthydemus. Euthydemus came to terms with the Seleucid Emperor Antiochus -3, who had vainly attempted to regain the Hindu Kush, and gained a foothold on the North West Frontier, which had probably already broken away from the Mouryan Empire . Early in the second century b.c, Demetrius ,the son and successor of Euthydemus, pressed further into India. He and his successors occupied most of the Indus Valley and the Panjab, and led great raids far into the Gangai Valley, at least one of which, perhaps led by King Menander, reached Pataliputhra.

Soon the home domains of the Bactrian Greeks were wrested from them by another usurper, Eucratides, but descendants of Euthydemus continued to rule in the Panjab and parts of the North- West. Then the Eucratids were also tempted to try their fortunes beyond the mountains, and gained control of the Kabul Valley and the district of Taksasila. The Greek domains in India were divided into several petty Kingdoms, those of Kabul Valley and the North- West Frontier chiefly ruled by kings of the line of Eucratides, and those of Panjab under the line of Euthydemus .

The Greco - Bactrian kingdoms, did not lost long survive. Bactria itself was occupied by the Parthians early in the second half of the second century b.c and the Greeks were confined to their possessions in India and Afghanistan. Then fresh invaders appeared from the north. A complex chain of causes, climatic and political, led to the new movements of people's of CENTRAL ASIA. The consolidation of the Chinese Empire under the great Emperor Ch'in Shih Huang Ti ruled between 247 b.c to 210 b.c, the building of GREAT WALL OF CHINA , and perhaps also the drying up the Central Asian Pasture lands, had driven large bands of Normads westwards, from the confines of China to the region of east of the Caspian. Soon a nomadic people, called by the Chinese Yueh- chin, was bearing heavily on the Scythian tribesmen on the borders of Bactria. The Scyths , whom India was to know as SAKAS , were driven out by pressure from the North and East to attack Bactria,, which they occupied, soon to be followed by the Yueh- chin. The Sakas moved on from Bactria to attack first Parthian rulers of Iran and then the Greeks in India. By the middle of the 1st century B .C, only a few petty Greek Chiefs still ruled in India , and the power of the Sakas reached as far as MATHURA.

The Sakas continued the earlier practice of issuing coins with inscriptions in Greek and Prakrit.

We will see about Kushanas who were a branch the Yue- chi who was principally responsible for conquering Bacteria and expelling the Sakas from the Bacteria borderland towards south.

We will see about Kanishka who ruled the north from 78 b.c and in fact he was the founder of Sakas Era and established his Empire upto Kottan in present China and also his rule in North India.

# திருக்கோயில் உழவாரப்பணி



**உழவாரப்பணி என்றால் என்ன?**

இதைவிடச் சிறந்த புண்ணியம் வேறில்லை.

உழவாரப்பணி செய்தே சிவனருள் பெற்றவர் திருநாவுக்கரசர். பழங்காலத்தில் கோயிலில் கிடைத்த நைவேத்யம், சிறுவருமானத்தை பெற்றுக் கொண்ட சிலர் தெய்வத் தொண்டாக கோயிலை தூய்மைப்படுத்தினர்.

இதற்காக சில கோயில்களில் மானிய நிலம் கூட இருந்தன. நம்மை வாழவைக்கும் தெய்வத்தின் இருப்பிடத்தை உழவாரப்பணி செய்து பாதுகாத்தால் நம் சந்ததிகள் நலமுடன் வாழ்வர்.

கோயிலில் புதர் மண்டிப் போகாமல் சுத்தப்படுத்துவது உழவாரப்பணி. இதைச் செய்ய தோசைக் கரண்டியின் வடிவில் பெரியதாக உள்ள கருவிக்கு 'உழவாரப் படை' என்று பெயர். இதைக் கையில் ஏந்தியபடி இருப்பவர் திருநாவுக்கரசர்.

எப்போதும் உழவாரப்பணி மூலம் கோயிலை தூய்மை செய்தபடி பாடுவது இவரின் பணி.

சிவன் கோயிலுக்கு கும்பாபிஷேகம் நடத்துவதை விட மேலான புண்ணியத்தை உழவாரப்பணி தரும்.

சிவ ஆலயத்திற்குள் சென்றவுடன் இறைவன் நமக்கு தரும் அல்லது உணர்த்தும் பணியே உழவாரப்பணி எனப்படும்

அவையாவன:

1. என்வீட்டு துன்பங்கள் நீங்காமல் இருப்பதற்கு பக்தர்கள் கோயிலில் போடும் குப்பைகளை குப்பை கூடங்களில் போடுவது.
2. பக்தர்கள் இறைவன் அருள் வேண்டாம் என சொல்லி தூண்களில் திருநீறு போடுவதை சுத்தம் செய்வது.
3. இறைவனுக்கு சாற்றப்படும் நிர்மாலிய பூக்களை நந்தவனத்தில் போடும் பணி.
4. திருக்கோயில்களில் சூழ்ந்திருக்கும் ஒட்டடைகள் அழுக்குகள் ஆகியவைகள் நீக்குவது.
5. சுவாமியின் ஆடைகளை துவைப்பது.
6. அழுக்கு படிந்த விளக்குகளை தூய்மையாக்குவது.
7. நந்தவனத்தை தூய்மைபடுத்துவது.
8. தேங்கியிருக்கும் தண்ணீரை சுத்தபடுத்துவது
9. கோபுரங்களில் முளைத்திருக்கும் செடி கொடிகளை அகற்றுவது.
10. சிவாச்சாரிகளின் அனுமதி பெற்று



திருக்கோயிலின் கொடிமரம் உற்சவ மூர்த்திகளை இயற்கை மூலிகை கொண்டு தூய்மைபடுத்துவது.

11. 63 நாயன்மார்கள், பிரகார திருமேனிகளுக்கு மாவு, தயிர் சாற்றி அதன்மீது படிந்திருக்கும் அழுக்குகளை நீக்குவது.

12. திருக்கோயில்களில் உள்ள மின்விளக்குகளை சரிசெய்வது.

13. வாரம் ஒரு முறை திருக்கோயிலை பசுஞ்சாணம் இட்டு மெழுகிடுவது.





14. திருக்கோயிலை சுற்றி கோலமிடுவது.

15. கோயிலில் படிந்திருக்கும் எண்ணை பிசுபிசுப்பை எடுப்பது.

16. கற்பூர புகையால் படிந்திருக்கும் கரும்புகைகளை துடைப்பது போன்ற பணிகளே உழவாரப் பணி ஆகும். இப்பணிகளை குறைந்தது மாதம் ஒரு நாள் செய்வோமானால் உடலும் , மனதும் வலிமை பெறும்.

உழவாரம் செய்வீர் இறைவன் அருள் பெறுவீர்.

உழவாரபணி செய்யும் அன்பர்கள் பெரும்பாலும் மருத்துவமனைக்கு செல்வதில்லை என்பது அடியார்களின் அனுபவம்.

**- ஸ்ரீபாலா சமஸ்தான சத்சங்க குழு, செம்பாக்கம்.**

**தகவல்:வேல்விழி**


# மித்ரா டைம்ஸ் உங்கள் இல்லம் தேடி வரவேண்டுமா?

ஆறாம் ஆண்டின் துவக்கத்தில் அடியெடுத்து வைக்கும் மித்ரா டைம்ஸ் இலட்சக்கணக்கான வாசகர்களோடு பயணிக்கிறது. இதழ்களில் இடம் பெறும் செய்திகள், கட்டுரைகள் பயனுள்ளதாகவும் தங்களின் முன்னேற்றத்திற்கு உதவியாய் இருப்பதாகவும் மகிழ்ச்சியோடு பகிர்ந்து கொள்கிறார்கள்.

தாங்கள் அறியாத செய்திகள், புதிய தகவல்களையும் மித்ரா டைம்ஸ் எங்களுக்கு வழங்குகிறது என்பது வாசகர்களின் கருத்து.

மித்ரா டைம்ஸ் சந்தாதாரராக தாங்கள் இதுவரை ஆகவில்லையென்றால் உடனே செலுத்துங்கள்.

**ஆயுள்சந்தா : ரூ.2400.00**

**ஆறாண்டு சந்தா : ரூ.1440.00**

**ஆண்டு சந்தா : ரூ.240.00**

மேலும் விபரங்களுக்கு: **044 - 23743007/8**

தொகை செலுத்த வேண்டிய விபரம்:

Name : MITRA TIMES
A/C no : 50200012576292
Bank : HDFC Bank
Branch : T.Nagar
IFSC : HDFC0000206



மித்ரா டாக்கீஸ்

## வீட்டை வாங்கிப்பார்!

போயஸ் கார்டன் என்றால் செல்வி ஜெயலலிதாவின் ஞாபகம் வராமல் இருக்க முடியாது.நடிகர் ரஜினிகாந்தின் வீடு போயஸ் கார்டனில்தான் உள்ளது. அவரை தொடர்ந்து அவரது மருமகனும் நடிகருமான நடிகர் தனுஷும் போயஸ் கார்டனில் இடம் வாங்கி பிரம்மாண்டமாக வீடு கட்டிக் கொண்டிருக்கிறார். இந்நிலையில் நடிகை நயன்தாராவும் போயஸ் கார்டனில் வீடு வாங்கியுள்ளாராம். போயஸ் கார்டனில் உள்ள புகழ் பெற்ற அப்பார்ட்மெண்டில் நான்கு பெட்ரூம்களை கொண்ட இரண்டு வீடுகளை வாங்கியுள்ளாராம் நடிகை நயன்தாரா. பல கோடிகள் மதிப்புள்ள இந்த வீட்டிற்கு விரைவில் ஒரு நல்ல நாளில் குடி பெயர போகிறாராம் நயன்தாரா.

## நடிப்பு,தயாரிப்பு அடுத்தது இயக்கமா?

நடிக்க வந்த கொஞ்ச நாட்களிலேயே தன் அழகாலும், திறமையான நடிப்பாலும் சீக்கிரமே முன்னணி கதாநாயகர்களுடன் ஜோடி சேர்ந்து பல வெற்றி படங்களை கொடுத்தவர் கீர்த்தி சுரேஷ் .தெலுங்கில் நடிகை சாவித்திரி அவர்களின் வாழ்க்கை வரலாற்றை தழுவி எடுக்கப்பட்ட 'மகாநதி' படத்திற்காக தேசிய விருதும் பெற்றார். தமிழ், தெலுங்கு, மலையாளம், என்று பல படங்களில் கமிட்டாகி பிஸியாக இருந்தாலும் தற்பொழுது தயாரிப்பின் பக்கம் தன் கவனத்தை திருப்பி இருக்கிறார் கீர்த்தி சுரேஷ். மலையாளத்தில் முன்னணி நடிகராக இருக்கும் தமிழில் மாரி 2 படத்தில் வில்லனாக நடித்த டொவினோ தாமஸை வைத்து விஷ்ணு ஜி ராகவ் இயக்கத்தில் 'வாஷி' என பெயரிடப்பட்டுள்ள படத்தை தயாரிக்கவிருக்கிறார்.



# மதநல்லிணக்க மாநாடு



வெங்கட் பிரபு இயக்கத்தில் சிம்பு எஸ் ஜே சூர்யா கல்யாணி பிரியதர்ஷன் ஆகியோர் நடிப்பில் வெளிவந்துள்ள மாநாடு சிம்புவுக்கு ஒரு திருப்புமுனையை தந்தது என்று சொல்லலாம். இந்தப் படத்தில் அப்துல் காலிக் மற்றும் தனுஷ்கோடி என்ற இரண்டு கதாப்பாத்திரங்களைச் சுற்றிதான் கதை நகருகிறது. அப்துல் காலிக்காக சிம்புவும், தனுஷ்கோடியாக எஸ்.ஜே. சூர்யாவும் நடித்துள்ளார்கள். இருவரும் அதனை உணர்ந்துகொண்டு போட்டிபோட்டு நடித்துள்ளார்கள். தான் ஒரு தேர்ந்த நடிகர் என்பதை சிம்பு மீண்டும் நிரூபித்திருக்கிறார். குறிப்பாக உணர்வுபூர்வமான காட்சிகளில் அவரது நடிப்பு தத்ரூபமாக இருந்தது. எஸ்.ஏ. சந்திரசேகர், ஒய்.ஜி. மகேந்திரன், வாகை சந்திரசேகர், கருணாகரன், ப்ரேம்ஜி அமரன், அஞ்சனா கீர்த்தி, மனோஜ் பாரதிராஜா, உதயா, அரவிந்த் ஆகாஷ் ஆகியோரும் அவரவர் பாத்திரத்தில் சிறப்பாக ஜொலிக்கிறார்கள்.

இசை: யுவன் சங்கர் ராஜா; ஒளிப்பதிவு: ரிச்சர்ட் எம். நாதன்.



# "பொண்ணு மாப்பிள்ளை"

திரைப்படத்தில்மாஸ்டர் மகேந்திரன் நாயகனாகவும் புதுமுகம் ரூபிகா நாயகியாகவும் நடித்துள்ளனர். சத்யன் வில்லனாக நடித்துள்ளார். இவர்களுடன் வடிவுக்கரசி, நந்தகுமார், ஆர்த்தி, நெல்லை சிவா, கிரேன் மனோகர் ஆகியோரும் நடித்துள்ளனர்.இயக்குநர் சேட்டிபாலனும் ஒரு நகைச்சுவை வேடத்தில் நடித்துள்ளார். ராஜ் வம்சம் படத்தில் சசிகுமார், நிக்கி கல்ராணி, யோகி பாபு, சதிஷ், தம்பி ராமையா, விஜயகுமார், மனோ பாலா உள்ளிட்ட பலர் இந்த படத்தில் நடித்துள்ளனர். சுந்தர் சி யின் உதவி இயக்குனர் கே.வி.கதிர்வேல் இப்படத்தை இயக்கியுள்ளார். சாம் சிஎஸ் படத்திற்கு இசையமைத்துள்ளார். இயக்குனராக இருப்பதைவிட நடிகராக இருப்பதைத் தான் எல்லோரும் விரும்புகிறார் சசிகுமார்.

# இயக்குனராக இருப்பதைவிட நடிகராக இருப்பதைத் தான் எல்லோரும் விரும்புகிறார் -சசிகுமார்

ராஜ் வம்சம் படத்தில் சசிகுமார், நிக்கி கல்ராணி, யோகி பாபு, சதிஷ், தம்பி ராமையா, விஜயகுமார்,மனோ பாலா உள்ளிட்ட பலர் இந்த படத்தில் நடித்துள்ளனர். சுந்தர் சி யின் உதவி இயக்குனர் கே.வி.கதிர்வேல் இப்படத்தை இயக்கியுள்ளார். சாம் சிஎஸ் படத்திற்கு இசையமைத்துள்ளார்.






# சினிமாவில் செய்ய நினைத்ததை சின்னத்திரையில் சாதித்தேன்!
## – கலைமாமணி டாக்டர் பூவிலங்கு மோகன் பெருமிதம்!





கர்மா தொடருக்காக கும்பகோணம் வந்திருந்த பூ விலங்கு மோகன் சாரை சந்தித்தோம்.

**வணக்கம் சார்! கும்பகோணத்துக்கு அடிக்கடி வர்றீங்க!**

**கர்மா சீரியல் எப்படி போகுது?**

வணக்கம்மா! நம்முடைய கலாச்சாரத்துக்கு பெருமை உண்டு அந்தப் பெருமையை பாதுகாக்கும் வகையில் பாம்பே சாணக்யா அவர்களின் இயக்கத்தில் கர்மா என்ற தொடர் நம்முடைய பாரம்பரியத்தை குறிப்பிடுகிறது. குறிப்பாக 1930 ஆம் ஆண்டில் அக்கரகாரம் எப்படி இருந்தது என்பதை நம் கண் முன்னே கொண்டு வந்து காட்டுகிறது இந்த கர்மா தொடர். இந்த நாடகத்தை உலகம் முழுவதும் இருந்து ரசிகர்களிடையே அவர்களாகவே முன்வந்து தருகின்ற பணத்தை பெற்று இந்த தொடர் எடுக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.இப்படி பொது மக்களின் பங்களிப்பில் உருவாகும் கர்மா தொடர் மிகச் சிறப்பாக எடுக்கப்பட்டு வருகிறது

**இந்தத்தொடரில் நீங்க சோம சுந்தர கனபாடிகள் பாத்திரத்துல நடிக்கிறீங்க. அந்தப் பாத்திரமாகவே மாறிட்டீங்களே! உங்க அனுபவத்தை சொல்லுங்களேன்!**



1967ல் ஸ்கூல்ல படிக்கறச்சே மார்வேட போட்டி யில நான் போட்ட வேஷம் முன்னாள் முதல்வர் கலைஞர் வேஷம். பின்னாள்ல அவர் கையாலே கலைமாமணி பட்டமும், சித்தி நாடக வெற்றி விழாவில் கோப்பையும் வாங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. நான் முதன் முதலில் நடித்த மேடை நாடகத்தின் பெயர் 'தன் கையே தனக்கு உதவி'.

**பூவிலங்குமோகன்.... பெயர் வந்தது எப்படி?முதல் படங்கறதாலயா?**

என்னோட முதல் படம் "தண்ணீர் தண்ணீர்" நாலாவதுபடம்தான் பூ விலங்கு.அப்ப நடிகர் மோகன் கதாநாயகனா நடிச்சிகிட்டிருந்தாரு..அதனால் பூவிலங்கு மோகன் னு பேர் வந்தது.

**சின்னத்திரையில உங்க அனுபவம்!**

விடாது கருப்பு,ரகசியம், எதுவும் நடக்கும் ஆகிய நாடகங்கள் நாகா சார் இயக்கத்தில வந்தது.

**"திருவிளையாடல்" பிரம்மாவா நடிச்சீங்களே!**

அது ஒரு மறக்கமுடியாத அனுபவம்.

பிரம்மனுக்கு இருப்பது போல எனக்கும் தலையை வச்சு மோல்ட் பண்ணிட்டாங்க.. டியூப் வழியாகத்தான் ஆகாரம்... எதுன்னா கேக்கனும்னாகூட விரலைதான் அசைக்கனும். ஏதாவது எறும்பு புகுந்திட்டா மோல்ட் ஐ உடைச்சு தான் எடுக்கனும்... சினிமாவில கிடைக்காத நடிப்புக்கான ஸ்கோப் சின்னத்திரையில கிடைச்சது..அதனால அங்க முடியாததை இங்க சாதிக்கறேன்..

**மகராசியில நடிக்கிற அனுபவம்?**

நான் இப்ப நடிக்கிற சிதம்பரம் ரோல்ல தீபன் சக்கரவர்த்தி நடிச்சுக்கிட்டிருந்தார்.அவரால தொடர முடியாதபோது என்னை இயக்குனர் சுந்தரேஸ்வர் கூப்பிட்டு நடிக்க வச்சார்.. இப்ப இயக்கிக்கிட்டிருக்கிற அருள்ராய் சார் கூட பயணம் தொடருது!


நாங்க போனவாரம் ஒரு நாள் மகராசி பாத்தோம். படுக்கையில இருந்துகிட்டே நீங்க நடிச்சது எல்லாரையும் பிரமிக்க வச்சது.

**கலைத்துறையில் 40 வருஷ பயணம் எப்படி இருக்கு?**

சுமார் 2500 மேடை நாடகங்களில் நடித்த பிறகு சினிமாவுக்கு வந்தேன். என்னோட குரு கோமல் சுவாமிநாதன். என்னோட ஆசான் கே.பி சார்! இவங்க ரெண்டு பேரும்தான் என்னை இவ்வளவு தூரம் கலைத்துறையில கொண்டு வந்து நிறுத்தினது! சின்னத்திரைக்கு வந்தப்புறம் இப்ப வர இயக்குனர்கள் பெரும்பாலும் கே.பி சார் அனுபவங்களை படிச்சு வந்தவங்க..அது எனக்கு இன்னும் கூடுதல் பலம்.. நாதஸ்வரம் தொடர் மூலமாக கின்னஸ் சாதனை புத்தகத்தில் சன் டி.வியை இடம் பிடிக்க வச்ச திருமுருகன் சார் மாதிரி நிறைய இயக்குனர்கள் சின்னத்திரை தொடர் மூலமாக மக்கள் மனசுல இடம்புடிச்சிருக்காங்க.சின்னத்திரையில் தொடர்களுக்கு முக்கியத்துவம் தரும் சன் டி.வி க்கும்,என்றும் எங்களுக்கு ஊக்கமளிக்கும் ரசிகர்களுக்கும் நன்றி! உதவியாளர் ஷாட் ரெடி என்றவுடன் அதுவரை பேசிக்கொண்டிருந்தவர் சோமசுந்தர கனபாடிகளாக "இதோ வந்துட்டேன் "என்று நமக்கு வணக்கம் சொல்லிவிட்டு கிளம்பினார் வாழ்நாள் சாதனையாளர் கலைமாமணி டாக்டர் பூவிலங்கு மோகன்.

**நேர்காணல்:லட்சுமி ப்ரியா வெங்கடேஷ், கும்பகோணம்**






"**எ**ப்படி இருந்த நான் இப்படி ஆயிட்டேன்"என்று சொல்லியபடியே அமர்ந்தார் கபாலிகான்.

கருப்பட்டி காப்பியை கையில் தந்தோம். வாங்கி சுவைத்தவர், "அருமையாக இருக்கிறது. இனிமே எப்பவுமே எனக்கு கருப்பட்டி காப்பி தான் "என்று அவர் "எப்படி இருந்த கட்சி இன்று இப்படி ஆகிவிட்டது" என்று மறுபடியும் சொன்னார்.

**"எந்தக் கட்சியை சொல்றீங்க"**

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் எம்ஜிஆர் ஆரம்பிக்கப்பட்ட கட்சி எம்ஜிஆருக்கு பிறகு ஜெயலலிதா அவர்களால் ராணுவ கட்டுக்கோப்போடு இருந்த கட்சி இன்றைக்கு காங்கிரஸ் கட்சி மாதிரி ஆகிப்போச்சு"



**"எப்படி சொல்றீங்க"**

எப்பவுமே காங்கிரஸ் கட்சி ஆலோசனைக் கூட்டம் நடந்தா தான் இந்த மாதிரி எதிர்பார்க்க முடியும். ஆனா அதிமுக கூட்டத்தில் அப்படி நடந்துருச்சு என்றுதான் ஒவ்வொரு தொண்டனும் ரத்தக்கண்ணீர் வடிக்கிற மாதிரி ஆகிப்போச்சு.

**"என்ன நடந்தது"**

உள்ள என்ன நடந்ததுன்னு முழுசா யாரும் வெளிய சொல்லல. ஆனா கொஞ்சம் கொஞ்சமா வெளியாகிற செய்தியைப் பார்க்கும்போது என்ன நடந்திருக்கும் என்று ஓரளவுக்கு யூகிக்க முடிகிறது.

**"என்ன நடந்திருக்கும்"**

"மேம்போக்காக ஒற்றுமையாக இருப்பதாக காட்டிக் கொள்ளும் ஒபிஎஸ் இபிஎஸ் அணியினர் தனித்தனியாக பிரிந்து ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுவது வெளிப்படையாக நடந்திருக்கிறது.

**"எப்படி சொல்றீங்க"**

"இது இரண்டு அணிகளுக்கும் பொதுவாக கட்சியின் முன்னணி தலைவர்கள் பேசும்போது இரண்டு அணியினரும் தனித்தனியாக அவர்களுக்கு ஆதரவாக பேசியதிலிருந்து தெரியவருகிறது"

**"ஓஹோ'**

மூத்த தலைவர் அன்வர் ராஜா பேச ஆரம்பிக்கும்போது சிவி சண்முகம் அவரை



பேசக்கூடாது என்று சொன்னதாகவும் அவர் பேசட்டும் என்று வைத்தியலிங்கம் சொன்னதாகவும் செய்தி மெல்ல மெல்ல வெளியாகிறது.

**"நல்லா இருந்த கட்சி இப்படி நாலா பிரிஞ்சு போனதுக்கு என்ன காரணம்"**

"நாம தொடர்ந்து பேசிகிட்டு வர்றப்போ சசிகலா சிறையில் இருந்து வந்தபின்பு அதிமுகவில் அதிரடி மாற்றம் வரும்னு சொன்னோம்"

ஆமாம்!

"அதுதான் இப்ப ஆரம்பம் ஆயிருக்கு இது இன்னும் அதிகமாகி கட்சி இன்னொரு பிளவை நோக்கி போய்க்கொண்டு இருக்கிறது என்பது நிதர்சனமான உண்மை"

**"ஒற்றுமையாக இருக்க வழியே இல்லையா"**

"ஒற்றுமையாய் இருக்க விட்டால்தானே"

"என்ன சொல்றீங்க"

"உரலுக்கு இரண்டு பக்கம் இடி ஆனால் அதிமுகவுக்கு மூன்று பக்கம் இடி"

**"எப்படி சொல்றீங்க"**

"முதல்ல பா.ஜ.க.வின் உள்குத்து"

"இது என்ன புதுசா இருக்கு"

"அரசியல் நோக்கர்கள் அடிக்கடி சொல்லி வந்ததுபோல அதிமுகவை பாஜக மெல்ல மெல்ல ஆக்கிரமித்து அந்தக் கட்சியை இந்த நிலைமைக்கு கொண்டு வந்து விட்டார்கள் கூட்டணியில் இருக்கும்போதே கட்சியின் முக்கிய பிரதிநிதியும், ஓபிஎஸ் ஆதரவாளருமான சோழவந்தான் மாணிக்கம் பாஜகவில் சேருகிறார்."

"இது தொடரும் என்கிறார்கள் அரசியல் விமர்சகர்கள்"

**"அப்ப மத்த இரண்டு இடி தி.மு.க,சசிகலா பக்கத்திலிருந்து சரிதானே"?**

"பரவாயில்லே..நீங்களும் யோசிக்க ஆரம்பிச்சிட்டீங்க"

என்று முதுகில் தட்டிக் கொடுத்துவிட்டு கிளம்பினார் கபாலிகான்.

தன்னுடைய படைப்பாற்றலால் துவண்டு கிடந்த நாடகக் கலையை தூக்கிப் பிடித்தவர் கோமல் சுவாமிநாதன். அவரது தண்ணீர் தண்ணீர் நாடகம் ஒன்று போதும் சமூகத்தின் மீது அவருக்குள்ள அக்கறையை வெளிப்படுத்த. அத்தகைய புகழ்பெற்ற நாடக படைப்புலக சிற்பி கோமல் சுவாமிநாதனின் புகழுக்கு மகுடம் சூட்டும் விதமாக அவரது மகள் தாரிணி இருந்து வருகிறார்.

தனது தனது தந்தையின் நாடகங்களை மீண்டும் மேடையில் கொண்டுவந்து நாடகக் கலைக்கு புத்துயிர் ஊட்டும் பணியில் தன்னை முழுமையாக ஒப்படைத்துக் கொண்ட சாதனைப் பெண்மணி தாரணி.

# நாடு எங்கே போய் கொண்டிருக்கிறது?

துடுப்பதி ரகுநாதன்



**ச**மீப காலமாக தினசரி பத்திரிகைகளை பார்க்கவே பயமாகவும் வேதனையாகவும் இருக்கிறது!

'நீட்' எக்ஸாமிற்கு ஒரு அண்ணன் ஏற்கனவே தமிழ் நாட்டில் உண்டு!

அதன் பெயர் ஐஐடி!

சமீபத்தில் தமிழ் நாடு தலைநகர் சென்னை ஐஐடியில் நிர்வாகத்தின் 58 வது ஆண்டு பட்டமளிப்பு விழா இணையத்தின் வாயிலாக நடைபெற்றது. தமிழ்த்தாய் வாழ்த்து பாடலைக் கூட அங்கு புறக்கணித்து விட்டு, ஆங்கிலத்தில் உறுதிமொழி எடுத்து விட்டு, அங்குள்ள மாணவர்கள் சமஸ்கிருதத்தில் மந்திரங்களை சொல்லுகிறார்கள்!

தமிழ் நாட்டில் பிறந்த தாழ்த்தப் பட்ட, பிற்படுத்தப் பட்ட, மிகவும் பிற்படுத்தப் பட்ட எந்த ஜாதியை சேர்ந்தவர்களாவது இந்த ஐஐடியில் படித்து உயர்ந்த நிலைக்கு வந்த மாணவர்கள் எத்தனை பேர்கள் உங்களுக்கு தெரிந்தவர்கள் இருக்கிறார்கள் என்று நினைத்துப் பாருங்கள்! அப்படி யாரும் இருக்க மாட்டார்கள்!

காரணம் மெரிட் என்று அவர்கள் சொல்லி விடுவார்கள்!

மெரிட் என்று அவர்கள் பின்னும் வலையில் சில குறிப்பிட்ட இன மீன்கள் தான் சிக்கும்! சிந்திக்கத் தெரிந்தவர்களுக்கு அது தெரியும்!

தமிழ் நாட்டில் பிச்சைக்கார பசங்களும், தொட்டால் தீட்டு என்று ஒதுக்கப் படும் ஜாதி பசங்களும் கூட இன்று டாக்டர்கள் இருக்கிறார்கள்! அதற்கு மூல காரணம் என்று எடுத்துக் கொண்டால் இந்த பெரியாரும், காமராசரும் தான்! அவர்களை ஒரு காலத்திலும் பெரியவர்கள் மன்னிக்க மாட்டாங்க!...



அப்பொழுது ஏற்பட்ட குறையை இனியாவது போக்க வேண்டும் என்று ஏவி விட்ட அஸ்திரம் தான் இந்த நீட்! அது தொடர்ந்து வந்து கொண்டே போனால் எதிர்காலத்தில் இன்று ஐஐடியில் எத்தனை கீழ் ஜாதி மாணவர்கள் இருக்கிறார்களோ, அத்தனை பேர் தான் தமிழ் நாட்டில் டாக்டர்களாக இனி வர முடியும்!

ஏழை எளிய தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த அறிவுள்ள மாணவர்கள் டாக்டர்களாக வரும் முயற்சியை ஏதாவது ஒரு வழி கண்டு பிடித்து அதை தடுக்க யார் முயற்சி செய்தாலும், அதை எதிர்த்து போராடும் தமிழ் நாடு அரசுக்கு நாம் தான் ஆதரவு தர வேண்டும்!

ஏழை எளிய தாழ்த்தப்பட்ட மக்களும் டாக்டர்களாக வர வேண்டும் என்று இன்றைய தமிழ் நாடு அரசு நினைப்பதை புரிந்து கொள்ளாமல் போனால் யாருக்கு நஷ்டம்?

லக்னோவில் நவம்பர் 21 அன்று நடந்த டி.ஜி.பிக்கள் மாநாட்டில் வட மாநிலங்களிலிருந்து வந்திருந்த டி.ஜி.பி க்கள் பலர் ஆங்கிலத்தில் பேசியபோது, தமிழக டி.ஜி.பி சைலேந்திர பாபு, பத்து நிமிடங்களுக்கும் மேலாக அந்த மாநாட்டில் இந்தி மொழியில் பேசியிருக்கிறார்!

பாரதத்தின் முதல் பிரதமர் ஜவகர்லால் நேரு அவர்கள் பிற மொழி பேசும் மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் தான் இந்திய தொடர்பு மொழி என்று கொடுத்த வாக்குறுதியை மத்திய அரசு கடைப் பிடிக்க வேண்டும் என்று இந்தித் திணிப்பைத் தொடர்ந்து எதிர்க்கும் தமிழகத்திலிருந்து சென்ற அவர் அப்படி ஏன் இந்தியில் பேசினார் என்பது தான் யாருக்கும் புரியவில்லை! தமிழக டி.ஜி.பி சைலேந்திர பாபு, நல்ல நிர்வாக திறமையுள்ள நல்ல மனிதர் என்ற பெயர் பெற்றவர்! இந்த பரபரப்பு செய்திக்கு என்ன காரணம் என்பது சமீப காலத்தில் பத்திரிகைகளில் அடிபடும் ஒரு புரியாத புதிர்!

இந்த வருடம் கோவை சரகத்தில் மட்டும் போக்சோ சட்டத்தின் கீழ் 326 வழக்குகள் பதிய பட்டு, 414 பேர்கள் கைது செய்யப் பட்டுள்தாக டி. ஐ..ஜி வெளியிட்டுள்ளதாக ஒரு பத்திரிகைச் செய்தி!

அடுத்து அடுத்து நிறைய செய்திகள் அந்தப் புதிய சட்டமான போக்சோ சட்டம் தொடர்பான செய்திகளாகவே பத்திரிகைகளில் இருந்தன!

குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் பெருகிக் கொண்டே போனதால் 2012 வந்த ஒரு புதிய சட்டம் தான் இந்த போக்சோ சட்டம்!

அந்த சட்டம் நடைமுறைக்கு வந்த பின், தமிழ் நாட்டில் மட்டும் 2021 ஜூன் வரை 7158 வழக்குகள் இந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்யப் பட்டுள்ளன. இப்படி ஒரு சட்டம் இருப்பது பொது மக்கள் பலருக்கு இன்னும் தெரியாது!

சமீபத்தில் பத்திரிகைகளில் வந்த இந்த சட்டம் தொடர்பான சில செய்திகளின் சிறிய தலைப்புகளை மட்டும் கீழே தருகிறேன்.

- ❖ தலைமை ஆசிரியரை கைது செய்ய கோவை எம். பி. வலியுறுத்தல் மாணவியின் தற்கொலையில் நீடிக்கும் மர்மம் உறவினர்கள், மாணவர்கள் போராட்டம்.
- ❖ மாணவி தற்கொலை. பா.ஜ.க ஆர்பாட்டம்.
- ❖ மாணவியின் பெற்றோரிடம் கலெக்டர் பேச்சு வார்த்தை.
- ❖ மாணவி தற்கொலை விவகாரம் மாதர் சங்கம் போராட்டம்.
- ❖ மாணவி தற்கொலை ஆசிரியர் கைது.
- ❖ சிவசங்கர் பாபா மீது மேலும் ஒரு போக்சோ வழக்கு பதிவு.
- ❖ மாணவி தற்கொலை வழக்கில் பள்ளி முதல்வர் கைது.
- ❖ இந்த செய்திகளைப் படிக்கப் படிக்க மிகவும் வேதனையாக இருந்தது.
- ❖ பள்ளியில் படிக்கும் மாணவிகள் மேல் இவ்வளவு பாலியல் தாக்குதல்களா?

இப்படி நடப்பது எதனால்?..ஏன்?....

எழுபது வருடங்களுக்கு முன்பு இறந்து போன என் பாட்டி நினைவுக்கு வந்தாள். அவள் படிக்காத ஒரு கைநாட்டுப் பேர்வழி !

க்கம் பக்கம் வசிக்கும் பெண்கள் தங்கள் வயசுக்கு வந்த பெண் குழந்தைகள் தொடர்பாக எங்க பாட்டியிடம் வந்து தான் ரகசியமாக ஆலோசனை கேட்பார்கள்.

பக்கத்தில் நிற்கும் சிறுவனான நான் பலமுறை அதைக் கேட்டிருக்கிறேன். .அவள் அடிக்கடி இப்படிச்



சொல்வாள்.

“பெண் வயசுக்கு வந்திட்டா.. வயிற்றில் நெருப்பை கட்டி வைத்திருக்கிற மாதிரி அவளை கவனமாகப் பார்த்து... வளர்த்து.. ஒருத்தன் கைகளில் பிடிச்சு கொடுக்கும் வரை பார்த்துக் கொள்ள வேண்டியது பெற்றவள் பொறுப்பு!” என்று.

அந்தக் காலத்தில் எனக்கு பத்து பனிரண்டு வயசில் அதற்கு சரியான அர்த்தம் தெரியாது!

காலப் போக்கில் பெண் குழந்தை வயசுக்கு வந்து வளர்ந்து டீன் ஏஜ் பருவத்திற்கு வந்து விட்டால், ஹார்மோன்கள் செயல் பாட்டால் ஏதாவது தவறான வழியில் சென்று விடாமல் கவனமாகப் பார்த்துக் கொள்வது பெற்றவள் கடமை என்று பாட்டி சொல்வதாக பின்னர் புரிந்து கொண்டேன்!

பாரதி சொன்ன கற்பு என்பதை பொதுவில் வைப்போம்! என்பதை படித்த பிறகு, ஆண், பெண் பேதமின்றி எல்லாக் குழந்தைகளும் அவர்கள் டீன் ஏஜ் பருவத்தை கடக்கும் வரை, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் மேல் கவனம் செலுத்தி தவறான பாதையில் அவர்கள் கவனம் திரும்பாமல் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்பதை உணர்ந்து கொண்டேன்!

இன்று 95% பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்காக பணம் செலவு செய்ய தயாராக இருக்கிறார்களே தவிர, அவர்களோடு நேரத்தைச் செலவு செய்ய தயாராக இல்லை! வயசுக்கு வந்த பெண்ணுக்கு தோழியாக அவள் தாய் நடந்து கொண்டால் இதில் பாதி பிரச்னை ஒழிந்து விடும்! அடுத்து கால போக்கில் நம் கல்வியில் ஏற்பட்ட மாற்றங்கள் இதற்கு முக்கிய காரணமாக அமைந்து விட்டது!

தொடரும்...

# பெற்றோர் என்றும் பெற்றவர்களே!

பணி முடிந்து வெகு தொலைவு பயணம் செய்து களைப்புடன் திரும்பிய நான் என் மனைவியை கடும் காய்ச்சலுடன் படுக்கையில் படுத்திருக்கக் கண்டேன்.

எனக்காக அந்த ஜுரத்திலும் சமையல் செய்து உணவை ட்ரேயில் வைத்து மூடி வைத்திருந்தாள்.

நான் வழக்கமாக உண்ணும் எல்லாவற்றையும் சமைத்து வைத்திருந்தாள்.

அவளுக்கு தான் என் மேல் எவ்வளவு கரிசனம். உடல் நலம் சரியில்லாத நேரத்தில் கூட எனக்காக சமைத்து வைத்திருக்கிறாளே.

சாப்பிட அமர்ந்த பின் தான் ஏதோ குறைவதை உணர்ந்தேன்.

டிவி பார்த்துக் கொண்டிருந்த என் வளர்ந்த மகளிடம் செல்லம் என் மாத்திரையையும் தண்ணீரும் எடுத்துக் கொண்டு வா என்று கூறினேன்.

அவளை நான் தொந்தரவு செய்ததை விரும்பாமல் கண்ணை உருட்டி அவள் அதிருப்தியைத் தெரிவித்து விட்டு நான் கேட்டதைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

ஒரு நிமிடம் கழித்து சாம்பாரில் உப்பு குறைவாக இருந்ததால் அவளை எடுத்துக் கொண்டு வரப் பணித்தேன்.

அவள் சை என்று கூறிக் கொண்டே காலை அழுத்தமாக வைத்து நடந்து போய்க் கொண்டு வந்து கொடுத்தாள்.அவ்வாறு அவள் செய்தது நிச்சயம் நான் அவளைத் தொந்தரவு செய்ததை அவள் விரும்பவில்லை என்று எனக்குத் தெரிந்தது.

நான் சில நிமிடம் கழித்து மீண்டும் செல்லம் என்று அழைத்த போது அவள் கையில் இருந்த டிவி ரிமோட்டை பட்டென்று மேஜையில் வைத்து விட்டு அப்பா உங்களுக்கு



இப்போது என்ன வேண்டும்?

எத்தனை முறை தான் என்னை எழுப்புவீர்கள்?

நானும் தான் நாள் முழுதும் வேலை பார்த்து விட்டு வந்திருக்கிறேன்.

எனக்கும் களைப்பாக தான் இருக்கிறது என்று கூறினாள்.

நான் ஸாரிமா என்று சொல்லி விட்டு சாப்பிட்ட பாத்திரங்களை எடுத்து சமையலறை சிங்கில் போட்டுவிட்டு என் கண்களில் இருந்து உருண்டோடிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டேன்.

என் இதயம் அழுதது.

நான் அவ்வப்போது எனக்குள் கேட்டுக் கொள்ளும் கேள்வி இது தான்.

இந்தக் கால இளைய தலைமுறையினர் ஏன் இது போல் நடந்து கொள்கிறார்கள்?

நாம் அவர்களுக்கு அளவுக்கு அதிகமாக சுதந்திரம் கொடுத்தது தவறோ?

அவர்களுக்கு நல்லொழுக்கத்தையும் பண்பாட்டையும் கற்றுக் கொடுக்கத் தவறி விட்டோமோ? நாம் அவர்களை நண்பர்கள் போல் நடத்தியது தவறோ? அவர்களுக்கு வாழ்க்கையில் ஆயிரம் நண்பர்கள் கிடைப்பார்கள்.

ஆனால் பெற்றோர்கள் நாம் மட்டும் தானே. பெற்றோருக்கான கடமையை நாம் செய்யாவிட்டால் வேறு யார் செய்யப் போகிறார்கள்?

இன்று பிறந்த குழந்தைக்குக் கூட சுயமரியாதை இருப்பதைப் பற்றிக் கவலைப் படுகிறது இந்த உலகம்.

ஆனால் பெற்றோர்களுக்கு மட்டும் சுயமரியாதை இல்லையா?

அவர்கள் தங்கள் குழந்தைகளின் ஈகோக்களை வளர்த்து விட்டுக் கொண்டே இருக்க வேண்டுமா? இன்றைய பெரும்பாலான பெற்றோர்கள் கூறுவது இதைத்தான்.



இந்தக் காலத்தில் எந்தக் குழந்தைகள் பெற்றோருக்குக் கீழ்படிகிறார்கள்? இதற்குக் காரணம் என்ன? இதேபோல் தான் அன்று ஒரு பார்ட்டியில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த போது என் 50 வயது நண்பர் தன் கார் சாவியை மறந்து போய்க் காரிலேயே விட்டு விட்டு வந்து விட்டதால் தன் டீன் ஏஜ் பெண்ணை எடுத்துக் கொண்டு வரப் பணித்தார்.

அவள் நான் என்ன உனக்கு வேலைக்காரியா?

நீயே போய் எடுத்துக் கொள் என்றாள்.

அவரும் சிரித்துக் கொண்டே இல்லை மா நான் தான் உனக்கு வாழ் நாள் முழுவதும் சேவகன் என்று கூறிக் கொண்டே போய் கார் சாவியை எடுத்துக் கொண்டு வந்தார்.

இதுவே இன்று சமுதாயத்தில் நடக்கிறது. இதற்குக் காரணம் என்ன?

நாம் நமது குழந்தைகளுக்கு தன்னம்பிக் கையைப் பற்றியும் சுயமரியாதையைப் பற்றியும் கற்றுக் கொடுக்க விரும்பினால் முதலில் இதைக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

அவர்கள் வாழ்க்கையில் எவ்வளவு பணக்காரர்களாகவும் புகழ் பெற்றவர்களாகவும் இருந்தாலும் அவர்களுடைய பெற்றோர்கள் என்றும் பெற்றோர்கள் தான்.

அவர்கள் என்றுமே அவர்கள் பெற்றோருக்கு சமமாக மாட்டார்கள். பெற்றோருக்கு நான் சொல்ல விரும்புவது இது தான். நீங்கள் உங்கள் குழந்தைகளை நண்பர்களாக நடத்தாதீர்கள்.



அவர்களுக்கு வாழ்க்கையில் ஆயிரம் நண்பர்கள் கிடைக்கலாம். ஆனால் பெற்றோர்கள் நீங்கள் மட்டுமே. அதனால் அவர்களை நீங்கள் வளர்ப் பதற்கு விதிமுறைகளை வகுப்பதற்கும்,

அந்த விதிமுறைகளை அவர்கள் மதிப்பதற்கு அவர்களைக் கட்டாயப் படுத்துவதற்கும் ஒரு போதும் அஞ்சாதீர்கள்.

திரு. நாராயண மூர்த்தி INFOSYS அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரை.

**-அனுப்பியர்: பட்டூர் பழனியப்பன்**

# சோற்றில் கை வைக்கும் முன் சற்றே யோசி!



எஸ்.ஜானகி

சோறுவரும்வழி:


- வயல் காட்டைச் சீர்செய்தல்
- ஏர் பிடித்தல்
- உழவு ஓட்டுதல்
- பரம்படித்தல்
- விதை நெல் சேகரித்தல்
- விதை நேர்த்தி செய்தல்
- விதைகளை நீரில் ஊற வைத்தல்
- நாற்றங்காலில் விதைத்தல்
- நாற்றாக வளருதல்
- நாற்று எடுத்தல்
- முடிச்சு கட்டுதல்
- வயல் நிலத்தில் முடிச்சு வீசுதல்
- நடவு நடுதல்
- களையெடுத்தல்
- உரமிடுதல்
- எலியிடம் தப்புதல்
- பூச்சியிடமிருந்து பாதுகாத்தல்
- நீர் தட்டுப்பாடு இன்றி வளருதல்
- கதிர் முற்றுதல்
- கதிர் அறுத்தல்
- கட்டு கட்டுதல்
- கட்டு சுமந்து வருதல்
- களத்துமேட்டில் சேர்த்தல்
- கதிர் அடித்தல்
- பயிர் தூற்றல்
- பதறுபிரித்தல்
- மூட்டை கட்டுதல்
- நெல் ஊறவைத்தல்
- நெல் அவித்தல்
- களத்தில் காயவைத்தல்
- மழையிலிருந்து பாதுகாத்தல்
- நெல் குத்துதல்
- நொய்யின்றி அரிசியாதல்
- அரிசியாக்குதல்
- மூட்டையில் பிடித்தல்
- விற்பனை செய்தல்
- எடை போட்டு வாங்குதல்
- அரிசி ஊறவைத்தல்
- அரிசி கழுவுதல்
- கல் நீக்குதல்
- அரிசியை உலையிடல்
- சோறு வடித்தல்
- சோறு சூடு தணிய வைத்தல்
- சோறு இலையில் இடல்

இத்தனை தடைகளைத் தாண்டி வந்த சோற்றை நாம் முழுவதும் உண்ணாமல் வீணாக்குவது உலகமகா பாவம்.

உண்ணும் முன் உணருவோம்,

அந்த உணவு நம் இலைக்கு வந்த பாதையையும், அதன்பின்னுள்ள

உழவனின் உழைப்பையும்.!






# புதுச்சேரியில் நடந்த தமிழ்ச் சங்க விழா: பாரதிதாசன் பேரன்கள் பங்கேற்பு!

புதுவையில் உலக கவிஞர்கள் சங்கம் சார்பில் புதுவைத் தமிழ்ச் சங்கத்தில் விருது மற்றும் பரிசளிப்பு விழா நடந்தது. உலககவிஞர்கள் சங்க நிறுவனர் திரு.கிருஷ்ணகுமார் அவர்கள் இவ்விழாவினை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

இதில் புதுவை அரசு கொறடா ஆறுமுகம் ஐயா அவர்கள் மற்றும் அமைச்சர் சாய் சரவணன் அவர்கள் மற்றும் பாரதிதாசனின் பேரன் கவிமாமணி பாரதி அவர்கள் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர் கவிஞர்களுக்கு விருதுகளையும் பரிசுகளையும் வழங்கி கவுரவித்தனர். வானம்பாடி கவிஞர் பழனி பாஸ்கர் கவிஞரும் எழுத்தாளரும், மித்ரா டைம்ஸ் செய்தி இணையாசிரியருமான கவிஞர் சுகந்தீனா தேசிய விருதாளர் மண்ணாங்கட்டி மற்றும் பல கவிஞர்களுக்கும் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.உலக கவிஞர்கள் சங்க நிறுவனர் கிருஷ்ணகுமார் அவர்கள் கருணை உள்ளம் கொண்டு ஏழை எளியவர் களுக்கும் முதியோர்களுக்கும் இயலாதவர்களுக்கும் உதவிகளை செய்து வருகிறார் மற்றும் குருதி கொடை வள்ளலான இவர் இதுவரை 18 தடவை ரத்ததானம் வழங்கி உள்ளார். தற்போதும் ஒரு இரத்ததான முகாமிற்கு மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார் என்பதை அறிந்து கொண்டோம். இவரின் சமூக பணி பாராட்டுதற்குரியது. குருதி கொடை வள்ளல் கிருஷ்ணகுமார் அவர்களுக்கு அவரின் கருணையுடன் கூடிய சமூகப் பணி தொடர மித்ரா டைம்ஸ் பெருமையுடன் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறது.



புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் மைந்தர் தமிழ்மாமணி மன்னர்மன்னன் அவர்களின் 94 வது பிறந்த நாள் விழா புதுச்சேரி ஜெயராம் உணவகம் மதுரா அரங்கத்தில் நடந்தது இந்நிகழ்ச்சியை மன்னர்மன்னன் அவர்களின் புதல்வர் கவிமாமணி செல்வம் அவர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

இந்நிகழ்ச்சியில் காங்கிரஸ், என்ஆர் காங்கிரஸ், திமுக உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் பங்கேற்றனர். சபாநாயகர் ராஜவேலு அவர்கள் மன்னர்மன்னன் அறக்கட்டளையை தொடங்கி வைத்தார். தகுதியான கவிஞர்களுக்கு விருதுகளும் பரிசுகளும் வழங்கி கவுரவிக்கப்பட்டது. புதுவை பள்ளி மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடந்தது. நிகழ்ச்சியில் புதுவை மற்றும் தமிழ்நாடு அரசு பாரதியார் நினைவு நூற்றாண்டை சிறப்பாக கடைபிடிக்கவேண்டும்.

புதுச்சேரியில் தமிழ்வளர்ச்சித்துறை அமைக்க வேண்டும். தமிழ்நாடு அரசு புதுவை கவிஞர்கள் எழுத்தாளர்களையும் சிறப்பிக்க வேண்டும்.புதுவை அரசு நமது மாநில படைப்பாளர்கள் தமது படைப்புகளை வெளியிட நிதி உதவி செய்ய வேண்டும். புதுவை அரசு தமிழ்மாமணி மற்றும் இதர விருதுகளை வழங்க வேண்டும். புதுவையின் தமிழ்மாமணி மன்னர்மன்னன் வாழ்ந்த வழுதாவூர் சாலைக்கு அவர் பெயர் சூட்டப்பட வேண்டும். புதுவை மற்றும் நாடு அரசு மன்னர் மன்னன் பெயரில் ஆண்டுதோறும் சிறந்த வானொலி ஊடக விருது வழங்க வேண்டும் ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. மன்னர் மன்னன் அறக்கட்டளையின் மூலம் தங்களின் கலைப் பணியும் சமூகப்பணியும் தமிழ்ப்பணியும் மென்மேலும் சிறக்க மித்ரா டைம்ஸ் அன்போடு வாழ்த்துகிறது!

**டி.எஸ். கவின், பண்ருட்டி**

# கணவன் இருக்கும்போதே விதவை பென்ஷன் கேட்ட பெண்!

## திரு.ஞானசேகரன் ஐ.ஏ.எஸ் அனுபவம்!

தலைசிறந்த இயக்குனரும், ஐ.ஏ.எஸ். அதிகாரியுமான ஞான ராஜசேகரன் தனக்கு நேர்ந்த அனுபவங்களைப் புத்தகமாக எழுதி வருகிறார்.. அதில் இருந்து சில பகுதிகளை முக நூலிலும் தந்து வருகிறார். சமீபத்திய பதிவு இது...



தமிழ்நாட்டு மக்கள் அரசாங்கத்தை அணுகுவதற்கும் கேரள மக்கள் அரசாங்கத்தை அணுகுவதற்கும் மிகப் பெரிய வித்தியாசம் இருக்கிறது. கேரளாவில் பாமர மக்களுக்கு இருக்கின்ற பொது அறிவு நம்மை வியப்பில் ஆழ்த்தி விடும். நான் 1985 இல் பாலா சப் கலெக்டராக இருந்தபோது ஒருநாள் ஒருவர் என்னை அவசரமாகப் பார்க்க வேண்டுமென்று என் ஆபீசுக்கு வந்திருந்தார். நான் அவரை உள்ளே வரச் சொன்னேன்.

'என்ன விஷயம்?' என்று கேட்டேன். அவர் பதற்றத்தோடு விவரித்தார். "நான் தலையோலப்பறம்பு கிராமத்தில் இருந்து வருகிறேன். அங்கே ஒரு மிகப்பெரிய தவறு நடந்திருக்கிறது. அந்த ஊரில் விதவையே ஆகாத ஒரு பெண்ணுக்கு விதவைப்பென்ஷன் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பெண்ணோட பேரு தங்கம்மா" இப்படி அவர் சொன்னதும், நான் கேட்டேன் "நீங்க யாரு? உங்களுக்கு இந்த விஷயம் எப்படித் தெரியும்?" என்று.



அவர் மிகவும் சாதாரணமாகச் சொன்னார் "அந்தத் தங்கம்மாவின் கணவரே நான்தான்" என்று. எனக்குத் தூக்கி வாரிப் போட்டது.

கணவர் உயிரோடு இருக்கும்போது அவர் இறந்து விட்டார் என்று பொய் சொல்லி ஒரு பெண் விதவை பென்ஷன் வாங்குவது அரசாங்கத்தை ஏமாற்றும் வேலை இல்லையா? இது ,ஒரு சமூக நலத் திட்டத்தைக் கேலிப் பொருளாக்குவது இல்லையா? உடனே தாசில்தாரை வரவழைத்தேன். அவர்தான் விதவைப் பென்ஷன் சாங்ஷன் செய்த அதிகாரி. அவரும் பதறிப் போய் விட்டார். தலையோலப் பறம்பு வில்லேஜ் ஆபீசரின் விசாரணை ரிப்போர்ட்டின் அடிப்படையில்தான் சாங்ஷன் செய்ததாக அவர் சொன்னார்.

தவறாக ரிப்போர்ட் கொடுத்த வில்லேஜ் ஆபீசரை உடனே சஸ்பெண்ட் செய்ய ஆணை பிறப்பித்தேன். ஒரு குறிப்பிட்ட தேதியில் புகார் செய்த கணவர், தங்கம்மா, வில்லேஜ் ஆபீசர், தாசில்தார் அனைவரையும் வரச் சொன்னேன்.

அந்தத் தேதியும் வந்தது .சம்பந்தப்பட்ட எல்லோரும் வந்திருந்தார்கள். அந்த தங்கமாவும் வந்திருந்தாள். குட்டு வெளிப்பட்டு விட்டதே என்ற குற்ற உணர்வோடு தொங்கிய முகத்துடன் வருவாள் என்று எதிர்பார்த்த எனக்கு அவள் தைரியமாக என் முன் வந்து நின்றது ஆச்சரியத்தைத் தந்தது. தங்கம்மாவின் மீதுள்ள குற்றச்சாட்டின் அடிப்படையே புகார் கொடுத்தவர் அவள் கணவரா? இல்லையா? என்பதுதான். அதை முதலில் அறியவேண்டும் என்று தீர்மானித்த நான், அந்தப் பெண்மணியிடம் கேட்டேன் "இவர் உன் கணவர்தானே ?'' தங்கம்மா எந்த தயக்கமும் இல்லாமல் பதில் சொன்னாள் " ஆமாம்" .

நான் சற்று உணர்ச்சிவசப்பட்டுப் பேசத்தொடங்கினேன்."ஏம்மா நான் தமிழ்நாட்டில் இருந்து .வந்திருக்கிறேன் . எங்கள் கிராமத்தில் பெண்களிடம் அவர்களது புருஷன் பெயரைக் கேட்டால் நேரடியாகப்பதில் சொல்ல மாட்டார்கள். புருஷன் பெயர் முருகன் என்றால் ஜாடை மாடையாக மயில் மேல இருக்கிறவர்னு சொல்வாங்க.அப்படிப்பட்ட ஊரில் இருந்து நான் வருகிறேன் .புருஷன் உயிரோடு இருக்கும் போது வெறும் 75 ரூபாய் கிடைக்கிறதுக்காக அவர் செத்துவிட்டார்

என்று சொல்வதற்கு எப்படிம்மா மனசு வந்தது ?முதல்ல அதை எனக்கு விளக்குங்க!" உருக்கமாக நான் கேட்டேன்.

தங்கம்மா யாதொரு கலக்கமும் இன்றி என்னைக் கேட்டாள் "அரசாங்கம் ஏன் இந்த விதவைப் பென்ஷன் கொடுக்கிறது? விதவைன்னா என்ன அர்த்தம்? நிராதரவான பெண் என்பதுதானே? நான் ஒரு நிராதரவான பெண்தான்" என்று சொல்லிச் சற்று நிறுத்திவிட்டு மேலும் தொடர்ந்தாள்.

"எப்படின்னு கேட்கிறீங்களா? இந்த ஆள் என்னை விட்டுவிட்டுப் போயி எட்டு வருஷம் ஆகுது கோழிக்கோட்டில் ஒரு பெண் கூட எட்டு வருஷமாக இந்தாள் வாழ்ந்து கொண்டிருக்கிறார் எங்கள் ஊருக்கு வருவது கிடையாது. என் குழந்தைகளைப் பார்க்கிறது கிடையாது அதனால என்னைப் பொறுத்தவரையில் இந்த ஆளு செத்துப் போனவன் தானே? நான் நிராதரவான பெண்தானே? சொல்லுங்க சார் சொல்லுங்க" தங்கம்மாவின் கேள்விகள் ஒவ்வொன்றும் ஆணித்தரமாக வெளிவந்தன.

புகார் கொடுத்த ஆள் அப்போது நெளிவதை நான் கண்டேன். அதற்குப் பிறகு தங்கம்மாள் ஒரு கேள்வி கேட்டாள், என்னை நேரடியாகப் பார்த்து," உங்கள் சட்டம் என்ன சொல்லுது? ஒருவன் ஏழு வருஷம் காணாமல் போனால்அவனை செத்தவனாகக் கருதலாம்னு சொல்லுது .இல்லையா? அதனால சட்டப் பிரகாரம் இவன் எனக்குச் செத்துப் போனவன்தான்.நான் விதவை தான் சார்" என்று பேசி முடித்தாள்.

எனக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. ஒருவன் ஏழு வருஷம் காணாமல் போனால் அவனைச் செத்தவனாகச் கருதலாம் என்று எவிடென்ஸ் ஆக்ட் சொல்கிறது .அந்த சட்ட விதிகள் எல்லாம் தங்கம்மாவை எப்படியோ சென்றடைந்து இருக்கிறது. வேறு எந்த மாநிலத்திலாவது இப்படி ஒரு சாமானியப் பெண்மணி சட்டவிதிகளைச் சொல்லி புருஷன் உயிரோடு இருக்கும் போதே அவன் செத்ததற்குச் சமம் என்று வாதிட்டு இருக்க முடியுமா ?



தங்கம்மாவின் வாதம் எனக்கு நியாயமாகப் பட்டது. ஆனால் அப்போதுள்ள பென்ஷன் விதிகளின்படி நான் தீர்ப்பு எழுதினால் அது தங்கம்மாவுக்குச் சாதகமாக அமையாது. அவளது விதவை பென்ஷனை நான் ரத்து செய்தாக வேண்டும்.

அது மனிதாபிமானத்துக்கு எதிராக இருக்கும் என்று நான் உணர்ந்தேன். எனவே பென்ஷன் விதிகளில் மாற்றம் செய்ய அரசாங்கத்துக்கு ஒரு கடிதம் எழுதினால் என்ன என்று தோன்றியது.

தங்கம்மாவின் சூழ்நிலையை விவரித்து விட்டு "இவரைப் போன்ற பெண்களுக்கு ஆதரவு கொடுத்தால் தான் விதவைப் பென்ஷன் ஏற்படுத்தியதன் உண்மையான பலன் கிடைக்கும். அதற்கு விதவைப் பென்ஷனுக்கான விதிமுறைகளில் சில மாற்றங்கள் செய்ய வேண்டும். யாரெல்லாம் விதவையாகக் கருதப்பட வேண்டும் என்கிற விதிமுறைகளில் ஒரு பெண்ணின் கணவன் ஏழு வருடங்களுக்கு மேல் காணாமல் போயிருந்தால் அந்தப் பெண்ணும் விதவையாகக் கருதப்பட வேண்டும் என்பதையும் சேர்த்து தங்கம்மாவைப் போன்ற நிராதரவான பெண்களுக்கும் விதவைப்பென்ஷன் அனுமதிக்கப்பட வேண்டும்" என்று அரசாங்கத்திற்கு கடிதம் எழுதினேன்.


கேரள அரசாங்கத்தின் சிறப்பு என்னவென்றால் இதுபோன்ற மனிதாபிமான விஷயங்களில் அனுகூலமான முடிவுகளை உடனுக்குடன் எடுப்பதுதான். என் கோரிக்கை ஏற்கப்பட்டு விதவைப் பென்ஷன் விதிமுறைகளில் மாற்றத்தை அரசாங்கம் அறிவித்தது.

அரசாங்கம் விதிமுறைகளில் மாற்றம் கொண்டு வந்ததால் தங்கம்மாவுக்கு பென்ஷன் தொடர்ந்து அளிக்கப்பட்டது. எதிர்காலத்தில் தங்கம்மா போன்று நிராதரவான நிலைக்குத் தள்ளப்படும் பெண்களுக்கும் விதவை பென்ஷன் உறுதி செய்யப்பட்டதுதான் எனக்கு மனநிறைவைத் தந்தது. அதிகாரியாகப் பணிபுரியும் போது நம் முயற்சியால் ஆதரவற்றவர்களுக்கு ஏதேனும் நன்மை கிடைக்குமானால் அதை விட நமக்கு மகிழ்ச்சி அளிப்பது வேறு இருக்க முடியாது. கண்ணகி தன் கணவன் கோவலன் கொல்லப்பட்ட போது கையில் சிலம்புடன் வந்து பாண்டிய மன்னனிடம் நீதி கேட்டாள்.

தலையோலப் பறம்பு தங்கம்மா கணவன் உயிரோடு இருக்கும்போதே அவனைச் இறந்தவனாக ஏன் கருதக் கூடாது என்று அரசாங்கத்திடம் நீதி கேட்டாள். அந்த தலையோலப் பறம்பு தங்கம்மாவை என்னால் என்றைக்குமே மறக்க முடியாது!

**– முகவரி ரமேஷ்**

# இந்திய ரூபாய் நோட்டுகளும் நினைவுச் சின்னங்களும்



எஸ்.சூர்யா



# காஜூ பனீர் பர்பி




**தேவையான பொருட்கள்:**

*1. பால் - 1 லிட்டர்*

*2. சர்க்கரை - 300 கிராம்*

*3.முந்திரி - 150 கிராம்*

*4. காய்ச்சிய பால் - 1 டம்ளர்*

*5. பாதம் - 50 கிராம்*

*6 . பிஸ்தா - 50 கிராம்*

*7.லெமன் அல்லது வினிகர் - 2 ஸ்பூன்*

***செய்முறை:*** *முதலில் 150 கிராம் முந்திரியை பாலில் 1 மணி நேரம் ஊற வைத்துக் கொள்ளவும். பிறகு ஒரு கிண்ணத்தில் 1 லிட்டர் பால் ஊற்றிக் காய்ச்சவும். பால் கொதித்தவுடன் இரண்டு ஸ்பூன் லெமன் ஜுஸ் அல்லது வினிகர் சேர்க்கவும். பால் திரிந்து வந்தவுடன் நல்ல தண்ணீரில் அலசிக் கொள்ளவும். பின்பு ஒரு காட்டன் துணியில் அதைப் போட்டு நன்றாக தண்ணீரை பிழிந்து எடுத்துக் கொள்ளவும். இப்பொழுது பனீர் ரெடி. பிறகு இந்த பனீர், மற்றும் பாலில் ஊற வைத்த முந்திரி மற்றும் 300 கிராம் சர்க்கரையையும் ஒன்றாக மிக்ஸி ஜாரில் சேர்த்து பேஸ்ட் போல அரைத்துக் கொள்ளவும். பிறகு அடுப்பில் ஒரு வாணலியை வைத்து 1 டம்ளர் பால் சேர்த்து இந்த முந்திரி, பனீர் பேஸ்ட்டை சேர்த்துக் கலக்கவும். கட்டிப் பதம் வந்ததும் ஒரு சதுர வடிவ தட்டில் ஊற்றிக் கொள்ளவும். பிறகு பாதம், பிஸ்தா வை துருவி அதன் மேல் தூவி விடவும். பின்பு இரண்டு மணி நேரம் பிரிட்ஜ்ஜில் வைத்து விடவும். பிறகு வெளியே எடுத்து சதுர வடிவில் கட் செய்யவும். கீஷ்ஷ் இப்பொழுது மிக மிக சூப்பரான, அட்டகாசமான காஜூ பனீர் பர்பி ரெடி.*



**S. கவிதா,**
**சிட்லபாக்கம்**




# எம் பதில்கள்







**1.ஆய்வாளர் ராஜேஸ்வரி பற்றி!**

பெரும்பாலும் காவல் துறையில் பணியாற்றுபவர்கள் எப்போதும் தங்கள் உயிரை விட பொதுமக்களின் உயிருக்கு உத்தரவாதம் அளிப்பதில் முன்னணியில் இருப்பார்கள் அதிலும் குறிப்பாக பேரிடர் காலங்களில் தங்களது இன்னுயிரை பணயம் வைத்து மக்களை காப்பாற்றுவார்கள்.காவல்ஆய்வாளர்

ராஜேஸ்வரி தேனி மாவட்டம் பெரிய குளத்தைச் சேர்ந்தவர். எம்.ஏ வரலாறு படித்தபின், 1999ம் ஆண்டு நடந்த காவல் துறை தேர்வில் தேர்ச்சி பெற்று நேரடி எஸ்.ஐ.யாக பணிக்குச் சேர்ந்தார். தற்போது சென்னை டி.பி சத்திரம் காவல் நிலைய ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறார்.

2019ஆம் ஆண்டு அந்த சம்பவம் நடந்தது. சென்னையில் நள்ளிரவில் இரண்டு மணிக்குப் பனிக்குடம் உடைந்து பிரசவ வலியில் துடித்துக்கொண்டிருந்த கர்ப்பிணிப் பெண்ணை, தன்னுடைய காவல்துறை ரோந்து வாகனத்தில் ஏற்றிச்சென்ற ராஜேஸ்வரி, தாயையும் சேயையும் தக்க சமயத்தில் காப்பாற்றினார்.

சென்னை டி.பி சத்திரம் கல்லறை பகுதியில் மரம் விழுந்து விட்டதாக தகவல் கிடைக்க, மீட்புப் பணிக்காக

விரைந்தனர் காவல்துறையினர்ஞ் அங்கோ கல்லறையில் பணிபுரியும் ஊழியர் ஒருவர் மீது மரம் விழுந்து சுருண்டு கிடந்துள்ளார்ஞ் அந்த இளைஞர் செத்தே போய்விட்டார் என்று பலரும் நினைத்திருந்த நேரத்தில்தான், டி.பி சத்திரம் காவல் ஆய்வாளர் ராஜேஸ்வரி, இடி, மழைக்கு இடையே மின்னல் வேகத்தில் களத்தில் இறங்கினார். உதய் என்ற அந்த இளைஞருக்கு உயிர் இருப்பது தெரிய வந்த நிலையில், கொஞ்சம் கூட தாமதிக்காமல் காக்கி உடை அணிந்த தோள்களில் இளைஞரை சுமந்தார் காவல் ஆய்வாளர் ராஜேஸ்வரி. பரபரப்பான அந்த நொடிகளில் இளைஞர் உதய்யை சுமந்து வந்து ஆட்டோவில் ஏற்றி

கீழ்ப்பாக்கம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். கனிவும்,துணிவும் கொண்ட காவல் ஆய்வாளருக்கு குவியும் பாராட்டுகளோடு மித்ரா டைம்ஸ் இணைந்து வாழ்த்துகிறது.

**2.டாலர் சேஷாத்திரி மறைவு குறித்து...**

திருப்பதி சென்று ஏழுமலையானை தரிசனம் செய்யும் பக்தர்கள் நிச்சயம் டாலர் சேஷாத்ரி சந்திக்காமல் இருக்க வாய்ப்பில்லை குறிப்பாக கோயிலுக்கு வருகின்ற முக்கிய பிரமுகர்களுக்கு சேஷாத்ரி அறிமுகம் இல்லாமல் இருக்க வாய்ப்பே இல்லை

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தாலுகாவில் உள்ள சு. நாவல்பாக்கம் கிராமத்தை பூர்வீகமாக கொண்டவர் 'டாலர்' சேஷாத்ரி பெயருக்கு தகுந்தாற் போல் கழுத்தில் மிகப்பெரிய தங்க டாலர் இருக்கும். இவர் கடந்த 1978ம் ஆண்டு திருமலை திருப்பதி தேவஸ்தானத்தில் மிகவும் சாதாரண குமாஸ்தாவாகத்தான் பணியில் சேர்ந்தார். இவரது பணித்திறன், சுவாமி சேவையில் இவர் காட்டும் அர்ப்பணிப்பு போன்றவற்றால் கடந்த 2007ம் சிறப்பு அதிகாரியானார். ஆனால், ஓய்வு பெற்ற மறுநாள் முதல் அவரது பணியை தேவஸ்தானம் பதவி நீட்டித்து வந்தது.

தேவஸ்தானம் பூஜை தொடர்பாக விசாகப்பட்டினம் சென்றவர் மாரடைப்பால் மரணம் அடைந்தார் இல்லை இல்லை ஏழுமலையானை சரணடைந்தார் என்பதை அறிந்து மனம் வேதனைப் பட்டாலும் அவர் ஆற்றிய சேவைக்கு அவர் ஆத்மாவை ஏழுமலையான் சாந்தப்படுத்த வேண்டும் என்று வேண்டுகிறோம்.





**3.கருமித்தனம், சிக்கனம் இரண்டும் ஒன்றா?**

இரண்டுக்கும் சேமிப்பு என்ற நூலிழை வித்தியாசம் உள்ளது.

சிக்கனத்தை மேற்கொள்ளாத எவரொருவரும் பெரும் செல்வந்தராக முடியாது.

இன்றைய சூழ்நிலையில் தொழில் சிறப்பாக நடைபெறுகிறது.

வேலை சிறப்பாக நடைபெறுகிறது.

பணம் வருகிறது என்று எண்ணி அந்த பணத்தை சேமிக்க மறப்பீர்களேயானால் உங்கள் சூழல் மாறும்போது எதை கொண்டும் ஈடு செய்ய முடியாது.

எனவே எப்பொழுது பணம் கிடைக்க ஆரம்பிக்கிறதோ அப்போது நீ சிக்கனத்தை முன்பை விட அதிகமாக கைக்கொள்ள பழகினால்,

"நீ வாழ்வில் உயர்வாய்"

நீ அனாவசியமாய் செலவு செய்யும் பணத்தை, அது தேவைப்படும் வறியோர்க்கு, எளியோருக்கு, நல்லவர்களுக்கு கொடுத்து உதவினால், உன்னுடைய செல்வமும் பல மடங்காக பெருகும்.

கடவுள் அருளும் கிடைக்கும்.

மேலும் நீ மனதளவிலும் சந்தோசமாக உணர்வாய். சந்தோசம் நீ ஆடம்பரமாய் வாங்கும் பொருட்களில் ஒருபோதும் கிடைக்காது.

எனவே, தான தர்மம் செய், அதை நல்லவர்களுக்கு உபயோகமாய் இருக்குமாறு பார்த்துக்கொள் என்று நம் முன்னோர்கள் சொன்னதை நினைவில் கொள்வோம்.

## மறைந்து வரும் தாவர மன்மத ராசாக்கள்!

# மனித குல பேரிழப்புகள்!

முனைவர். பா. ராம் மனோகர்

மனித இனம், பல்வேறு அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சிகளைக்கண்டு, தன்னை தானே பெருமிதம் கொண்டு மகிழ்ச்சி அடையும் தகவல் யுகம்!ஆம்!நாம் உலகின் ஒரு சில பகுதிகளை தவிர, பல வளர்ச்சி அடைந்த நாடுகள், மற்றும் வளர்ச்சி பெற்று வரும் நாடுகள் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுள்ளன. ஆனால், எதிர் காலத்தில் உணவு பற்றாக்குறை வருவதற்கான நிலை ஏற்படும் வாய்ப்பு உண்டு, என அறிவியல் அறிஞர்கள் தமது ஆய்வுகளின் அடிப்படையில் தெரிவிக்கின்றனர். ஏன்? எப்படி?!

நமது பூமியில் ஏறத்தாழ 2.5 லட்சம் பூக்கும் தாவர சிற்றினங்கள் காணப்படுகின்றன. இதில் 80% தாவரங்கள் மகரந்த சேர்க்கை முறையில் விதைகள், பழங்கள் உற்பத்தி செய்கின்றன. ஆனால் கருவுறுதல் செயல்பாடு, மகரந்த சேர்க்கை நடைபெறாமல், தொடர்வதற்கு வாய்ப்பில்லை. எனினும் மகரந்த சேர்க்கை நடைபெற பல்வேறு உயிரினங்கள் உதவுகின்றன என்பது உண்மை.

உலகில் 1,20,000 முதல் 2,00000 எண்ணிக்கை கொண்ட முதுகெலும்பற்ற, முதுகெலும்புள்ள உயிரிசிற்றினங்கள், மகரந்த சேர்க்கையாளர்களாக, மன்மத செயல்களை மேற்கொள்வதில் பெரும்பங்கு வகிக்கின்றன. ஐக்கிய அமெரிக்க நாட்டில் 100 முதல் 150வகை தாவரங்களின் மகரந்த சேர்க்கைக்கு தேனிக்களும், பல விலங்குகளும், காரணமாகின்றன. உலகெங்கிலுமே, பல்வேறு பாலூட்டி விலங்குகள், பறவைகள் போன்றவை தாவரங்களில் உணவீட்டம் அல்லது மரங்களின் மீது நடமாடும் பொழுது மலர்களில் ஆண் இன செல்கள் மகரந்தம், பெண் இன, அண்ட செல்களில் சேரும் மகரந்த சேர்க்கை நடைபெறுகிறது.

ஆனால் கடந்த பத்தாண்டுகளுக்கு மேல் இத்தகைய மகரந்த சேர்க்கையாளர்களாகிய, தேனிக்கள், பூச்சியினங்கள், பறவைகள், விலங்குகள் எண்ணிக்கை, உலகெங்கிலும் குறைந்து வருவதாக, உயிரியியல் அறிஞர்கள், தாவரவியல் வல்லுநர்கள் தெரிவித்து வருகின்றனர். மகரந்த சேர்க்கையாளர் எண்ணிக்கை குறைவதுபயிர் தாவரங்களின்,அறுவடை மகசூலின் அளவு,,தரத்தினயும் குறைவதற்கு காரணங்கள் ஆகிவிட்டது. மேலும் மகரந்த சேர்க்கையாளர்கள் அழிவை நோக்கி செல்கின்ற நிலை உள்ளது. இத்தனைப்பற்றிய உண்மையான அக்கறை நாம் கொள்ளாவிட்டால் பல மரங்கள் "வாழும் தொல் படிவங்கள் "(Living Fossills)ஆகிவிடும் ஆபத்து உள்ளதாக தாவர ஆய்வாளர்கள் கூறுகின்றனர். விவசாயம் இப்பிரச்சினையால் அதிகம் பாதிக்கப்படும், அதனால் எதிர் காலத்தில் உலக நாடுகளில், பயிர் மகசூல் குறைவு வரும். வறட்சி, உணவு பஞ்சம் ஏற்படும் நிலை உண்டாகும்.



அமெரிக்காவின் கிழக்கு காடுகளில் பாசேன்ஜர் புறா (Passenger Pigeon ) என்ற பறவை இனம் முற்றிலும் அழிந்ததால், அக்காடுகளில், குறிப்பிட்ட தாவரங்களுக்கான மகரந்த சேர்க்கை, விதை பரவல் முற்றிலும் நின்று போய், தாவரங்கள் அழிநிலைக்கு சென்று விட்டது. நியூஸிலாந்து நாட்டில் உள்நாட்டு பறவைகள், மகரந்த சேர்க்கையாளர்கள் அழிந்துவிட்டதால், கிளாக்ஸினியா தாவரங்களின் ஆரஞ்சு நிற மலர்கள் மகாரந்த சேர்க்கை நடைபெற இயலவில்லை. வேறு சில பறவைகளான தையல் பறவை, மணி பறவை (Stitch Bird, Bell Bird)போன்றவற்றின் நீண்ட அலகுகள், செயல்பாடுக்கு ஏற்றதாக அமையவில்லை.இவ்வாறு இயற்கை குறிப்பிட்ட பறவை, பூச்சி, தேனி ஆகியவற்றிற்கு அழகாக ஒருங்கிணைப்புடன் ஏற்ற தாவரங்களை, மலர்களை படைத்துள்ள விந்தை, அதிசயம் ஆகும்.



முக்கியமாக விவசாயம் நமது நாட்டின் முதுகெலும்பு என்று உரக்க பேசி உரையாடல் செய்து வந்தாலும், மகரந்த சேர்க்கையாளர் மேலாண்மை பிரச்சனை தொடர்பாக பெரும்பாலும் மக்கள் அறியவில்லை.. ஏனெனில், இந்தியாவில், காதி, கிராம தொழில் ஆணையம் இது பற்றிய ஆய்வு நிலையம் அமைத்துள்ளது!ஆனால் விவசாய அமைச்சகம் முக்கியத்துவம் தரவில்லை என்பது வேதனை!மற்ற வளரும் நாடுகளான சீனா, அர்ஜன்டினா, மெக்ஸிக்கோ போன்ற நாடுகளில் தேனி வளர்ப்பு முக்கியத்துவம் அதிகம் தரப்பட்டு, அது தொடர்பான உற்பத்தி பொருட்கள் மூலம் அதிகம் லாபம் பெறுகின்றன. அமெரிக்கா போன்ற நாடுகளில் வன மகரந்த சேர்க்கையாளர்கள் இழப்பு நான்கு பில்லியன் டாலர் பண மதிப்பு ஆக கணக்கிடப்ப ட் டுள்ளது.



அந்த நாட்டின், பொருளாதார வல்லுநர் லாரன்ஸ் சவுத் விக், மற்றும் அவரது சகோதரர் பூச்சி மனோதத்துவ அறிஞர் எட்வர்ட் என்பார் "தேனி போன்ற மகரந்த சேர்க்கையாளர் இனம் இவ்வாறே குறைந்தால் அமெரிக்காவில் 50%குறைவாகிவிடும். தென் அமெரிக்காவில் முற்றிலும் அழிந்துவிடும் "என்கிறார். ஆண்டு தோறும் அறுபது பயிரினங்களில் பாதிப்பு ஏற்படலாம்.

1960 ஆம் ஆண்டுகளில் இந்தியாவின் பிரபல செல் மரபியல் விஞ்ஞானி மற்றும் தேனீ பூச்சி வல்லுநர் காலம் சென்ற நி. ஙி. தியோடிகர் என்பார் தேனீ வளர்த்தல் மூலம் இந்திய ரயில்வே துறை க்கு கிடைக்கும் வருமானம், வளத்தினை பெற இயலும் என்று கூறியிருந்தார்.197076 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் விவசாயித்திற்கான தேசிய ஆணையம் ஒவ்வொரு விவசாய பல்கலை கழகம் தங்கள் பூச்சியியல் துறை மூலமாக கட்டாயம் தேனீ வளர்த்தல் பிரிவு தொடங்கி, ஆய்வு, கல்வி, பயிற்சி அளிக்க முயற்சி செய்தது.ஆனால் அவை முறையாக மேற்கொள்ள படவில்லை என்பது கவலை தருகிறது.

உயிரின பல்வகைமை (Biodiversity)யில் பூச்சிகள், மகரந்த சேர்க்கை முக்கியத்துவம் பற்றிய செய்திகள் நம் பொது மக்களிடம் சென்றடையவேண்டும். உணவு உற்பத்தியில் தேனீ, பறவை போன்றவை இல்லாமல் போய் விட்டால் மனித குலம் பெரும் பொருளிழப்பு சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும் என்ற உண்மை அனைவராலும் உணரப்படவேண்டும். அரசும் இதற்கான திட்டங்களுக்கு முன்னுரிமை தர முயல்வது நன்று.

தாவரங்கள், பறவை, பூச்சிகள், விலங்குகள் ஆகியவற்றை, நாம் மனிதர்கள் நம்பி உள்ளோம் என்பதனை, நாம் அறிந்து சிந்தித்து செயல்படுவோமா!!!?

# கலைவாணரின் சிந்தனைகள்!



ஒரு நல்ல நகைச்சுவை எப்படியிருக்கனும்.? என்பதற்கு ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு மாதிரியான விளக்கத்தைக் கொடுத்திருக்காங்க.

அதனால நான் ஒரு வேடிக்கை சொல்றேன். அது மாதிரிச் செய்! அது இன்னும் தமாசா இருக்கும்.. அப்படின்னான். சரி! சொல்லுன்னான் இவன்.

"செருப்பு இரண்டும் அது இருக்கிற இடத்துலேயே இருக்கட்டும்.

உன் சட்டைப் பையிலேயிருந்து ஒரே ஒரு ரூபாய் நாணயத்தை எடுத்து அந்தச் செருப்பு மேலே அதோட குதிப் பகுதியிலே வை. வச்சுட்டு நாம ரெண்டு போரும் அந்த மரத்துக்குப் பின்னாடி மறைஞ்சி நின்னுக்குவோம்." அப்புறம் பார் வேடிக்கையைன்னான். அதே மாதிரி ஒரு ரூபாய் காசை செருப்பு மேலே வச்சிட்டு இவங்க மறைஞ்சு நின்னுக்கிட்டாங்க. கொஞ்ச நேரத்துல அந்த விவசாயி வந்தார்.

கால்லே உள்ள மண்ணைத் தட்டிப்புட்டு செருப்பை மாட்டறதுக்குப் போனார்.

அங்கே இருந்த காசு கண்ணுல பட்டுது.! அவருக்கு ஆச்சிரியமா போச்சு. அதை கையிலே எடுத்துப் பார்க்கிறார்.

நாலு பக்கமும் திரும்பி திரும்பிப் பார்க்கிறார். கடைசியிலே ஆகாயத்தைப் பார்க்கிறார்.

ஆண்டவா.! இது உன்னோட கருணை தான்..

நீ தான் யாரோ புண்ணியவான் மனசுல தருமம் பண்ணற எண்ணத்த உண்டாக்கியிருக்க.!

ஆனா, "கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன்" குடுக்கற விளக்கம் என்ன தெரியுமா.?

நகைச்சுவை அடுத்தவங்களுக்குத் துன்பம் குடுக்காம இருக்கனும். அடுத்தவங்க மனசைப் புண்படுத்தப்படாது. அது தான் சிறந்த நகைச்சுவைங்கிறார். அதுக்கு அவர் ஒரு உதாரணமும் கொடுக்கிறார். ஓர் ஏரி ஓரமா ரெண்டு பையன்கள் நடந்து போய்கிட்டிருக்காங்க.

அதுல ஒருத்தன் பணக்கார வீட்டுப் பையன். இன்னொருத்தன் ஏழை.

இவங்க ரெண்டு பேரும் போய்கிட்டிருக்காங்க.... வழியில ஓர் இடத்துலே ஒரு சோடி செருப்பு இவங்க கண்ணுலே பட்டுது. ஒரு விவசாயி அந்தச் செருப்பை அங்கே விட்டுட்டு பக்கத்துலே இருந்த ஏரியிலே கை, கால் கழுவிக்கிட்டிருந்தார்.

உடனே அந்தப் பணக்காரப் பையனுக்கு ஒரு யோசனை.! அவன் சொன்னான், டேய்.! இப்ப ஒரு வேடிக்கை செய்யலாம்... அந்தச் செருப்பு இரண்டையும் தூக்கி எட்டத்துலே வீசி எறிஞ்சிடுவோம்.

அந்த ஆளு வந்து பார்த்துட்டு செருப்பைத் தேடி அல்லாடுவான்... அங்கேயும் இங்கேயும் ஓடுவான். திரு திருவென முழிப்பான். அதை நாம இரசிக்கலாம். நல்லா தமாசா இருக்கும்.! அப்படின்னான்.

இப்படிச் சொல்லிப்புட்டு அந்தச் செருப்புகளைத் தூக்கப் போனான். "கொஞ்சம் பொறு" ன்னான் அந்த ஏழைப் பையன். ஏன்? ன்னு கேட்டான் இவன். இப்ப அந்த ஏழைப் பையன் சொன்னான்... நீ சொல்றது ஒண்ணும் வேடிக்கை இல்லே. உன்னோட செருப்புத் தெலைஞ்சா உன் அப்பா உடனே உனக்கு வேறே செருப்பு வாங்கிக் கொடுத்துடுவார்!

ஆனா அந்த ஆளுக்கு இந்தச் செருப்பு தொலைஞ்சா வேறே புதுசா வாங்குறதுக்கு வாயையும், வயத்தையும் கட்டி பணத்தைச் சேர்க்க வேண்டியிருக்கும்!

அந்தப் புண்ணியவான் நல்லாயிருக்கனும்.! ன்னு வாழ்த்தி அந்தக் காசைக் கண்ணுல ஒத்திக்கிட்டார்.

மறைஞ்சிருந்து பார்த்திட்டிருந்த ஏழைப் பையன் இப்பச் சொன்னான்...

பார்த்தியா..? உன்னைப் புண்ணியவான்னு வாழ்த்திட்டுப் போறார் அந்த ஆள்.! அவருக்கும் சந்தோசம். உனக்கும் சந்தோசம். உனக்கு ஒரு ரூபாய்ங்கறது பெரிசில்ல. அதனால நமக்குக் கிடைச்சிருக்கிற மகிழ்ச்சி ரொம்ப உயர்வானது.! அப்படின்னான்.

வேடிக்கையும் கிண்டலும் இது மாதிரி அடுத்தவங்களுக்கு இடைஞ்சலா இல்லாம இருக்கனும் என்கிறார் கலைவாணர்.

இன்றைய இளைஞர்களில் ஒரு சிலர் நகைச்சுவை என்றாலே அடுத்தவர்களை கிண்டல் செய்து ரசிப்பதில் தான் உருவாவது என்ற தவறான கண்ணோட்டத்துடன் இருக்கிறார்கள். குழந்தை பருவத்திலிருந்தே அடுத்தவர்களை கிண்டல் செய்வது, கேலி செய்வது தவறான விஷயம் என்று பெற்றோர்கள் குழந்தைகளுக்கு சொல்லித் தருவது மிக முக்கியமான ஒன்று. இது போன்ற நல்ல விஷயங்களைக் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுங்கள்.. பெரியவர்களானதும் யார் மனதையும் கண்டிப்பாக அவர்கள் புண்படுத்த மாட்டார்கள்.

**– ஆர்.குணசேகரன்**

# குழந்தையை காப்பாற்றிய பொம்மை யானை!



கதையல்ல உண்மை! பொதுவாக நீதிமன்றங்களில் யாரை பெயர் சொல்லி அழைக்கிறார்களோ அவர்கள்தான் உள்ளே போவார்கள்.

ஆனால் அன்றைக்கோ வாய்தாவுக்கு வந்திருந்த அனைவருமே கும்பலாக நீதிமன்றத்திற்குள் குழுமியிருந்தார்கள். நானும் ஒரு வாய்தாவுக்கு ஆஜராகத்தான் போயிருந்தேன்.

உள்ளே கூட்டத்தோடு கூட்டமாக எட்டிப்பார்த்தேன். இது சில வருடங்களுக்கு முன்னால் நடந்த சம்பவம்.

மதுரையில் ஒரு பெண்ணை ஒரு இளைஞன் கேலி பண்ணுகிறான். அந்தப் பெண்ணின் அக்காள் மாப்பிள்ளை அந்தப் பையனை கண்டிக்கிறார்.

பையனின் மனசில் வன்மம் குடியேறி பழிவாங்கும் வெறியாக மாறுகிறது.

தன்னைக் கண்டித்தவரின் இரண்டு வயசு பெண் குழந்தையை கடத்துகிறான்.



மதுரையிலிருந்து திருநெல்வேலிக்கு குழந்தையுடன் வந்து ஊர் சுற்றுகிறான். குழந்தை தொடர்ந்து அழத் தொடங்குகிறது. ஒரு பெரிய யானைப் பொம்மையை வாங்கிக் கொடுக்கிறான்.

ஆனாலும் குழந்தையின் அழுகை நிற்கவில்லை.

நகரத்தை விட்டு தனியே இருக்கும் ஒரு கோயிலுக்குப் போய் சேரும்போது சாயங்காலமாகிவிடுகிறது.

அந்தக் கோயிலை ஒட்டியுள்ள கிணற்றில் குழந்தையை வீசிவிட்டு தப்பிக்கிறான். பொழுதடைய கோவிலைச் சாத்த குருக்கள் வரும்போது குழந்தையின் முனங்கல் கிணற்றுக்குள்ளிருந்து கேட்க குருக்கள் எட்டிப்பார்க்கிறார்.

குழந்தை யானைப் பொம்மையை இறுக்கிப் பிடித்தபடி தண்ணீரில் மிதந்து கொண்டிருக்கிறது.

பொதுமக்கள் சேர்ந்து குழந்தையை காப்பாற்றுகிறார்கள்.

போலீஸ் வசம் ஒப்படைக்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகிறது. ஒரு மணி நேரத்தில் காவல்துறை பெற்றோரைக் கண்டுபிடிக்கிறது.

குழந்தையைக் காணவில்லை என்று யாராவது புகார் கொடுத்து இருக்கிறார்களா என்று தமிழ்நாடு முழுவதும் உள்ள காவல் நிலையங்களில் விசாரித்து ஒரே மணிநேரத்தில் நெல்லை போலீஸ் மதுரையில் இருக்கும் பெற்றோரை கண்டுபிடிக்கிறார்கள். இரவோடு இரவாக பெற்றோர்கள் நெல்லை வந்து சேர்கிறார்கள். அடுத்த நிமிஷமே குற்றவாளியை கைது செய்கிறது நெல்லை காவல்துறை.

காலையில் அந்தக் குழந்தையை நீதிமன்றத்தில் ஒப்படைத்து அப்புறமாக சட்டரீதியான நடவடிக்கைக்குப் பின் குழந்தையை பெற்றோரிடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சியைப் பார்க்கவே அந்தக் கூட்டம்.

தன்னைக் காப்பாற்றிய அந்த யானைப் பொம்மையை இடுக்கிப் பிடித்தபடியே குழந்தையை ஒரு பெண்காவலர் கொண்டுவந்தார். அதைப் பார்த்ததும் அந்தத் தாய் அழுத அழுகை அனைவரின் கண்களும் பனித்தன. தெய்வீகக் குழந்தை என்றார் நீதிபதி.

எருமை வாகனத்தில் வந்து குழந்தையின் உயிரைப் பறிக்க முயன்ற எமன் தோற்றுப் போனான். காரணம் குழந்தை யானையிடமல்லவா இருக்கிறது.

யானையை ஜெயிக்க எருமையால் முடியுமா?

**கிளைமாக்ஸ்** : வழக்கமாக அந்தக் கோவிலைச் சாத்திப் பூட்ட வருகிற குருக்களுக்கு இரண்டு காதுகளும் செவிடாம்.

அன்றைய தினம் திடீர் உடல்நலக் கோளாறினால் தன்னுடைய மருமகனை மாற்றாக அனுப்பியிருக்கிறார். அந்த காதுகேளாத குருக்கள் அன்றைக்கு வந்திருந்தால் குழந்தையின் முனங்கல் ஒலி கேட்டிருக்காது. குழந்தை இரவு முழுக்க தண்ணீரில் மிதந்து விரைத்து இறந்திருக்கும்.



புரிந்துகொள்ளுங்கள்! இதற்குப் பெயர்தான் கடவுள் என்பது. குழந்தையை காப்பாற்றிய பொம்மை யானை!

*- நாராயணசாமி*

# ஒளிப்ப யோசி!

கண் பார்வை இல்லாத சிறுவன் ஒருவன் வீதியில் இருக்கும் ஒரு மாடிப் படிக்கட்டில் அமர்ந்துக் கொண்டு பிச்சை எடுக்கிறான். அவன் அருகே " நான் குருடன், உதவுங்கள் " என்ற வாசகம் எழுதப்பட்ட பலகை ஒன்றும் காசு போடுவதற்கான பாத்திரம் ஒன்றும் இருக்கிறது.

அவ்வழியே செல்லும் யாரும் அவனுக்கு பெரிதாக உதவியதாக தெரியவில்லை. பாத்திரத்தில் சில்லறைகள் விழுந்தபாடும் இல்லை. அந்த வழியை கடந்த ஆண் ஒருவன், சிறுவனுக்கு உதவினான்.

பாக்கெட்டில் இருந்து சில்லரைகள் எடுத்து பாத்திரத்தில் போட்டான்.

பின், அருகில் இருந்த பலகையைப் பார்த்தான். இரண்டு நிமிடங்கள் சிந்தித்து விட்டு, பலகையை எடுத்து அதில் இருந்த வாசகத்தை மாற்றினான்.

அவன் சென்ற சிறிது நேரத்திலேயே பாத்திரம் சில்லரைகளால் நிரம்பத் தொடங்கியது. சிறுவனுக்கோ ஆச்சரியம் தாங்க முடியவில்லை.

வாசகத்தை மாற்றி அமைத்தவர், ஏதேனும் மாற்றம் உண்டா? என்றுப் பார்க்க மீண்டும் அவ்விடத்திற்கு வந்தார். அவர் எதிர் பார்த்தது போலவே பாத்திரம் சில்லரைகளால் நிரம்பி இருந்தது.

சிறுவன் அவரின் கால் தடத்தால் வந்த ஓசையை வைத்து அவரைக் கண்டு கொண்டான். நீங்கள் தானே முன்பு வந்து இந்த பலகையை எடுத்து மாற்றினீர்கள். என்ன எழுதி இருந்தீர்கள். எப்படி இப்போது நிறைய பேர் உதவி இருக்கிறார்கள் என்றான்.

அந்த இரண்டாம் வாசகம் தான் என்ன? எதனால் இம்முறை நிறையப் பேர் பிச்சை இட்டனர்.

இரண்டாம் வாசகத்தில் " இன்று மிகவும் அழகான நாள், அதை என்னால் பார்க்க முடியல்லை" என்று இருந்தது.

இரண்டு வாசகங்களுமே சிறுவன் குருடன் என்பதைத் தான் குறிப்பிடுகின்றன.

ஆனால், முதல் வாசகம் சிறுவன் பார்வை



இல்லாதவன் என்று மட்டுமே சொல்கிறது.

இரண்டாம் வாசகம் நம் அனைவருக்கும் பார்வை இருப்பதை நினைவு படுத்துகிறது.

அவனிடம் இல்லாத ஒன்று நம்மிடம் இருப்பதை கண்டதும் மகிழ்ச்சியில் நிறைய உள்ளங்கள் அவனுக்கு உதவியது.

உங்களுக்கு எது கொடுக்கப் பட்டிருக்கிறதோ அதற்கு முதலில் நன்றி சொல்லுங்கள்.

வாழ்க்கை உங்களுக்கு அழுவதற்கு 100 காரணங்கள் கொடுத்தால், என்னிடம் சிரிப்பதற்கு 1000காரணங்கள் இருக்கிறது என்றுக் காட்டுங்கள்.

எதைச் சொன்னாலும் மற்றவர் மனம் மகிழும் படிச் சொல்லுங்கள்

எதையும் நேர்மறையாய் எதிர் கொள்ளுங்கள்.

மாற்றிச் சிந்தியுங்கள்.



உங்கள் வாழ்க்கை அழகாகும்.

வாழ்வில் மாற்றங்கள் என்றென்றும் மாறாதது.

நல்ல மாற்றங்களுடன் நலமாக வாழ்வோம்.

**– எம்.கிருஷ்ணன், தொழிலதிபர்**

# எண்ணுவது உயர்வு

கிராம் அளவு மூளை அதில்
கிரகத்தை மாற்றும் கலை
தூரம் என்ன தூரம் நீ
தொடுவததெல்லாம் வைரம்

வானம் என்ன வானம்
தொட்டு மடிப்போம்
வங்கக் கடலோரம்
தங்கம் விளைப்போம்

வர மறுக்கும் நதியை
வளைத்து இழுப்போம்
பஞ்சமினி இல்லையென்று
நெஞ்சை நிமிர்த்துவோம்

கையூட்டு கரங்களுக்கு
விலங்கு பூட்டுவோம்
களியூட்டி கறைகளுக்கு
இரங்கல் எழுதுவோம்

சூரியனை கட்டி வைத்து
சுட்டு மகிழ்வோம்
புயலினை நீட்டிமடித்து
பட்டம் விடுவோம்

நாளை வரும் காலையை
தட்டி எழுப்புவோம்
நகமென நஞ்சினை
வெட்டி முறிப்போம்

தமிழள்ளி தரணியெங்கும்
நாவில் வீசுவோம்
தமிழ் பாட்டே தாலாட்டாய்
உலகை மாற்றுவோம்

கனவுக்கு காட்சியமைத்து
சொர்க்கம் திறப்போம்
கண்ணீரை ஏவுகணையில்
ஏற்றித் தொலைப்போம்

– சுபத்ரா திவாகரன்



# எதுவும் நன்றே!

காமம் என்பது முடிந்துவிடும்!
காதல் என்பது முடியாது!
ஆசை என்பது தீர்ந்து விடும்!
அன்பு என்பது
தீராதது! தீவிரமானது!
மணம் என்பது
மாறுவது!
நல்மனம் மாறக்கூடாதது!
உதவி என்பது
செய்யக்கூடியது!
தூற்றுதல் என்பது
செய்யக்கூடாதது!
சினம் என்பது
வேண்டிய இடத்தில் வரவேண்டிய ஒன்று!
நல்குணம் என்பது
இன்றியமையாத ஒன்று!
கவனம் வேண்டிய ஒன்று!



வேடிக்கை வேண்டாத ஒன்று!
பொதுநலம் என்றும் வேண்டிய ஒன்று!
தன்னலமும் தக்க நேரத்தில் வேண்டிய ஒன்று!
பணம் என்பது
நன்மைக்கும் தீமைக்கும் பயன்படும் உண்மை !
பணமே தான் வாழ்க்கை என்பது
பொய்மை!
தன்மானம் மற்றும் தனக்கே உரிய சில இன்றியமையாதக் குறிப்பிட்ட உடைமைகள் என்பது பிறருக்குக் காட்டக் கூடாதது! மற்றும் விட்டு கொடுக்க கூடாதது!
வாழ்ந்து கொண்டே துன்பத்தில் துடிப்பது
தான் இறப்பு !
வாழ்க்கை முடிந்த பிறகு உடலில் உயிர்நீங்கி உலகத் துன்பங்களை
விட்டு இறப்பு என்னும் ஆழ்ந்த உறக்கத்தில் ஐக்கியம் ஆகிவிட்டால்
அது மரணமில்லை,விடுதலை!

– பெ.விண்ணக வேளாங்கன்னி வின்சி

# அர்த்தமுள்ள அவ்வையார் பாடல்!



மானம் உள்ள மனிதருக்கு “அவ்வை” சொன்னது; அதில் அர்த்தம் உள்ளது.

ஒரு முறை சோழ மன்னன் தன் அவை புலவர்களை அழைத்து நாளை காலை விடியும் போது நாலு கோடி பாடல்களை பாட வேண்டும் என்று கூறுறினார்.ஒரே நாளில் நாலுக் கோடி ாடல்களை எப்படி பாடுவது என்று செய்வதறியாமல் புலம்பிக் கொண்டிருந்தனர்.அப்போது அவ்வழியாக வந்த அவ்வையார் என்ன விசயம் என்பதை கேட்டறிந்தார். இவ்வளவு தான் விசயமா என்று மேற்கண்ட பாடலை பாடி புலவர்களிடம் கொடுத்தார்.

அவர்களும் அடுத்த நாள் காலையில் அந்த பாடலை பாடி மேலும் இது அவ்வையார் எழுதிய பாடல் என்பதையும் கூறினர்.இப்பாடலில் கோடி என்பது ஒரு கோடி பொன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பாடலில் ஒவ்வொன்றும் ஒரு கோடி பொன்னுக்கு இணையானவை என்று நான்கு செயல்களை ஔவையார் குறிப்பிட்டுள்ளார்.

மகிழ்ச்சியடைந்த மன்னன் அவ்வையாரை அழைத்து பரிசுகளை வழங்கினார்.

அந்த பாடல்

மதியாதார் முற்றம் மதித்தொரு கால்சென்று

மிதியாமை கோடி பெறும்;

உண்ணீர் உண்ணீர் என்று உபசரியார் தம்மனையில்

உண்ணாமை கோடி பெறும்;



கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு

கூடுதல் கோடி பெறும்;

கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடைநாக்

கோடாமை கோடி பெறும்

அந்த பாடலின் விளக்கம்

1. நல்ல பண்புகளை மதித்து நடக்காதவரின் வீட்டின் முன்பகுதியைக் கூட மிதிக்காமல் இருப்பது, செல்லாமல் இருப்பது கோடி பொன்னுக்கு இணையானது ஆகும். (நம்மை மதிக்காதவரின் வீட்டுக்குச் செல்லாமல் இருப்பது கோடி பொன்னுக்கு இணையானது என்றும் பொருள் கூறுவார்கள் அதாவது மதியாதார் தலைவாசல் மிதியாதே !)


2. உண்ணுமாறு விரும்பிக் கேட்டுக் கொள்ளாதவரின் வீட்டில் உண்ணாமல் இருப்பது கோடி பொன்னுக்கு இணையானது ஆகும்.

3. கோடி பொன்னைக் கொடுத்தாவது நல்ல குடும்பத்தில் பிறந்தவர்களுடன் சேர்ந்து வாழ்வது கோடி பொன்னுக்கு இணையானது ஆகும்.

4. பலகோடி பொன் கிடைப்பதாக இருந்தாலும் சொன்ன சொல்லிலிருந்து தவறாமல் வாழ்வது கோடி பொன்னுக்கு இணையானது ஆகும்.

–ஆர்.முரளி

# நம்பிக்கை நமக்குள்ளே!



ஒருமுறை எனது நண்பர் ஒருவர் தனது அறையில் தூங்கபோனார் அப்போது மின்வெட்டு காலம் அன்று வீட்டில் மின்சாரம் இல்லை.

அது ஒரு கோடை காலம் ஒரே புழுக்கமுங்க. நண்பருக்கு தூக்கம் போச்சுங்க என்ன செய்யறதுன்னு அவருக்குத் தெரியலையுங்க. கடைசியா அறை சன்னலையாவது திறந்துவைக்கலாம் அப்போதாவது காற்றுவரும்முன்னு முடிவுக்கு வந்தாருங்க. சன்னல் கதவைகளைத் திறந்து வைத்துவிட்டு தூங்கினாருங்க.

காலை எழுந்து பார்த்தப்ப சன்னல் கதவுகள் எல்லாம் மூடியிருந்ததுங்க.

அவருக்கோ ஆச்சரியமுங்க. இரவு சன்னல் கதவுகளைத் திறந்து வைத்தோமே, எப்படி யார் சன்னல் கதவுகளை முடியிருப்பாங்க.

சரி சன்னல் கதவுகள் தான் மூடியிருந்ததே அப்பறம் எப்படி காற்று எங்கிருந்து வந்திருக்கும். அவருக்கு ஒன்றும் புரியலைங்க. ஒரே ஆச்சரியம் வேறு.

சரி அறையில் எதையோ திறந்து வைத்தோமே எதைத் தான் திறந்து வைத்தோம் ? என்று குழப்பிபோனாருங்க . அது கனவாக இருக்குமோ என்று கூட நினைத்தாராம்.

ராத்திரி கண்டிப்பா கதவுகளை திறந்தோம். அப்ப சன்னல் கதவுகளைத் திறக்கவில்லை என்றால் எதைத் திறந்தோம் என்று அறையைச் சுற்றிப் பார்த்தாராம். அப்பத்தான் அவருக்கு புரிந்ததாம் அவர் திறந்தது சன்னல் கதவுகளை இல்லையாம் பீரோவின் கதவுகளையாம்.

அது சரி அப்ப பீரோவில் இருந்து காற்று எப்படி வந்திருக்கும் ?. எல்லாம் அவர் மனதில் ஏற்பட்ட நம்பிக்கை தான் காரணம். காற்று சன்னல் கதவுகளைத் திறந்ததால் வருகிறது என்று நினைத்தார் தூங்கிப்போனார். உண்மையில் காற்று வெளியிலிருந்து வரவில்லை அவர் மனதில் காற்று வருவதாக நினைத்துகொண்டார், காற்று வந்தது. அந்த நம்பிக்கை தான் அவருக்கும் தூக்கத்தைக் கொடுத்தது.

எனவே நம்பிக்கை வைத்தால் எதுவும் சாத்தியமே நம்பிக்கை என்பது உள்மனதில் ஏற்படுகின்ற உள்மன ஆற்றல் .

உங்களுக்குகூட தெரிந்திருக்குமேமருத்துவர்கள் நோயாளிக்கு Distilled Water யை மருந்து எனச் சொல்லி செலுத்துவதுண்டு. நோயாளியும் அம்மருந்து தன்னை குணப்படுத்தியதாக கருதுவதும் உண்டு அதனை ப்லேசிபோ விளைவு எனச் சொல்லுவார்கள்.

எனவே நம்பிக்கை தான் எல்லாவற்றக்கும் அடிப்படை. நம்பிக்கை வையுங்க உங்கள் மீது உங்கள் செயலின் மீது நம்பிக்கை வையுங்க. பிரச்சனையைக் கண்டு ஓடாதீங்க பிரச்சனையை இருந்தாதான் மனிதன். நம்பிக்கைங்கறது எங்கே இருக்குன்னு தேடாதீங்க உங்களுக்குள்ளேதான் இருக்கிறது.

**-ஆர்.வினோத்**





சென்னை வி.ஜி.பி-யில் நடைபெற்ற திரு.EVENT மதன் அவர்களின் மகள் செல்வி.சினேகா அவர்களின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் மித்ரா டைம்ஸ் ஆசிரியர் திரு.எம்.எஸ்.மூர்த்தி அவர்கள் தமது குடும்பத்தினருடன் கலந்துகொண்டு வாழ்த்தினார்.

MITRA TIMES Tam & Eng Monthly Postal Registration No. TN/CH(C)/523/2019-2021
Registered with Registrar of News Paper for India Under No.TNBIL/2015/64028 - Date of publishing 1st week of Every Month
WPP Licence No.(Inland) TN/PMG(CCR)/WPP/609/2019-2021
POSTED AT EGMORE/RMS. PATRIKA CHANNEL. POSTED ON. 1-7 DECEMBER 2021

- மழைக்காலத்தில் மின்சார விளக்குகளை பொருத்துவதற்கு முன்னரும், எடுப்பதற்கு முன்னரும் சுவிட்சை ஆப் செய்ய வேண்டும்.
- உடைந்த சுவிட்சுகளையும், பிளக்குகளையும் உடனே மாற்றி விட வேண்டும்.
- டிவி ஆன்டனா, ஸ்டே ஒயர் மற்றும் கேபிள் டிவி ஒயர்களை வீட்டின் அருகே செல்லும் மேல்நிலை மின்கம்பிகளுக்கு அருகில் கட்ட வேண்டாம்.
- வீட்டுக்கு சரியான நில இணைப்பு (எர்த் பைப்) போட்டு அதை குழந்தைகள், விலங்குகள் தொடாத வகையில் அமைத்து சரியாக பராமரிக்க வேண்டும். மேலும், சுவிட்சுகள், பிளக்குகள் போன்றவை குழந்தைகளுக்கு எட்டாத உயரத்தில் அமைக்க வேண்டும்.
- மின்கம்பத்தின் மீது கொடி கயிறு கட்டி துணி காய வைக்கும் செயலை தவிர்க்க வேண்டும். குளியலறை, கழிப்பறை ஆகிய ஈரமான இடங்களில் சுவிட்சுகளை பொருத்த வேண்டாம்.
- மின் கம்பத்திலோ, அவற்றைத் தாங்கும் கம்பிகளிலோ கால்நடைகளை கட்ட வேண்டாம். மின்கம்பங்களை பந்தல்களாக பயன்படுத்தக் கூடாது.
- மழைக் காலங்களில் மின்மாற்றிகள், மின்கம்பிகள், மின்பகிர்வுப் பெட்டிகள், ஸ்டே ஒயர்கள் ஆகியவற்றின் அருகே செல்ல வேண்டாம்.
- மழை, புயல் காற்றால் அறுந்து விழுந்த மேல்நிலை மின்சார கம்பி அருகில் செல்லக் கூடாது. இதுகுறித்து, மின்வாரிய அலுவலகத்துக்கு உடனடியாக தகவல் கொடுக்க வேண்டும்.
- இடி, மின்னல் ஏற்படும்போது டிவி, மிக்சி, கிரைண்டர், கணினி, தொலைபேசி போன்றவற்றை பயன்படுத்த வேண்டாம்.
- இடி, மின்னல் ஏற்படும்போது மின்கம்பங்கள், மரங்கள், மின்கம்பிகள் ஆகியவற்றின் கீழே நிற்பதை தவிர்க்க வேண்டும்.

ஆதாரம் : தமிழ்நாடு மின்சார வாரியம்


## பொது நலன் கருதி வெளியிடுவோர்:



பெரும் வெள்ளத்திலும் சிறு துளியும் நிற்காத வடிவமைப்பு

99 DELIGHTS

FOR BOOKINGS
CALL : 9003 454 454


Printed, Owned and Published by M.SUNDARAMOORTHY, Printed at SRI PADMALAYA PRINTERS, No.8/18, Manali Salai, Korukupet, Chennai - 600 021. Published at No.602, Suruthi Block, Chitra Avenue, No.9, Choolaimedu High Road, Chennai - 600 094. Editor M.SUNDARAMOORTHY